

கல்கி
இலங்கையில்
35 சதம்
தபால் செலவு தனி
KALKI 21.8.1966
35 காசு



கல்கி

நினைவுத் திரையில்

இந்தியாவின் யுத்த கால சைன்யத்தில் மூன்றில் ஒரு பங்கு மதராஸி வீரர்கள் அடங்கியது என்பது சென்னை மாகாணத்தவருக் கெல்லாம் பெருமை தரும் விஷயமாகும். மதராஸி படை வீரர்களை நாம் பாராட்டுகிறோம். அவர்களைக் கௌரவிப்பதற்கு அறிகுறியாக மதராஸி வீரர்களில் ஒருவரை நமது அட்டைப் படத்தில் போட்டிருக்கிறோம்.

இவர் சீமையில் உள்ள சடன், ஹாரோ முதலிய உயர்தரப் பள்ளிக் கூடங்களில் படித்தவர்; பிறகு ஸான்டர்ஸ்ட் ராணுவக் கலாசாலையில் சேர்ந்து ராணுவப் பயிற்சி பெற்றவர். எல்-ஆல மீன் போரில் இத்தாலியரால் சிறைப் பிடிக்கப் பட்டவர். வெகு காலம் இத்தாலியச் சிறையிலிருந்து விட்டு வெளி வந்தவர். லெப்டினன்ட் கர்னல் பரமசிவம் குமாரமங்கலம் டாக்டர் சுப்பராயனின் மூத்த குமாரர். இவரையும் இவரைப் போலவே போர்க் களத்திலிருந்து திரும்பி வரும் நாலரை லட்சம் மதராஸி வீரர்களையும் வரவேற்கிறோம். நாளைய தினமே இந்தியா சுதந்திரம் அடையலாம். ஆனால் சுதந்திரம் அடைந்த பிறகும் லெப்டினன்ட் கர்னல் குமாரமங்கலம் போன்றவர்களின் சேவை இந்தியாவுக்குத் தேவையாயிருக்குமல்லவா?

கல்கி, செப்டம்பர் 2, 1945

பொருளடக்கம்

பராபவ, ஆவணி 5 ○ ஆகஸ்ட் 21

ஜனநாயகம் பிறக்க வழி — 3
பேராசிரியரின் மணிவிழா — 4
ராஜாஜியின் கருத்துக்கள் — 5
முள்ளும் மலரும் — 10
புது வெய்யில் — 18
பொல்லாத காகங்கள் — 27
யமன்களும் பெரியப்பாவும் — 30
இதோ ஒரு நிறை குடம் — 39
புகழ் பெற்ற பிட் வைரம் — 41
கோடியில் ஒருவர் — 44
சிவனருட் செல்வர் — 50
இட்டிலிக்குச் சாம்பார்! — 57
மலேசிய மாநாடு — 58
வெற்றித் திருநகர் — 66
அரசியல் நிருபரின் கதை — 74
வட்ட மேஜை — 80

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே



ரூபாயைக்கொலை செய்த
தற்காக தேடப்
படும் நபர்!
எனக்கு
வோட்டு
அளியுங்கள்
PK

தமிழ்த்திருநாடு தன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

மலர் 26 ● இதழ் 3



ஜனநாயகம் பிறக்க வழி

நாட்டின் அதிகாரப்பொறுப்பை ஏற்பவர்கள் நல்ல விஷய ஞானமுள்ளவர்களாகவும், வரப் போகும் விளைவுகளை முன்பே உணர்ந்தவர்களாகவும், விவேகிகளாகவும், தீரர்களாகவும் இருந்து தேச நலனுக்குரிய கொள்கைகளை அமுல் செய்வார்கள் என்ற நம்பிக்கையின்மீதே மக்கள் தங்கள் வாக்கைப் போட்டு ஆதரவு தருகிறார்கள். அமெரிக்க ஜனாதிபதி போல் ஆட்சிப் பொறுப்பைப் பெருமளவுக்குப் பெற்ற ஒரு தனி மனிதராயினும் சரி, அல்லது இந்தியாவில் உள்ளது போல் ஒரு கட்சியின் அரசாங்கம் நடப்பினும் சரி, மக்களது வோட்டின் இலட்சியம் நாட்டு நலன்தான்.

காங்கிரஸைப் பற்றி மக்களின் நம்பிக்கை எவ்வளவு உயர்ந்ததாக இருப்பினும், அதன் தலைமை சரியானதா என்று சோதித்துப் பார்க்கும் உரைகல் எதுவெனில், நாட்டுச் சம்பவங்கள் போகிற போக்கேயாகும். அது நாட்டின் நிர்வாகத்துக்குத் தலைமை தாங்கத் தகுதி பெற்றிருக்கிறதா என்பதற்குத் தேர்தல் நடத்திப் பார்க்க வேண்டியதில்லை. உலைப் பானையில் நிகழ்ச்சிகள் எப்படிக் கொந்தளித்துக் கொண்டிருக்கின்றன என்று பார்த்தாலே போதும். உலைப் பானைக்குள் எட்டிப் பார்த்தால், தலைமை வகிப்பதில் காங்கிரஸ் படு தோல்வி அடைந்து விட்டது என்பதைத் தெள்ளத் தெளியக் காண்போம். மக்களின் வறுமைக்குக் காரணம் சர்க்காரின் கொள்கைகளே; விலைவாசி உயர்வுக்குக் காரணம் வரிகளே என்றெல்லாம் வாக்காளர்கள் புரிந்து கொள்வராயின் இந்தத் தலைமையை இனி ஒருபோதும் நீடிக்க விடமாட்டார்கள். ஆனால் பொதுவில் இன்னமும் பலர் மக்களின் அவல நிலைக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கும் உள்ள தொடர்பைக் காணாமையால்தான் 'காங்கிரஸும் சர்க்காரும் ஒன்றே' என்ற மாய வாதத்தை மட்டும் நம்பித் தங்கள் வாக்குரிமையைத் தவறாகப் பிரயோகிக்கிறார்கள். சம்பவங்கள் கூறும் உண்மையை ஏற்றுத் தங்கள் தோல்வியைக் காங்கிரஸார் ஒப்புக் கொள்வதில்லை. இது காரணமாகவே, எதிர்காலம் நல்லபடி உருவாக வேண்டும் என்ற நோக்கத்துடன் சர்க்கார் நீண்டகாலத்துக்குரிய கொள்கைகளையும் வகுத்துக் கொள்வதில்லை. நீண்டகால நோக்கமுடைய கொள்கையின் அடிப்படையில் அவ்வப்போது செய்ய வேண்டிய அலுவல்களுக்குரிய முடிவுகளை எடுக்காமல், அவ்வப்போது மக்களை ஏமாற்றுகிற எண்ணத்தில் அன்றாட அலுவல்களை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனால் அவ்வப்போது நடைபெறும் அலுவல்களை ஒட்டியே நீண்டகாலக் கொள்கை அமைகிறது. இது தலைகீழ்ப் பாடம். இப்படி அமையும் கொள்கையை உண்மையில் ஒருகொள்கையாகவே கருதுவதற்கில்லை.

அவ்வப்போது மக்களைக் கவர்வதை மட்டுமே சர்க்கார் கவனிப்பதுதான் நமது தங்கக் கையிருப்பு குறைந்ததற்கும், அந்நியக் கடன்கள் பெருகியதற்கும், ரூபாயின் மதிப்பு விழுந்ததற்கும் காரணம். நீண்ட கால நோக்கத்துடன் செயலாற்றியிருந்தால் இந்த உற்பாதங்கள் ஏற்பட்டிரா. சீனப் படையெடுப்பு, பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு, மழையின்மை ஆகிய எதிர்பாராத சூழ்நிலைகளே ரூபாயின் மதிப்புக் குறைப்புக்குக் காரணமேயன்றி, சர்க்கார் கொள்கையின் தோல்வி காரணம் அல்ல என்று பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தியவர்கள் மக்கள் சபையில் பேசியிருப்பது பொருந்தாது. சென்ற சில ஆண்டுகளில் படையெடுப்பும் பஞ்சமும் இல்லாவிடினும் கூட, நீண்ட நாளாகச் சர்க்கார் போட்டுவரும் ஐந்தாண்டுத் திட்டங்களே நாட்டுப் பொருளாதாரத்தைப் பாழாக்கித்தான் இருக்கும். 'எங்கள் கொள்கையில் குறையில்லை' என்று கூறி, வெளிக் காரணங்களைக் காட்டி மக்களை மயக்கு

வது தகாது. திட்டங்களை வெட்டியே ஆக வேண்டும். ஆனால் பிரதமரோ 23000 கோடி ரூபாய்த் திட்டம் நம் நாட்டின் பலவீனமான நிலையிலும் சாத்தியமே என்று பிடிவாதமாக இருக்கிறார். அடுத்த ஐந்தாண்டுகளில் இவ்வளவு பெரும் தொகை செலவிடப்படுமாயின் பண வீக்கமும் விலைவாசி உயர்வும் எப்படி அதிகரிக்காமலிருக்கும்? பொருள்களின் விலையும், இதையொட்டி ஊதியங்களும் நாள்தோறும் உயரும். ஐந்தாண்டுத் திட்டத்தைச் சேர்ந்த இனங்களுக்காகவும் இவ்விதத்தில் செலவு மேலும் பெருகும். அதாவது 23000 கோடிக்குத் திட்டமிடுவதால் ஏற்படும் விலைவாசி, ஊதிய உயர்வுகளினால் இத்திட்டத்தை நிறைவேற்ற 23000 கோடியும் போதாமல் போகும். 23000 கோடி என்பது வெறும் காகிதத்தில் உள்ள இலக்கமல்ல. மக்கள் தரும் வரிகளும், விலைகளுமே அதை உற்பத்தி செய்ய வேண்டும். இதை மக்களிடமிருந்து எவ்வளவுகாலம்தான் ஒளித்துவைக்க முடியும்?

குறையை இன்னமும் திருத்திக் கொள்ளாமலிருப்பது கொடுமையெனில், 'இதே குறைகளை நாங்கள் நீடிப்பதற்காக இன்னொரு தவணையும் எங்களைத் தேர்ந்தெடுங்கள்' என்று காங்கிரஸார் கூறுவது அதனினும் கொடுமை. பாகிஸ்தான் மீசைபடக் கூறுகிறது என்றே வைத்துக் கொண்டாலும் கூட விவசாயத்துக்கு மட்டுமே முக்கியத்வம் தந்து, அது சிறிய திட்டம் நீட்டிப் பெரிய பலன் அடைந்திருப்பதை வெளி நாடுகளும் பாராட்டுகின்றன. அநாவசியத் திட்டங்களை விடுத்து, அவசியத்துக்கு மட்டுமே நாம் திட்டமிட்டால்தான் அழிவிலிருந்து தப்ப முடியும். ஆட்சியாளர்களுக்கு இனியும் பச்சாதாபமோ, அடக்கமோ ஏற்படாது எனில், அவர்களை அகற்றி மாற்றுக் கருத்தினரைத்தான் ஆட்சியில் அமர்த்த முற்பட வேண்டும்.

பெரும்பான்மை பலத்தைப் பெற்ற ஹிட்லர் கோஷ்டி ஆரம்பத்தில் அரசியல் சாஸனத்துக்கு இசைவாகப் பிரமாணம் செய்த போதிலும் காலக்கிரமத்தில் எப்படிப் பலாத்கார யதேச்சாதிகாரத்தில் இறங்கியதோ, அதே போக்கைத்தான் காங்கிரஸ் ஆட்சியிலும் பார்க்கிறோம். சர்க்காரின் மூலமாக ஒரு கட்சியானது தேசத்தின் பொருளாதாரம் முழுவதையும் தன் கைக்குள் அடக்கிக் கொள்ளும்போது ஜனநாயகச் சட்ட முறைக்கு இடமே இல்லாமற் போகிறது. நல்ல நோக்கத்துடன் அறிவாளிகள் தொடங்கிய சோஷலிஸம் அழகிய தோற்றமுள்ள ஒரு விஷப் பழமாகி விட்டது என்பதை மக்கள் அறிந்தாலே ஜனநாயக ஆட்சியை மீண்டும் ஏற்படுத்த வழி பிறக்கும்.

பேராசிரியரின் மணிவிழா

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களின் மணி விழாவை வருகிற அக்டோபர் மாதம் சிறப்பான முறையில் கொண்டாடிக் கௌரவிக்கத் திரு ஏ. பி. ஸி. வீரபாகு எம். எல். ஏ. அவர்களின் தலைமையில் செல்வாக்கு மிகுந்த ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது என்பதை அறிந்து மகிழ்கிறோம். இக்குழுவினர் பேராசிரியரின் நாற்பதாண்டு காலப் பணியைத் தக்க முறையில் கௌரவிக்கத் திட்டமிட்டிருக்கின்றனர். ஐந்து லட்ச ரூபாய் வசூலித்து, ''அன்னாரிடம் கீழ்க்கண்ட தமிழ்த் தொண்டுகளை நிறைவேற்றுவதற்கு ஒப்படைக்க முடிவு செய்துள்ளோம்'' என்கின்றனர்.

1. தூத்துக்குடி வ. உ. சி. கல்லூரியில் தமிழ் ஆராய்ச்சிக் கழகம் நிறுவுதல்.
2. இதுகாறும் வெளிவராத பேராசிரியரின் நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதல்.
3. அவர்தம் நூல்களின் மறுபதிப்புகளை வெளியிடல்.
4. ஆண்டுதோறும் வ. உ. சி. கல்லூரியில் கோடை விடுமுறையில் கருத்தரங்கம் நடத்துதல்.

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் அவர்களை அறிந்தவர்கள், மேற்கண்ட பணிகள் அவர் தம் இயல்புக்கும் பண்புக்கும் ஏற்ற வண்ணம் அமைந்துள்ளன என்பதை உணர்வார்கள்; அது மட்டுமின்றி மனமுவந்து வாரி வழங்குவார்கள் என்பதில் ஐயமில்லை.

பேராசிரியர் அ. சீநிவாசராகவன் தமிழ் மக்கள் பெற்ற வரப்பிரசாதம் என்று சொல்ல வேண்டும். அவர்களைப் போல் சிறந்த ஆங்கிலப் புலமையும் தமிழ்ப் புலமையும் வடமொழிப் புலமையும் பெற்றவர்கள் யார்? இது காரணமாக ஏற்படக்கூடிய வித்யா கர்வத்தை வென்று, கல்வி அறிவு அற்றவர்களுடனும் கலந்து பழகி அவர்களுக்கு அறிவுச் சுடர் புகட்டும் பெருமையை வேறு யாரே பெற்றிருக்கிறார்கள்!

கல்வியில் சிறந்த சிலருக்குப் பழையனவற்றிலேயே சிந்தனை செல்லும்; புதிதாகச் சிந்தனை ஓடாது. ஆனால் பேர் இலக்கியங்கள் பயின்று அவற்றின் சிறப்பை எடுத்து இயம்பும் நாவன்மையும் எழுத்து வன்மையும் பெற்ற விமர்சகராக மட்டுமின்றி, புதிது புதிதான சிந்தனைகளைக் கிளறும் நாடகங்களும் கவிதைகளும் புனையும் சிருஷ்டி கர்த்தாவுமாவார் நமது அ. சீ. ரா. 'நாணல்' என்ற புனை பெயரில் எவ்வளவு அரிய கவிதைகள் புனைந்து அளித்துள்ளார்!

பேராசிரியர் அவர்கள், பட்டை தீட்டப் பெற்ற வைரம் போன்றவர்கள்! ஒரு பக்கம் ஆங்கிலப் பேராசிரியர் என்றால் இன்னொரு பக்கம் தமிழ்ப் பேராசிரியர். ஒரு பக்கம் இலக்கிய விமரிசகர் என்றால் இன்னொரு பக்கம் இலக்கிய சிருஷ்டிகர்த்தாவும்தான்.

அவர் பணி தொடர்ந்து நடைபெற்று வர ஐந்து லட்சம் ரூபாயை ரசிகத் தமிழுலகம் மிக சுலபமாக அளித்து விடும் என்று நம்புகிறோம்.


நிதி அனுப்ப வேண்டிய விலாசம் :

திரு ஏ. பி. ஸி. வீரபாகு எம். எல். ஏ.,
(மணிவிழாக் குழுத் தலைவர்)
வ. உ. சி. கல்லூரி, தூத்துக்குடி - 3.

இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கை அதிகாரபூர்வமாக முற்றுப் பெற்றுவிட்டது எனலாம். ஏனெனில் மாஸ்கோவில் ஸ்ரீமதி இந்திரா அம்மையும் கோஸிஜின் அவர்களும் வெளியிட்ட கூட்டறிக்கையில் ''ஏகாதிபத்தியவாதிகள், பிற்போக்காளர்கள்'' ஆகியோர் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 'ஏகாதிபத்தியவாதி'களையும் 'பிற்போக்காளர்'களையும் இந்தியா எதிர்க்கிறது என்று நிச்சயமாகத் தெரிகிறது. மட்டம் தட்டும் முறையில் இவ்வாறு கூறப்பட்டிருப்பவர்கள் யார் என்று அறிய அகராதியைப் புரட்ட வேண்டியதில்லை.

★

பத்தாண்டுகளுக்கு முன்பு மத்திய சர்க்கார் நேரடி வரிகளில் வசூலித்த மொத்தத் தொகை 246 கோடி ரூபாய். இப்போது வசூலிப்பது அதைப் போல் மும்மடங்கு; அதாவது 732 கோடி ரூபாய். இதே பத்தாண்டுகளில் மறைமுக வரிகள் நான்கு



★

மடங்காகியுள்ளன. இன்று இந்திய மக்கள் மொத்தம் கொடுக்கும் வரி 5340 கோடி ரூபாய். சுயராஜ்யம் வந்தபின் ஏழை மக்கள் மறைமுகமாக வரி கொடுக்க இடமிராது என்று கனவு கண்டதால்தான் காந்தி அடிகள் உப்பு சத்தியாக்கிரகம் செய்தார் என்பது இன்று நினைவு வருகிறது.

★

அரசாங்கஅதிகாரி ஒருவரைப் பெயர்குறிப்பிட்டுப் பார்லிமெண்டில் கண்டனம் செய்வது சரியல்ல என்பதை நேர்மையானவர்கள் எளிதில் உணர்வார்கள். ஏனெனில் அவ்விதம் கண்டிக்கப்படும் அதிகாரி பார்லிமெண்டில் தம்மைக் காத்துக் கொண்டு பேச வாய்ப்பில்லை. சர்க்காரைத்தான் கண்டிக்கலாமே யன்றி, அதன் காரியதரிசியான அதிகாரியைப் பற்றி விமரிசிப்பதற்கில்லை. சர்க்கார் தன் தரப்பைக் கூற முடியும்; அல்லது தன் தோல்வியை ஒப்புக் கொள்ளலாம். காரியதரிசியைக் காவு கொடுத்துவிட்டு அரசாங்கம் தப்பித்துக் கொள்வது சரியில்லை.

உருக்கு இலாகா காரியதரிசி ஸ்ரீ பூதலிங்கம் விஷயமாகப் பார்லிமெண்டில் விவாதம் எழுப்பப்பட்டதை இக் காரணத்துக்காகவே மத்திய செகரிட்டேரியட்டின் பல உயர் அதிகாரிகள் ஆட்சேபித்துள்ளனர். 'இவ்விதம் ஓர் அதிகாரியின் நன்னடத்தையைக் கொலை செய்த பின் அவர் சுதந்திரமாகவோ கௌரவமாகவோ பணி புரிவது சாத்தியமல்ல' என்பது அவர்கள் கருத்து.

★

மூன்றும் திட்ட காலத்தில் தேசிய வருமானம் 17 சத விகிதம் உயருமென்று கூறியவர்களுக்கெல்லாம் 'எகனமிக் டைம்ஸி'ன் மதிப்பீடு அதிர்ச்சியூட்டும். 1960-61ல் சராசரி வருமானம் ரூ.293 எனில் 1965-66ல் சராசரி வருமானம் ரூ. 294. அதாவது மூந்நூறில் ஒரு பாகமே உயர்ந்திருக்கிறது. இந்த அற்பமான உயர்வாவும் பயனில்லை என்பது விலைவாசிப் புள்ளி விவரத்திலிருந்து தெரிகிறது. 1960-61ல் மொத்த விலைக் குறியீட்டெண் 120; இது சில மாதங்களுக்கு முன் 180 ஆக உயர்ந்தது. ரூபாய் மதிப்புக் குறைந்தபின் மேலும் உயர்ந்து 186 ஆகியுள்ளது. அதாவது வருமானம் உயராமலே விலைவாசி மட்டும் ஒன்றரை மடங்காக உயர்ந்துள்ளது.

★

தெற்கு வியட்நாமில் சிறுபான்மையாக உள்ள கம்யூனிஸ்ட்டுகள் பலாத்காரமும் அச்சுறுத்தலும் செய்து இவற்றின் மூலம் போட்டி அரசாங்கம் அமைத்திருக்கிறார்கள். கொடுங்கோன்மையில் சிக்கியுள்ள மக்கள் சுதந்திரமாகத் தங்கள் வாக்குரிமைகளைப் பிரயோகித்து அரசாட்சியை மாற்ற வாய்ப்பில்லை. சட்டப்படி அமையாத ஓர் அரசாங்க நிறுவனத்துக்கு மக்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டு வரிகள் தருவதை நாம் அங்கு காண்கிறோம். இவர்கள் எப்படிப் பயமின்றிக் கம்யூனிஸ்டுகளை எதிர்த்து வோட்டுப் போட முடியும்?

எனவே வியட்நாம் பிரச்னையின்போது மக்களின் சுதந்திரத் தேர்தல் மூலம் அரசாட்சியை அமைப்பதாகச் செய்து கொண்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றுவது இன்று சாத்தியமல்ல. இதனால்தான் மக்கள் ஜனநாயக முறையில் தீர்வு காண்பதற்குப் பூர்வாங்கமாகக் கம்யூனிஸ ஆக்கிரமிப்பை முதலில் தடுத்து நிறுத்திச் சமாதானத்தை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா தீர்மானித்தது. ஹோ அவர்கள் எத்தனை ஆண்டுகளாயினும் சளியாமல் போராடுவார் என்று உலகம் எதிர்பார்த்த போதிலும், ஹோ அவர்களுக்கு இவ்வளவு நம்பிக்கை இல்லையென்றே தோன்றுகிறது. நம்பிக்கை கொள்ளக் கூடிய சூழ்நிலை இன்றில்லை. எனினும் உலக நாடுகள் கம்யூனிஸ வடக்கு வியட்நாமை ஆதரிக்காமல் சிறிது காலம் வாயை மூடிக் கொண்டிருந்தால் அடுத்த ஜனவரிக்குள் வியட்நாம் போர் நின்றுவிடும் என்றே நான் எண்ணுகிறேன்.

நகரசபை விசித்திரங்கள்

காங்கிரஸ் அரசாங்கம் நெல்லை நகரசபையைக் கலைக்க உத்தரவிட்ட விஷயம் நீதிமன்றத்தில் இருப்பதால் அதைப் பற்றி இங்கு எதையும் கூறுவது முறையல்ல.

இது ஒருபுறமிருக்க:

ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே பதவியிலிருக்கும் இரண்டு நகரசபைகளின் போக்கைப் பற்றிச் சட்டசபையில் திரு மு. கருணாநிதி அவர்கள் எடுத்துக் காட்டியிருக்கிறார்.

அவர் சொல்லியதன் சாரம்: ராணிப்பேட்டை நகராட்சியில் ஒரு கண்டிராக்ட் விடப்பட்டது. 1500 ரூபாய்க்கு மேற்பட்ட கண்ட்ராக்ட்கள் எல்லாம் டெண்டர் கேட்டு விடப்பட வேண்டும். ஆனால் இங்கே ஒருவருக்கே 12 ஆயிரம் ரூபாய் கண்டிராக்ட் தரப்பட்டுள்ளது. அப்படி ஒருவருக்கே தந்தால் சந்தேகப்படுவார்கள் அல்லவா? ஆகவே, ஒரே ஆளுக்கு ஒரு கட்டடத்தைப் பல பகுதிகளாகப் பிரித்துக் கொடுத்தார்கள்.

மடக்கடைக்கு 1350 ரூபாய்; அதே கட்டடத்தில் இன்னொரு மடக்கடைக்கு 1350 ரூபாய்; மற்றொரு மடக்கடை கட்ட 1350 ரூபாய்; இன்னொரு மடக்கடை கட்ட 1500 ரூபாய்...எப்படியிருக்கிறது கதை!

சேலம் நகரசபை பற்றித் திரு கருணாநிதி கூறியதைப் பார்ப்போம்:

சேலம் நகராட்சித் தலைவர் ராமகிருஷ்ணன் அவர்களின் படத்தைத் திறந்து வைப்பதென்றும் அவர் பெரிலேயே ஒரு மன்றத்தை ஏற்படுத்துவதென்றும் நகரசபையில் தீர்மானம் போட்டார்கள்.

அரசாங்கக் கட்டளை ஒன்றின்படி ஒரு தலைவருடைய படத்தை அவருக்குப் பின்னே வருகிற தலைவர் காலத்தில் வேண்டுமானால் திறந்து வைக்கலாமேயன்றி அவரது ஆட்சிக் காலத்திலேயே கூடாது என்று எடுத்துரைத்தார் தி.மு.க. அங்கத்தினர் திரு மெய்யப்பன். நகராட்சித் தலைவர் இதை ஏற்றுக் கொண்டார். மன்றத்தை வேண்டுமானால் அவர் பெயராலே வைக்கலாம் என்று முடிவு எடுக்கப்பட்டது. தி. மு. க. உறுப்பினர்கள் ஒரு திருத்தப் பிரேரணை கொடுத்தார்கள். லால் பகாதூர் படத்தைத் திறந்து வைக்கலாம் என்பதுதான் அந்தத் திருத்தப் பிரேரணை. அதை சாட்சாத் காங்கிரஸ்காரர்களே தோற்கடித்து விட்டார்கள்!

இதைவிடத் தேசமெங்கிலும் உள்ள காங்கிரஸ்காரர்களுக்கு அவமானத்தை உண்டாக்கும் செயல் வேறு என்ன இருக்க முடியும்?

இது போல் பல விஷயங்களைக் கருணாநிதி அவர்கள் அம்பலப்படுத்தி மகத்தான தொண்டு புரிந்திருக்கிறார்.

ஹரஹர சங்கர

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகளின் விருப்பப்படி "ஹரஹர சங்கர" தொடரை நிறுத்தி வைத்து விட்டோம். இதனால் எண்ணற்ற வாசகர்களுக்கு ஏற்படக்கூடிய ஏமாற்றத்தை நாம் நன்கு உணர முடிந்த போதிலும், ஜகத்குரு அவர்களின் திருவுள்ளத்துக்கு மாறாக நடக்க இயலாததால் இம் முடிவுக்கு வர நேர்ந்திருக்கிறது. வாசகர்கள் நமது இக்கட்டான நிலையை அநுதாபத்துடன் புரிந்து கொண்டு மன்னிக்க வேணுமாகக் கேட்டுக் கொள்கிறோம்.

ஜகத்குரு அவர்களின் ஆசியுடன் ஸ்ரீ ரா. கணபதி விரைவிலேயே எழுதவிருக்கும் தொடரைப் பற்றிய அறிவிப்பை எதிர்ப்புறம் காண்கிறீர்கள். வாசகர்களின் ஏமாற்றத்தை இது ஓரளவுக்குத் தணிக்குமென நம்புகிறோம்.

— ஆசிரியர்

ரா. கணபதி

எழுதும்

காற்றினிலே வரும் கீதம்



கல்கி

செப்டெம்பர்

4

இதழில்

தொடங்குகிறது



பொதுமக்களின் உடைமைகளுக்குப் பாதுகாப்பு

ஸ்டேட் பாங்க் பாதுகாப்பு இருப்பறை லாக்கர்களின் உதவி

இந்தியாவெங்கும் பல லட்சம் மக்கள், ஸ்டேட் பாங்க் பாதுகாப்பு இருப்பறை லாக்கர்களிலே நம்பிக்கையோடு தங்கள் செல்வ உடைமைகளை வைத்துக் கொள்கின்றனர்.

ஸ்டேட் பாங்க், பொதுமக்களின் பாங்கு. மக்களுக்கென உழைக்கும் பாங்கு. மக்களுக்கு உதவும் பாங்கு. ஸ்டேட் பாங்கின் 2000 கிளைகளும், துணையகங்களும் நாடு நெடுகப் பரவிப் பரந்து நிற்கின்றன. பாங்குப் பணியை மக்களிடம் நெருங்கி வரச் செய்கின்றன. மக்களுக்கு மேலும் நன்கு பணிபுரிய உதவுகின்றன!

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

LPE Aiyars. S-141 TAM



1. தலைநகரில் பலவகைகளில் நற்பணியாற்றி வரும் தில்லித் தமிழ்ச் சங்கம் ஆறு லட்சம் ரூபாய் செலவில் தனக்கெனச் சொந்தக் கட்டிடம் ஒன்றைக் கட்டவிருக்கிறது. சங்கத்தின் பணிகளைப் பாராட்டித் தமிழக அரசு ஒரு லட்சம் நன்கொடை அளித்திருக்கிறது. இந்தத் தொகையைத் தமிழக முதலமைச்சர் சங்கத் தலைவர் ஸ்ரீ வேங்கடாசலத்திடம் வழங்குகிறார்.



2. நந்தம்பாக்கத்தில் உள்ள சஸ்திர சிகிச்சை உபகரணத் தொழிற்சாலைக்குச் சென்னை கவர்னர் ஸ்ரீ உஜ்ஜல் சிங் விஜயம் செய்து பார்வையிடுகிறார். அவருடன் பேசிக் கொண்டிருப்பவர் தொழிலக நிர்வாகி ஸ்ரீ எச். ஜி. வி. ரெட்டி.

செய்திப் படங்கள்



3. ஐம்பத்தைந்து வருஷங்களுக்கு மேல் பெண் குலத்துக்கு அளப்பரிய சேவைகள் செய்துள்ள சகோதரி சுப்புலட்சுமியைத் தியாகராயநகர், சாரதா மாதர் சங்கத்தினர் பாராட்டிக் கௌரவித்தனர். இவ்விழாவுக்கு ஸ்ரீமதி மதுரம் கோபாலகிருஷ்ணா தலைமை வகித்தார்.



4. அமெரிக்காவிலுள்ள மியாமியில் நடைபெற்ற 1966 அகில உலக அழகிகள் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற இந்தியப் பெண் மிஸ் யாஸ்மின் டாஜி வாஷிங்டனுக்கு வந்தபோது அவருக்கு இந்தியத் தூதராலயத்தினர் ஒரு வரவேற்பு உபசாரம் நடத்திக் கௌரவித்தார்கள்.

முள்ளும் மலரும்

அத்தியாயம் 3

வள்ளி பார்த்தபோது மலைச்சரிவில் சென்று கொண்டிருந்த டிராலியில் மங்காவின் தாயார் வெள்ளாத்தாள் போகவில்லை. அந்த டிராலி கீழே இறங்க ஆரம்பித்துக் கொஞ்ச தூரம் சென்ற பிறகுதான் அவள் அவசரம் அவசரமாகக் காளியண்ணனின் உடும்புக் கொட்டகையை நோக்கி ஓடி வந்தாள்.

உமாசந்திரன்



வெள்ளி
விழா
பரிசுத்திட்டம்
ரூ 10,000
முதல் பரிசு நாவல்

''இப்ப ஓடி வந்து என்ன பிரயோசனம்....? டிராலி கீழேயிருந்து மேலே திரும்பி வருகிற வரையிலே காத்திருக்க வேண்டியதுதான்'' என்ருன் காளி.

''அட கடவுளே....இன்னும் ஒரு மணி நேரம் காத்திருக்க வேணுமே?'' என்று அங்கலாய்த்தாள் வெள்ளாத்தாள்.

''அதுக்கென்ன செய்யறது? முன்னுலே வந்தவங்க முன்னுலே போக வேண்டியதுதான்'' என்ருன் காளி.



''சரித்தான். இன்னிக்கும் அந்த மேஸ்திரி என்னைத் திட்டத்தான் போகிறான்'' என்று பெருமூச்சுடன் கூறிக் கொண்டே ஒரு பக்கமாக மரத் தடியில் உட்கார்ந்தாள் வெள்ளாத்தாள்.

டிராலி தண்டவாளத்தின் வழியே பள்ளத்தில் இறங்கிச் சென்று கொண்டிருந்தது. உருளைகளில் சுற்றியிருந்த உருக்குக் கயிறு மெதுவாக விடுபட்டுக் கொண்டிருந்தது. உருளைகளைக் கட்டுப் படுத்திக் கயிற்றை இழுத்துப் பிடித்து விடுவிப்பதற்கு உதவியாக அமைந்திருந்த பல் சக்கரங்களையே கவனமாகப் பார்த்துக் கொண்டிருந்தான் காளியண்ணன். அவற்றில் சிறிது பழுது ஏற்பட்டாலும் டிராலி அதளபாதாளத்துக்குப் போய் விடுமே. பல் சக்கரங்களுக்கு உடும்புச் சக்கரங்கள் என்றும் அந்த விஞ்ச் ஷெட்டுக்கு உடும்புக் கொட்டகையென்றும் அவன் வைத்த பெயர்கள் எல்லோருக்கும் பழக்கமாகி விட்டன. அந்தப் பெயர்களைச் சொல்லித்தான் அந்தச் சக்கரங்களையும் 'விஞ்ச் ஷெட்டை'யும் எல்லோரும் குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது.

''ஏ, மங்கா.... நீ இங்கே எங்கே வந்தே?'' என்று வெள்ளாத்தாள் கேட்பது காதில் விழுந்ததும் காளியண்ணன் அந்தச் சரிவில் திரும்பிப் பார்த்தான்.

கட்ட சோளக் கொண்டையைக் கடித்தவாறு மங்கா தாயாரின் அருகில் வந்து நின்றதைக் கண்டதும், சட்டென்று முகத்தைத் திருப்பிக் கொண்டு மீண்டும் பல் சக்கரங்களில் பார்வையைப் பதிய வைத்தான் காளி.

''நீ இன்னும் பவர்ஹவுஸுக்கு எறங்கிப் போகாமே இங்கேயேவா குந்திக்கிட்டிருக்கே?''

''நான் போகாதது இருக்கட்டும். நீ எதுக்கு இங்கே வந்தேன்னுதான் கேக்கறேன்'' என்றாள் தாயார்.

''வூட்டிலே குந்திக்கிட்டு என்ன செய்யணுமாம்?''

''என்ன செய்யறதுன்னு தெரியாமல் இப்படிச் சுத்திக்கிட்டுத் திரிஞ்சாலும் திரிவே. ஆனா உபயோகமா உடம்பு வணங்கிப் பாடுபட மாட்டே, அப்படித் தானே!''

''ஏன் ஆத்தா, நம்ம ரெண்டு பேர் வவுத்துக்கும் சேர்த்துத்தான் நீ பாடு படறியே, நான் வேறே எதுக்குப் பாடு படணும்?'' என்று சிரித்தாள் மங்கா.

''இப்ப இப்படிச் சொல்லுவே. தலையைக் காலே வலிச்சு நான் படுக்கையிலே படுத்தால் அப்பத் தெரியும்'' என்று வெறுத்தாற்போல் கூறினாள் வெள்ளாத்தாள்.

''என்ன நினைச்சுக்கிட்டிருக்கேம்மா! மங்கா மனசு வச்சா பத்துப் பேரைக் காப்பாத்த முடியும். தெரியுமா?''

''சரி சரி, எதிர்த்து வாயாடி என் எரிச்சலைக் கௌப்பாதே'' என்று கூறிய தாயார் சட்டென்று அங்கிருந்து எழுந்து சென்றாள்.

விஞ்ச் விசையின் 'உங்ய்' என்ற சத்தத்தையும் மீறி அவர்கள் பேசிக் கொண்டிருந்த வார்த்தைகள் காளியண்ணனின் காதுகளில் ஒலித்துக் கொண்டுதான் இருந்தன. ஆனால் அவன் அந்தப் பக்கம் திரும்பாமலேயே எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தான். திரும்பினால் மறுகணமே மங்கா அவனைப் பார்த்துச் சிரிப்பாள். அல்லது அவனருகே ஓடி வந்து அவனுடைய கோபத்தைக் கிளப்பும் விதத்தில் ஏதாவது பேசுவாள் என்று அவனுக்குத் தெரியும். வேண்டுமென்றே அவள் அவனை ''வள்ளியண்ணே'', ''வள்ளியண்ணே'' என்று அழைத்து அவன், ஆத்திரத்தைக் கிளப்புவாள். வள்ளியின் அண்ணன் என்பதற்காக அப்படித்தான் அழைக்க வேண்டுமா, என்ன? அந்த அழைப்பே அவனுக்குக் கோபத்தை மூட்டுவதாக இருக்கும். அதைத் தவிர்க்கவே அவன் விரும்பினான். ஆகவே, வெள்ளாத்தாள் எழுந்து செல்லும் வரை அவன் அந்தத் திசையில் திரும்பவில்லை. அதன் பிறகு அவன் திரும்பிப் பார்த்த போது சோளக் கொண்டையைக் கடித்துக் கொண்டே மங்கா பாறைகளில் துள்ளிக் குதித்தவாறு நீர்த்தேக்கத்தின் மதகுக் கரைப் பக்கமாகச் சென்று கொண்டிருந்தாள்.

டிராலி பவர்ஹவுஸ் நிலையை எட்டி விட்டதை அறிவிக்கும் மணி அடித்தது. விசையை நிறுத்தி விட்டு ஒரு பீடியைப் பற்ற வைத்துக் கொண்டு ஷெட்டுக்கு வெளியே அத்தி மர மேட்டின் மேல் வந்து உட்கார்ந்து கொண்டான் காளியண்ணன். அவன் பீடி குடித்து முடிப்பதற்கும் டிராலி மேலே வரத் தயாராகி விட்டதை அறிவிக்கும் மணியடிப்பதற்கும் சரியாயிருக்கும். டிராலி மேலே வந்த பிறகும் அப்படித்தான். பவர்ஹவுஸ் பகுதியிலிருந்து டிராலியில் வந்த ஆட்கள் இறங்கி, பவர்ஹவுஸ் பகுதிக்குச் செல்ல வேண்டிய வேறு ஆட்கள் டிராலியில் ஏறிக் கொள்வதற்குள் காளியண்ணன் ஒரு பீடியைக் குடித்து முடித்துவிடுவான். தேவையோ, தேவையில்லையோ



இன்று ஒரு வேலையில் இருக்கிறீர்கள் ... நாளை என்ன நேரும் என்பதை ஒருவராலும் கூறமுடியாது. இயன்ற மட்டும் பணத்தைச் சேமியுங்கள்.

பணம் சேமிக்கவும், கரண்ட், ஸேவிங்ஸ், பிக்ஸெட்—ரெக்கரிங் டிபாஸிட்டுகள் ஆகிய கணக்குகள் வைத்துக்கொள்ளவுமான எல்லா வசதிகளையும் வழங்குகிறோம்.

தி யுனைடெட் கமர்ஷியல் பாங்க் லிட்.

ASP/UCO-12/65

தலைமை ஆபீஸ்: கல்கத்தா

அவன் பிடி குடிப்பதற்கும் டிராலி மேலும் கீழும் செல்வதற்கும் ஏதோ நெருங்கிய தொடர்பு இருப்பது போலவே பார்ப்பவர்களுக்குத் தோன்றும்.

உடும்புக் கொட்டகையில் எல்லாச் சமயங்களிலும் தொடர்ந்தாற் போல் வேலை இருக்காது. காலையில் தொழிலாளிகள் பவர்ஹவுஸுக்குச் செல்வதற்கும் மாலையில் அவர்கள் திரும்பி வருவதற்கும்தான் ஐந்தாறு தடவை டிராலி மேலும் கீழும் போய் வர வேண்டியிருக்கும். மற்றச் சமயங்களில் பெரும்பாலும் டிராலிக்கு ஓய்வுதான். எப்போதாவது உதவி என்ஜினீயரோ, சூபர்வைஸரோ பவர்ஹவுஸுக்கு அவசரமாகத் தேவைப்படும் சாமான்கள் எதையாவது எடுத்துச் செல்வதற்கு டிராலி தேவைப்படும். அல்லது பெரிய எஞ்சினீயர் திடீரென்று நினைத்துக் கொண்டு பவர்ஹவுஸ் வேலையை மேற்பார்த்து வருவதற்காகப் புறப்படுவார். ஆனால் அந்த மாதிரி சவாரிகள் நாள் முழுதும் பார்த்தாலும் இரண்டு மூன்றுக்கு மேல் தேறுது.

இன்று காளியண்ணனுக்கு வழக்கத்தைவிட அதிக ஓய்வு. வெள்ளாத்தாளும் வேறு சில தொழிலாளிகளும் புறப்பட்டுச் சென்ற பிறகு ஒரே ஒரு தடவைதான் தொழிலாளர்களுக்காக டிராலி தேவைப்பட்டது. அதன் பிறகு அது கேட்பாரில்லாமல் தொழுவத்துப் பசுவைப் போல் உடும்புக் கொட்டகையில் நின்று கொண்டிருந்தது. காளியண்ணனுக்கு அதைப் பார்த்து எரிச்சல் எரிச்சலாக வந்தது. எவ்வளவு நேரம் தாம் இப்படியே வெட்டியாக உட்கார்ந்திருப்பது! ஓய்வு நேரத்தைப் பயன்படுத்திக் கொண்டு சாப்பாட்டுக்கு வீட்டுக்குப் போய் வரலாமென்றால் அதற்கும் முடியாது. நடுவில் யாராவது அதிகாரிகள் வந்து தொலைத்தால் என்ன செய்வது? வள்ளி சாப்பாடு எடுத்துக் கொண்டு வரும் வரையில் இப்படியே உட்கார்ந்திருக்க வேண்டியது தான்.

ஒவ்வொரு நாளும் தனக்கு வள்ளி சாப்பாடு எடுத்து வரும்படியாக வைத்துக் கொள்ளவில்லை காளியண்ணன். பெரும்பாலான நாட்களில் காலையில் வேலைக்கு வரும் போதே கையோடு ஏதாவது கட்டியெடுத்துக் கொண்டு வந்து விடுவான். கடுசோறு என்று அவன் சாப்பிட விரும்புவது இரவு நேரத்தில்தான். வேலை முடிந்து வீடு திரும்பும் நேரத்தில் அஞ்சலைத்தை அவனுக்காக வெந்நீர் போட்டு வைத்திருப்பாள். அலுப்புத் தீர அந்த வெந்நீரில் குளித்ததும் அசுரப் பசியொன்று அவனுக்கு ஏற்படுமே, அந்த வேளையில் அஞ்சலையத்தையின் கை மணத்தோடு கொதிக்கக் கொதிக்கக் கலத்தில் வந்து விழும் சாப்பாட்டுக்கு முன்னால் எந்த விருந்துச் சாப்பாடாவது நிற்க முடியுமா, என்ன?

வாரா வாரம் ஓய்வுநாளில் மதகுக் கரையிலிருந்து பிடித்து வரும் மீன்களை மறுநாள் இரவுச் சாப்பாட்டில் கடுசோற்றோடு சேர்த்து ரசிப்பதைத் தான் அவன் பெரிதும் விரும்புவான். ஆனால் இன்று மாலை நேரத்துக்காக அவன் போட்டிருந்த திட்டம் வேறாயிருந்தது. அன்றிரவு முள்ளி மலையில் இருளர்கள் கூத்து நடத்தப் போகிறார்கள் என்று காலையில்தான் அவனுக்குத் தகவல் கிடைத்தது. மாலையில் ''டூட்டி'' முடிந்ததும் புறப்பட்டால் இருட்டு முற்றுவதற்குள் முள்ளி மலைக்குப் போய்ச் சேர்ந்து விடலாம். கூத்து முடியும் வரை அங்கிருந்துவிட்டு அதிகாலையில் இருட்டோடு புறப்பட்டால் மறு நாள் ''டூட்டி'' நேரத்துக்குச் சரியாகத் திரும்பி வந்துவிடமுடியும். இந்தத் திட்டத்துடன்தான் அவன் பகல் சாப்பாட்டுக்கே மீன் ஆக்கி வள்ளியிடம் கொடுத்தனுப்பும்படி அஞ்சலையத்தையிடம் சொல்லி விட்டு வந்திருந்தான்.

காளியண்ணனின் கைக் கடிகாரத்தில் மணி பதினொன்றுதான் ஆகியிருந்தது. வள்ளி சாப்பாடு எடுத்து வருவதற்கு இன்னும் இரண்டு மணி நேரமாவது பிடிக்கும். அது வரையில் அவனால் எப்படி வெட்டியாய் உட்கார்ந்திருக்க முடியும்? இந்த மாதிரி சந்தர்ப்பங்களுக்காகவே அவன் ஷெட்டிலேயே மண்வெட்டியைத் தயாராய் வைத்திருந்தான். அவ்வப்போது அவன் அந்த மண்வெட்டிக்கு வேலை கொடுத்து வந்ததனால்தான் ஷெட்டைச் சுற்றிலும் அழகான தோட்டம் ஒன்று உருவாகியிருந்தது. இல்லாவிட்டால் காட்டுச் செடிகள்தானே அங்கு புதராக மண்டிக் கிடந்திருக்கும்!

கைக் கடிகாரத்தைக் கழற்றி ஷெட்டின் கைப்பிடிச் சுவரில் வைத்துவிட்டு அவன் மண்வெட்டியை எடுத்துக் கொண்டு தோட்டத்தின் ஒரு பகுதியைக் கொத்த ஆரம்பித்தான். வேறொரு பகுதியில் அவன் போட்டிருந்த தக்காளி, முட்டைக்கோஸ், காரட் போன்ற செடிகள் அப்போது தான் தலை தூக்க ஆரம்பித்திருந்தன. குரோட்டன் செடிகளுக்கும் பஞ்ச

மில்லே. இப்போது கொத்திக் கொண்டிருக்கும் பகுதி நன்ருகக் காய்ந்தபிறகு உரம் போட்டுப் பாத்தி பிடித்து, ஏதாவது சீமைப் புஷ்பச் செடிகளேப் போட்டால் நன்ருக வருமென்று நினேத்துக்கொண்டான் காளியண்ணன்.

உடும்புக் கொட்டகையில் மணி ஒலிப்பது கேட்டது. கீழே பவர்ஹவுஸ் பகுதியிலிருந்து யாரோ மேலே வருவதற்காக டிராலி தேவைப்படுகிறதென்பதை அந்த மணி உணர்த்தியது. தோட்ட வேலேயை அப்படியே போட்டுவிட்டுக் காளி கொட்டகையை நோக்கி ஓடிஞன். உடும்புச் சக்கரங்கள் ஒழுங்காக இருக்கின்றனவா என்று பார்த்துவிட்டு அவன் விசையை அழுத்தியதும் உருளேகளிலிருந்து உருக்குக் கயிறு விடுபட்டு டிராலி மெதுவாகக் கீழே இறங்க ஆரம்பித்தது.

சரிவுப் பகுதியில் இப்போது மேகங்கள் நிரம்பியிருந்தன. டிராலி கொஞ்ச தூரம் சென்றதுமே மேகப் பொதிகளுக்குள் புதைந்து கண்களுக்குத் தெரியாமல் மறைந்து விட்டது. அந்த மலேப் பகுதியின் விசேஷமே அதுதானே. மேகக் கூட்டம் எப்போது அங்கு வந்து அடைக்கலம் புகுமென்று சொல்ல முடியாது. வானம் பளிச்சென்றிருக்கும்போதுகூட அந்த மலே முகடுகளில் மேகக் குழந்தைகள் தவழ்ந்து விளேயாடிக் கொண்டிருக்கும்.

டிராலி கீழே போய்ச் சேர்ந்துவிட்டதைக் குறிக்கும் மணியடிக்கும் வரை விஞ்ச் விசையருகிலேயே கவனமாக நின்ருன் காளியண்ணன். மணியடித்த பிறகு அவன் விசையை நிறுத்திவிட்டு அங்கேயே நின்ருன். கீழே இருப்பவர்கள் புறப்படத் தயாராயிருந்தால் அவர்கள் டிராலியில் ஏறிக் கொண்டதுமே மணி அடிப்பார்கள். உடனே டிராலி மேலே வருவதற்காக விசையை அழுத்தி முடுக்கிவிட அவன் தயாராயிருக்க வேண்டுமல்லவா? ஆனல் ஐந்து நிமிஷங்களாயிற்று, பத்து நிமிஷங்களாயிற்று. மணி அடிப்பதாயில்லே. டிராலியில் ஏதாவது கனமான சாமான்கள் ஏற்றப்படுகின்றனவோ! அல்லது டிராலியில் வரவேண்டியவர் யாருக்காவது பவர்ஹவுஸில் அவசர வேலே குறுக்கிட்டு அதனல் தாமதமாகிறதோ என்னவோ!

மேலும் சில நிமிஷங்கள் அங்கேயே நின்ருன் காளி. அப்போதும் மணியடிக்காதிருக்கவே அங்கேயே நின்று கொண்டிருப்பது வீண் என்று அவனுக்குத் தோன்றிற்று. இயல்பாகவே அவன் கால்கள் அத்திமர மேட்டை நோக்கி நடந்தன. அத்திமர மேட்டில் உட்கார்ந்து வழக்கப்படி ஒரு பீடியை எடுத்துப் பற்ற வைத்துக் கொண்ட காளி, புகையை இழுத்து விட்டுக் கொண்டே தோட்டத்துப் பக்கம் திரும்பினன். இதென்ன.... மங்காவா மண்வெட்டியை ஓங்கி ஓங்கிப் போட்டுத் தோட்டத்தைக் கொத்திக் கொண்டிருக்கிருள் ?

''ஏ, மங்கா!'' — கோபம் கொப்புளித்தது காளியின் குரலில்.

ஓங்கிய மண்வெட்டியுடன் நிமிர்ந்த மங்கா அதே ரீதியில் திரும்பிக் காளியைப் பார்த்தாள்.

''என்ன?''

''மம்முட்டியைக் கீழே வைச்சுட்டு வா வெளியே.''

''ஏன்?''

''நீ ஒண்ணும் கொத்த வேண்டாம்.''

''கொத்தின என்னவாம்?''

''எனக்குப் புடிக்காது.''

''எனக்குப் புடிச்சிருக்கு.''

''இது யார் தோட்டம் தெரியுமில்லே.''

''தெரியாமல் என்ன? சர்க்கார் தோட்டம்.''

''நான் சர்க்கார் ஆளு தெரியுமில்லே.''

''அடியாத்தே, சர்க்காருக்கு வேறே ஆளே ஆப்படலே போலேயிருக்கு'' என்று சிரித்தாள் மங்கா.

''மங்கா, மம்முட்டியைப் போட்டுட்டு நீ வெளியே வரல்லே, நான் ரொம்பப் பொல்லாதவஞயிடுவேன்.''

''அட, இனிமேல்தான் ஆகப் போறயா?'' என்று கேட்டாள் மங்கா கிண்டலாக.

காளியின் ஆத்திரம் எல்லே மீறியது.

''வீணுக்காச்சும் வம்பு குடுக்கவா வந்திருக்கே? உன்னே என்ன செய்யறேன், பாரு!'' என்று உறுமிக் கொண்டே வேலியைத் தாண்டி அவளே நோக்கிப் பாய்ந்தான்.

கலகலவென்று சிரித்த மங்கா மண்வெட்டியை வீசியெறிந்துவிட்டுக் கறிகாய்ப் பாத்திகளே யெல்லாம் மிதித்துச் சாடியவாறு தோட்டத்து மறு பக்கமாக ஓடிக் கொட்டகைக்குள் புகுந்து முன்புறமாக வெளியே வந்து நின்ருள்.

மிதிபட்ட கறிகாய்ப் பாத்திகளேப் பார்த்துக் காளியின் கோபம் எல்லே மீறியது. மங்கா போட்டு விட்டுப் போன மண்வெட்டியைக் கையில் எடுத்து அவளே நோக்கி ஆத்திரத்துடன் வீசியெறிந்தான். ஆனல் அது தன் மேல் படாமல் துள்ளிச் சமாளித்

துக் கொண்டு கடகடவென்று சிரித்தாள் மங்கா.

''வள்ளியண்ணே! உனக்கு ஏன் அவ்வளவு கோபம் வருது? ஏதாச்சும் செய்யக் கூடாததைச் செய்திட்டேனா? தோட்டத்தைக் கொத்திக் குடுத்தா உனக்கு வேலை மிச்சம்தானே?''

''வேலையை மிச்சப்படுத்தற லட்சணமா இது? நல்லா வந்துக்கிட்டிருந்த செடியை யெல்லாம் மிதிச்சு மண்ணாக் கிட்டியே!''

''நான் வேணும்னா மிதிச்சேன்? நீதானே என்னை விரட்டினே?'' என்று சிரித்தாள் மங்கா.

''இத பாரு, எனக்குப் பசி நேரம். கையிலே பிடிபட்டா, கோவத்திலே கண்மண் தெரியாமே ஏதாவது செஞ்சு தொலைச்சிடுவேன், ஜாக்கிரதை.''

'' அடியாத்தே, பயமாத்தான் இருக்கு'' என்றாள் மங்கா, பயந்தவள் போல் கண்களை உருட்டி.

''மரியாதையா ஓடிப் போயிடு, இங்கிருந்து'' என்று கத்தினான் காளி.

''ஓடிப் போயிடறேன் வள்ளியண்ணே. ஆனா கைக்கடிகாரத்தைக் காணும்னு மட்டும் என்னைத் துரத்திக் கிட்டு வரக் கூடாது'' என்று கூறியவாறு அங்கிருந்து நகர்வதுபோல் போக்குக் காட்டினாள் மங்கா.

''என்ன, கைக் கடிகாரமா?''

''ஆமாம். சுவர் மேலே கழட்டி வச்சிருந்தியே. என் கைக்குக்கூட நல்லாத்தான் இருக்கு.''

''அவ்வளவு திமிரா உனக்கு? உன்னை என்ன செய்யறேன் பாரு'' என்று பல்லைக் கடித்தவாறு அவளை நோக்கிப் பாய்ந்தான் காளி.

மங்கா சிரித்துக்கொண்டே ஓடினாள். காளி அவளைத் துரத்திக் கொண்டு ஓடினான். மரங்களடர்ந்த மேடுகளிலும், பாறைகள் நிறைந்த பள்ளங்களிலும் மங்கா மானைப்போல் அநாயாசமாக ஓடிக் கொண்டிருந்தாள். காளிக்கு மூச்சு வாங்கியது. இருந்தாலும் அவள் கையிலிருந்து கடிகாரத்தைப் பிடுங்கி விட வேண்டும் என்றே ஒரே வெறி அவனை அவளுக்குப் பின்னே துரத்திக் கொண்டிருந்தது.

(தொடரும்)

சினிமா

நாம் மூவர்

ஓடும் ரயிலில் சண்டை; வீடு வாசல்களில் சண்டை; மாட மாளிகைகளின் மேல் சண்டை; ஹோட்டல் அறைக்குள் சண்டை; கடல் மணலில் சண்டை; ஆணும் பெண்ணும் இடுப்பை வளைத்து ஆடும் அயல் நாட்டு 'ட்விஸ்ட்' டான்ஸ்; இத்தனையும் போதாக் குறைக்குச் சோகக் கதையும் கொஞ்சம் இருக்கிறது இந்தப் படத்தில்! அதுதான் ஆச்சரியம்! தாயன்பு, வறுமையின் கொடுமை, நட்பின் பெருமை — முதலியவைகளெல்லாம் திரைக் கதையில் இடம் பெற்றிருக்கின்றன. எங்கோ பிறந்து, எங்கோ வளர்ந்த மூன்று இளைஞர்களும் ஒரு கிளையில் தொங்கும் கனிகள் போல் மனமொத்த நண்பர்களானார்கள். அவர்களுடைய தாயின் எதிர்பாராத மறைவுக்குப்பின் மூவரும் மூன்று திசைகளில் பிரிந்துவிடுகின்றனர். பிரிந்தவர்களின் வாழ்க்கையில் வீசிய பெரும் புயல் மூவரையும் மூன்று கோணங்களில் நிறுத்தி விடுகிறது.

நாகேஷ் சிரிக்கச் சிரிக்கப் பேசுகிறார். தாயை இழந்து தவியாய்த் தவித்துக் கதறுகிறார். எல்லாக் கட்டங்களிலும் அவர் நடிப்பு தலைசிறந்து நிற்கிறது. லாடத்தை ரஸ்தாவில் வைத்துக் கார்களைப் பஞ்சராக்கி அதன் மூலம் சம்பாதிக்கும் லாகவம் பிரமாதம்.


ரவிச்சந்திரன் சண்டைக் காட்சிகளில் ஜமாய்க்கிறார். ஜயசங்கர் தாம் செய்யாத குற்றத்துக்குத் தலைமறைவாய்த் திரிந்து தவிக்கிறார். ஆனால் அந்தத் தலைமறைவிலும் காதலியைச் சந்திக்கத் தவறவில்லை!

எல். விஜயலட்சுமி கோணங்கி நடனங்களாடிக் காதல் காட்சிகளில் ரொம்ப ரொம்ப 'ஓவரா'ய்ப் போகிறார். நாகேஷுக்கு ஏற்ற ஜோடி மாதவி. ஆட்டபாட்டங்களுக்குக் கேட்பானேன். பண்டரிபாய் சினிமா உலகின் 'மாடல்' தாய். அவருக்குத் தாய் வேஷம் தண்ணீர் பட்ட பாடம்.

வில்லன்களின் களியாட்டங்கள் விக்கினமேயில்லாமல் நடைபெற எந்த ஹோட்டலில் இடங் கொடுக்கிறார்களோ! இவர்களைத் தவிர மூன்றாவது மனிதனின் தலைகூடத் தெரியாதது அதிசயந்தான்!

பாடல்கள் பயங்கரம், வெறும் கேலிக் கூத்து. இசையமைப்பு என்று சொல்லிக் கொள்ள இவற்றில் என்ன இருக்கிறதோ தெரியவில்லை. படம் பப்படம்தான்.





புது வெய்யில்

ம. இராஜாராம்

கல்கி வெள்ளிவிழாப் போட்டியில் மூன்றாவது பரிசு பெற்ற சிறுகதை

அந்தத் தோல் பெட்டியில் ஒருவருக்குத் தேவையானதெல்லாம் வைக்கலாம் – துணிமணி, பவுடர் முதலியன, இன்னும் இரண்டொரு புத்தகங்களும்கூட வைக்கலாம். அதை அந்தச் சிமிட்டிப் பெஞ்சியின் மேல் வைத்து விட்டுக் குடையைத் தண்ணீர் வடியும் நிலையில் இறங்கு வாகாகப் பெஞ்சுக் காலில் சாத்தி விட்டுச் சுற்றிலும் ஒரு நோட்டம் விட்டாள் காத்தியாயினி. அந்தச் சிறு ஸ்டேஷனில் அதிகக் கூட்டம் இல்லை. ரயில் வரும்போது மட்டும் ஒரு சிறு சலசலப்பு உண்டாகும்.

பத்தங்குலம் நீளமான நேந்திரம் பழங்கள் ஏழெட்டு அடங்கிய குலையொன்றும், சாயா பாய்லரும், அதை மறைக்கும் தகர அரை வட்டமுமாகக் கறுப்பேறிய மண் மேடையில் அமைந்திருக்கும் ஒரு சிறிய டீக்கடை; தாழங்குடையொன்றைக் கூரையாகக் கொண்டு, சில தினசரிப் பத்திரிகைகளையும், 'முறுக்கான்' பீடி, சுருட்டு முதலிய சில அத்தியாவசியமான பொருட்களையும் தாங்கி நின்று ஒரே பெஞ்சில் அடங்கிவிட்ட 'ஷாப்' ஒன்று: - இவைதான் ஸ்டேஷன் மாஸ்டர் அறையைத் தவிர அந்த ஸ்டேஷனில் 'எக்ஸ்ட்ராக்'கள்!

மழை இலேசாகத் தூறிக் கொண்டிருந்தது. அந்த ஊர் மிக அழகான ஒரு சிற்றூர். ஊரைப் புகை மண்டலத்தில் ஆழ்த்தத் தொழிற்சாலைகளோ, புழுதிக் கூட்டில் அமிழ்த்தப் பெரும் வாகனங்களோ அந்த ஊரில் இல்லை. சிட்டுக் குருவிகளோடு போட்டி போட்டுக் கொண்டு 'சலசல'க்கும் சிற்றோடைகளும், அருவிகளும், எங்கு திரும்பினாலும் ரப்பரும், தேக்கும், பலாவும், மாவும், பச்சை வயல்களுமே காட்சியளித்த - இயற்கை எழில் மிகுந்த - ஊர் அது.

சுற்று வட்டாரத்தை ஒப்பிடும்போது அது கொஞ்சம் பெரிய ஊர்தான். ஊரில் ஒரு ஹைஸ்கூல் வேறு. அரசாங்கப் பள்ளி. கருணை மிகுந்த அரசாங்கம், அந்த வட்டாரக் குழந்தைகள் படித்துக் கல்விமான்களாகி எதிர்காலத் தலைவர்களாக வருவதற்காக அமைத்த பள்ளிக்கூடம். இப்போது மழைக் காலத்தில் வகுப்பினுள்ளும் கூடக் குடையும், தோணியும் தேவையாயிருந்தன.

'இடவப்பாதி' மழை விடுகிற இரண்டுங்கெட்டான் நாட்கள் – ஏட்டில் எழுதியிருக்கும் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்க இயலாமல் 'அதற்கு'ம் பயந்து, 'இதற்கு'ம் பயந்து தவிக்கின்ற மனிதர்களைப் போல.

கருண்டு திரண்டு, குழைந்து குமைந்து, பரந்து நின்ற மேகக் கூட்டங்களெல்லாம், கேரளத்திலேயே பிறந்து இந்த இருபத்திநான்கு வருடங்களும் வளர்ந்து விட்ட காத்தியாயினியின் கவனத்தைக் கவரவில்லை. சிறு தூறலும், பெருந் தூறலுமாய், நின்றும் நிதானித்தும் பெய்யும் மழையெல்லாம் அவளுக்கு ஒரு பொருட்டல்ல. ஆனல் இன்றோ, வெய்யில் எப்போது வரும் என்ற ஏக்கம்தான் அவளுக்கு. வருடா வருடம் அநுபவிக்கின்ற அதே 'நசநச'ப்புத்தான் என்றாலும், அவளுக்கு இப்போது மழைக்குப் பின் அடிக்கும் அந்தப் புது வெய்யில் மிக மிகத் தேவையாயிருந்தது.

மஞ்சளாய், கண்களைக் கூச வைத்துக் கொண்டு, சிலிர்த்திருக்கும் மயிர்க் கால்களினூடே பாய்ந்து, சருமத் துவாரங்கள் வழியாய் உள்ளே ஊடுருவி நுழைந்து, எலும்பை மெதுவே மெதுவே சூடேற்றும் அந்த இன்ப மயமான புது வெயில் அவளுக்குத் தேவை. உள்ளூற நடுக்கிய குளிர், வெப்ப சுகத்தைத் தேட வைத்தது.

போவதற்குமுன் கேசவபிள்ளையின் சடலத்தை ஒரு முறையாவது பார்த்துவிட்டுப் போக அவள் துடித்த துடிப்பெல்லாம், அப்படி அவள் பார்த்தால் ஆகும் விளைவுகளைப் பற்றிய அவளுடைய கற்பனையில் அடங்கி விட்டது. அந்தக் கற்பனை நியாயமான எதிர்பார்ப்புத்தான், எப்படியெல்லாம் நடக்குமென்று அவள் எதிர்பார்த்தாளோ அப்படியெல்லாம்தான் நடந்திருக்கும், அவள் மட்டும் கேசவபிள்ளையின் அறைக்குப் போயிருந்தால்.

இரேகை நிபுணர்களாலும், போலீஸ்காரர்களாலும் சூழப்பட்டுக் கயிற்றில் தொங்கிக் கொண்டிருக்கும் அந்தச் சடலத்தைக் கற்பனையில் காணும் போதே காத்தியாயினிக்குத் தொண்டை அடைத்துக் குமைந்தது. அந்தக் குமைச்சலின் அர்த்தம், காரணம் அவளுக்கே விளங்காதவை.

செத்துவிட்ட எவருக்கும் செலுத்தும் ஒருகண அநுதாபத்தோடு நிறுத்திக் கொண்டு உலகம் கேசவபிள்ளையைத் தூற்றத்தான் செய்யும். அதன் போக்கு அப்படி. நல்லதற்கும் கெட்டதற்கும் வித்தியாசம் தெரியாமலேயே, நல்லது – கெட்டது என்று பேசிப் பேசிப் பிரித்துத் தராதரம் பார்த்து, ஆயிரம் நல்லதின் நடுவே ஒரு கெட்டதை மட்டும் பூதக் கண்ணாடியில் கண்டு, அந்தக் கெட்டதின் சாயலிலேயே நல்லதையும் நோக்கக் கூடியது இந்த உலகம் என்பதை அவள் அறியாதவளல்ல.

'செய்துவிட்ட அக்கிரமத்தை உணர்ந்து, அது வெளிப்பட்டு விட்டதால் உண்டான அவமானத்தால் உயிரை விட்டான்' என்று சொல்லி மண்ணைப் போட்டு மூடுமே தவிர, அந்த மனத்துக்குள் என்ன புழு இருந்து அரித்து இப்படியொரு நிலைமைக்குக் கொண்டு வந்தது என்பதைப் பற்றி உலகம் சிந்திக்காது. சிந்தித்தால் அதிசயம்.

தற்கொலை செய்து கொள்பவன் கோழை என்று சொல்வதைவிடச் சுயநலக்காரன் என்று சொன்னால் இன்னும் பொருந்தும். ஒவ்வொருவருக்கும் உயிர் 'உயிரே' போன்றது. அதையே போக்கிக் கொள்ளத் தோன்றி விட்டால் மனத்தில் எத்தனை வேதனை, வெறுப்பு, கொந்தளிப்பு எல்லாம் உண்டாகியிருக்க வேண்டும்! அந்த உணர்ச்சிகளெல்லாம் அவனை ஓட ஓட விரட்டி வாழ்

வின் எல்லைக்கே கொண்டு நிறுத்திவிட்டாலும், ஒவ்வோர் உயிருக்கும் இயற்கையாயுள்ள 'வாழ வேண்டும்' என்ற வெறி, இந்தப்புறமாய்ப் பிடித்திழுக்க, அதையும் மீறித் தன்னை அழித்துக்கொண்டுவிட எத்தனை துணிச்சல், எத்தனை உறுதி வேண்டும்! ஆனாலும், தற்கொலை செய்துகொள்ளும் போது தன் நினைவு மட்டும்தான் மேலெழும்பி நிற்கிறது. தன்னைச் சார்ந்திருக்கும் மற்றவரின் நினைவு வந்தால் ஒரு வேளை....

காத்தியாயினிக்குப் பார்வதியின் நினைப்பு வந்தது. பார்வதியை அவள் நேரில் பார்த்ததில்லையே தவிர, அவள் குணம், நடத்தை எல்லாவற்றையும் பற்றிக் கேசவபிள்ளை மூலம் கேட்டுக் கேட்டு அவளை நன்றாக அறிந்தவள் போல் ஒரு பிரமை. கேசவ பிள்ளையின் முடிவைப் பார்வதி எப்படி ஏற்றுக் கொள்வாள்? காத்தியாயினிக்கு ஒரு முடிவுக்கு வர முடியவில்லை. சை! அவள் எப்படிப் போனால் என்ன? கேடு கெட்ட நாய்!..... கேடு கெட்ட.....? அப்படியானால் நான்.......?

கண்களில் 'குபுக்'கென்று பொங்கிய நீர் சுற்றுப்புறத்தை மங்க அடித்தது. தொண்டையெல்லாம் கரகரத்து நமைச்சலாய்ப் பொரும, வெடித்து வந்த விம்மலெல்லாம் அசாத்திய அழுத்தத்தின்பேரில் சிதைந்து குறுகி, வெளிப்பட்டு விடும் துடிப்பில் வழியும் வகையும் அறியாமல் நெஞ்சுக்குள்ளேயே குமைந்து, சிறுகச் சிறுகக் கனத்தைக் கூட்டிக் கொண்டிருந்தன.

கேசவபிள்ளையை ஊரும் உலகமும் தூற்றத்தான் செய்யும். ஒன்பது குழந்தைகளுக்குத் தந்தையாகி விட்ட நாற்பத்தைந்து வயதுக் 'கிழவர்' ஒருவர் வேற்றூரில் வந்து இளம் பெண்ணொருத்தியோடு உறவுபூண்டால், உலகம் என்ன சொல்லும்?

அதிலும், கேசவபிள்ளை, இளம் உள்ளங்களைப் பக்குவப்படுத்தி எதிர்காலத் தலைவர்களைச் சீர்ப்படுத்தி உருவாக்க வேண்டிய ஒரு பள்ளித் தலைமையாசிரியர். எல்லாக் கறிக்கும் அடிப்படையாய்க் கருதப்படும் ஏட்டுச் சுரக்காய் பயிரிடப்படும் ஓர் பள்ளியின் தலைமையாசிரியர். அவர் — ஆசான் இப்படி நடந்து கொண்டால், நாளைக்கே மாணவ மாணவிகளிடையே 'ஜதை' பிரிந்து விட்டாலும் ஆச்சரியமில்லை தான். ஆனால், இதற்கெல்லாம் யாரும் கற்றுத் தர வேண்டும் என்பதும் இல்லை!

சாய்ந்து விழுந்து கொண்டிருந்த மழைத்தாரை, செங்குத்தாய் விழ ஆரம்பித்து, இதமான பன்னீர்த் தெளிப்பாய் மாறிக் கொண்டிருந்தது. 'ஸ்டேஷ'னின் அருகே மலைச் சரிவிலிருந்த குடிசைகளிலிருந்து, முந்திரி சுடும் வாசனை அலை அலையாய் மிதந்து வந்தது. எங்கும் செறிந்திருந்த பலா மரங்களில் பழுத்துத் தொங்கிய பலாப் பழங்களின் வாசனையும் அவளுக்குப் பழக்கப்பட்டதுதான். இளங்காற்று அவளுடைய கேசத்தைப் புரட்டியது. நினைவு மனத்தைப் புரட்டியது.

'கேசவபிள்ளையின் இந்த முடிவுக்குக் காரணம் யார்? பார்வதியா, நானா? நான்.... நான்....' அவள் உடல் ஒரு முறை குலுங்கியது. ஏதோ கூடாத நினைவு மனத்தில் எழுந்துவிட்டது போல் உள்ளம் சிலிர்த்தது. 'அப்படியிருக்காது' என்று மனத்தை நம்ப வைக்கப் படாத பாடு பட்டு, ஆதாரங்களையெல்லாம் தோண்டி யெடுக்க, எடுக்க, 'அப்படித்தான்' என்பதற்கு ஆதாரமாய் வேறு ஏதோ ஒன்று எதிர்வாதங்களைக் கிளப்புவதால் உண்டான விதிர்விதிர்ப்பில் உடல் நடுங்கியது.

கேசவபிள்ளை செத்தாயிற்று. இதைவிட அவருக்கு வேறு என்ன நல்ல நிலைமை இருக்க முடியும்?

லீவு விண்ணப்பத்தையும், இருத்தியிருந்த விடைத் தாள்களையும் அவசரமாய்க் கொடுக்க, அவர் தங்கியிருந்த அறைக்கே போன போதுதான் அவரிடம் சொந்த விஷயமாய் இரண்டு வார்த்தைகள் பேச அவளுக்குச் சந்தர்ப்பம் உண்டாயிற்று.

தாயின் உடல் கவலைக்கிடமாகிக் கொண்டு வருகிறதென்ற செய்தி தெரிந்ததும், அவள் தன் சொந்த ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்தாள்.

அவளுடைய லீவு விண்ணப்பத்தைப் பார்த்த கேசவபிள்ளை உடனே அனுமதியளித்தது மட்டுமில்லாமல், ''அம்மையை சிசுருஷை செய்யான் தக்க ஏற்பாடுகள் செய்த சேஷம் பதுக்கெத் திரிச்சு வன்னால் மதி, டீச்சர்!'' என்றார். பிற்பாடு ஏதோ தமக்குத் தாமே பேசிக் கொள்வதைப் போல, ''ஒவ்வோர் உயிருக்கும் பூரணமான அன்பு என்பது அந்த ஓர் இடத்திலிருந்துதான் வருகிறது; கணவன் மனைவியிடத்தில் நிலவும் அன்பெல்லாம் வெறும் வேஷம், பொய்'' என்று தொண்டை கமறச் சொன்ன சொற்கள் காத்தியாயினி அவரை ஏறிட்டு நோக்கக் காரணமாயிருந்தன. அவருடைய மனத்தின் அடித்தளப் பரப்பில் ஒரு பகுதி அவளுடைய கண்களுக்குப் புலப்பட்டு விட்டதைப் போல ஒரு மயக்கம். வயதின் வளையங்கள் சூழ்ந்திருந்த அவருடைய கண்கள் பளபளத்து அவள் நெஞ்சத்தை ஊடுருவிப் பிசைந்தன.

காட்டி மறைக்கப்பட்டுவிட்ட பொருளைப் பூரணமாய்க் கண்டுவிடத் துடிக்கும் குழந்தையின் அவஸ்தையில் நிறைய அவள், இனமறியாத ஒரு குழப்பத்துடன் ஊர் சென்றாள்.

தன் தாய்க்கு வேண்டியதை யெல்லாம் செய்யும் பொழுது ஒவ்வொரு முறையும் அவளுக்கு அவருடைய வார்த்தைகள்தாம் நினைவுக்கு வந்தன. உடல் நிலை மோசமாக ஆக, அவளுக்கு அந்த வார்த்தைகளும் நெருக்கமாகிக் கொண்டு வந்தன. கடைசியில், அவள் தாய் எல்லாவற்றையும் மீறி விடைபெற்றுக் கொண்டு விட்டபோது காத்தியாயினியின் நினைவில் கேசவபிள்ளையின் முகம்தான் எழுந்தது. அந்த முகம் சொல்

விற்று! "ஒவ்வோர் உயிருக்கும் பூரணமான அன்பு என்பது தாயிடமிருந்து மட்டும்தான் வருகிறதம்மா. வேறு எந்த உறவும் பாசாங்குதான். கணவன், மனைவியிடத்தில் நிலவும் அன்பெல்லாம் வெறும் வேஷம், பொய்."

பளபளத்த கண்களையும், கமரும் தொண்டையின் புகைச்சலை அடக்கத் துடித்த துடிப்பையும், தன் ஆற்றாமையை முழுமையாய் வெளிப்படுத்தும் வகையறியாது விசிக்கும் குழந்தையைப் போன்ற ஏக்கம் நிரம்பிய முகத்தையும் அவளால் மறக்க முடியவில்லை. சிறுகச் சிறுக அந்த நெஞ்சம் நைந்து கொண்டிருக்கிறதென்பதைப் புரிந்து கொண்டு விட்ட காத்தியாயினி, ஊரிலிருந்து திரும்பி வந்ததும் கேசவ பிள்ளையோடு நெருங்கிப் பழக முயன்றாள்.

தன் தந்தைக்கொப்பாக மதித்த அவரிடம் ஒரு சோகச் சாயலையே எப்போதும் கண்டாள் அவள். என்னவென்று புரியாத ஒரு வெறி அவளிடம் தோன்றி, அவருடைய துன்பத்தைத் துடைத்துவிடத் துடித்தது.

சிறுகச் சிறுக அவரைப் பற்றிய விஷயங்களையெல்லாம் தெரிந்து கொண்டாள் காத்தியாயினி.

குழந்தைகளின் படிப்புக்குத் தொந்தரவெனக் குடும்பத்தை வடக்காஞ்சேரியிலேயே விட்டு விட்டுத் தாம் மட்டும் ஊர் விட்டு ஊர் மாறிக் கொண்டிருந்த கேசவ பிள்ளைக்கு ஒன்பது குழந்தைகள் — வருடா வருடம் விடுமுறைக்குப் பார்வதியோடு சேர்ந்திருந்ததன் காரணமாக. ஒரு பள்ளித் தலைமையாசிரியருக்கு வரும் சம்பளம்—இவருக்கு இங்கு தனிச் செலவு — ஊரில் பத்து ஜீவன்கள் — அலங்காரப் பிரியையான பார்வதி — கடன்.

தம் கவலையையெல்லாம் மறந்துவிடும் வெறியில் பார்வதியோடு இருந்தபோதெல்லாம் அவர் சுகம் நாடியதும், தன்னை அவர் வெறும் இயந்திரமாகவே மதிக்கிறார் என்ற நினைப்பில் அவரிடம் வெறுப்படைந்த அவள் வேறு உறவை நாடியதும் அதிசயமல்ல. ஆனால் ஒன்பதைப் பெற்றுவிட்ட ஒரு தாயைத் தன் நாயகியாய் வைத்துக் கொண்டானே எவனோ ஒருவன் — அது அதிசயம். அவள் செய்கையில் நியாயத்தைக் கண்டு அவள் போக்குப்படி அவளை விட்டாரே அவர் — அது அதிசயம்.

எண்ணங்கள் புழுவாய் மனத்தை அரிக்க, இதயம் எதிர்காலத்தின் பயங்கரத்தை அறிந்து கொண்டாற்போல் கசங்கியது. இந்த நிலையில் — ஒரு பக்கம் கடன், மறு பக்கம் நடத்தை கெட்ட மனைவி — தன் மனப் புண்ணுக்கு ஒரு மருந்தை, தேறுதல் தரும் இதயம் ஒன்றைத் தேடித் தேடித் தவித்துத் திகைத்து மதுவைச் சரணடைந்த சமயம்தான் காத்தியாயினி அவரிடம் நெருங்கிப் பழக ஆரம்பித்திருந்தாள்.

என்ன காரணம்?



கல்யாணமான மறு நாள் காதலன் தன் காதலியைப் பார்த்துக் கேட்டான்: "நாம் ஓராண்டாய்க் காதலித்தோம்; அது ஒரு நாளாய் ஓடிவிட்டது. நாம் கல்யாணம் செய்து கொண்டு ஒரு நாளாகிறது; அது ஓராண்டாய் உறுத்துகிறது. கண்ணே! இதற்குக் காரணம் என்ன...?"

— 'பிரம்மசாரி.'

இந்த விஷயங்களையெல்லாம் மெதுவாக அவரிடமிருந்து தெரிந்து கொள்ளத் தெரிந்து கொள்ள, அவரிடம் அவளுக்கு ஏற்கனவே உண்டாகியிருந்த பச்சாத்தாபமும், இனமறியாத கருணையும் மேலும்மேலும் அதிகரித்தன.

மன மயக்கத்துக்கு ஒரு மாற்றத்தைத் தேடித் தேடி ஏற்கனவே சகதியில் விழுந்து விட்ட அவரை, மேலும் பாதாளத்தில் விழுந்து விடாமல் தடுத்துவிட அவள் துடியாய்த் துடித்தாள். கடனையும், வியாதியையும் பெருக்கிக் கொண்டே போகும் அவரை மீட்டுவிடக் காத்தியாயினி கவலை கொண்டாள். வெள்ளச் சுழற்சியில் அகப்பட்டுக் கொண்டு சுற்றிச் சுழன்று தவித்துத் திணறும் அவரை உடனடியாய்க் கரையேற்றி விடா விட்டால் அவர் முடிவு சின்னபின்னம்தான் என்பது அவளுக்குத் தெள்ளெனத் தெரிந்து விட்டது.

அவரோடு பழகப் பழக, அவர் நெஞ்சக் குமுறலின் விளைவாய் வெடித்துச் சிதறும் வார்த்தைகளைக் கேட்கக் கேட்க, அவளுக்கு அவரை இனம் கண்டு கொள்ள முடிந்தது. அவருடைய இதயத்தை, வேதனையின் இருப்பிடத்தை அவள் புரிந்து கொண்டு விட்டாள். அவருக்கு அன்பு வேண்டும்; இதயத்துக்கு இதத்தைக் கொடுக்கும் ஓர் இசைவான ஆதரவு வேண்டும். அந்தப் பற்றுக்கோலை நாடித்தான் அவர் உள்ளம் தவியாய்த் தவித்துக் குமைந்து ஏங்குகிறதென்பது அவளுக்குப் புரிந்து விட்டது.

ஆதரவாய்ப் பேசி அவரிடம் அன்பைச் சொரிய அவருக்கு ஒருவர் தேவை. மனித மனம் நேசிப்பதைவிட நேசிக்கப்படுவதைத் தான் அதிகமாக விரும்புகிறது. அந்த ஆதரவு ஏன் தானாய் இருக்கக் கூடாது? அவருக்கு இதத்தைத் தரத் தன்னால் முடியாதா? அவருக்கு ஆறுதல் தன்னால் அளிக்க முடியாதா?

காத்தியாயினி கேசவபிள்ளையை அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தாள். அவருக்குக் கீழே வேலை செய்யும் ஓர் ஆசிரியை என்பது வெளிச்சாக்கு. பள்ளி வேலை — மற்றவருக்காக ஒரு சால்ஜாப்பு.

தன் துன்பத்தை யெல்லாம் கொட்ட, மனச் சுமையை யெல்லாம் இறக்கிவிட ஓர் அன்பான இதயம் கேசவபிள்ளைக்குக் கிடைத்தது. காத்தியாயினியின் ஆறுதல் மொழிகளிலும், இதமான அன்பிலும் அவர் தம்மையே மறந்தார். குளிருக்கு ஒரு போர்வையாய்க் கார்த்தியாயினி அவரைச் சுற்றிக் கொண்டாள்.

இதே போல் 'இடவப் பாதி' மழை நின்று, புது வெய்யில் தொடங்கிய நாள்தான் அது. அவளுக்கு நன்றாக நினைவிருந்தது. இயற்கையின் எழிலெல்லாம் பூத்துக் குலுங்கிய நாள். பறவைகளெல்லாம் கூட்டினின்றும் வெளிப்பட்டு மகிழ்ச்சியுடன் பறந்த நாள். மீனவர்களெல்லாம் அக்கம் பக்கம் பார்த்துக் கள்ளத்தனமாய்த் தத்தம் காதலியின் கன்னம் நிமிண்டி விடைபெற்றுக் கட்டுமரத்தில் ஏறிய நாள். சூரியன் தம் கிரணங்களை இதமாய்ப் பரப்பிய நாள்.

அவள் தங்கியிருந்த இடத்தைச் சுற்றிலும் ஒரே தென்னை மரங்களும், பலா மரங்களும் நிறைந்திருந்தன. தென்னை ஓலைகளில், இரவு பெய்திருந்த மழை தேக்கியிருந்த நீர்த் துளிகள், தென்னை மட்டைகள் காற்றில் அசைகையில் 'தட்'டெனக் கீழே சொட்டியும், அவை கீழே மண்ணில் விழுந்து விடாமல், அருகிலிருந்த பலாமரத்தின் நீட்டிக் கொண்டிருந்த கிளைகளின் இலைகள் அவைகளைத் தாங்கிக் கொண்டன. ஒட்டாத பலா இலைகளில் முத்தாய்த் தங்கி நின்ற அந்த நீர்த் துளிகள், புது வெய்யிலில் தகதகத்தன. 'குப்'பென்று இடையில்லாமல் நிறைத்து மலர்ந்திருந்த கொன்றைப் பூக்கள் பச்சை மரங்களின் பின்னணியில் மறைந்து கொண்டுவிட முயன்றாலும், அவற்றின் எடுப்பான சிவப்பு நிறம் அவைகளைத் தேன் சிட்டுக்களுக்குக் காட்டிக் கொடுத்துத் தேனை இழக்க வைத்தது.

அடர்ந்து செறிந்திருந்த மரங்களினூடே நுழைந்து, தரையில் இருக்கும் நீரை உறிஞ்சி விடும் முயற்சியில் புது வெய்யில் போராட, அந்தப் போராட்டம் மண்ணின் மேலிருந்த ஜீவராசிகளுக்கு ஒரு புத்துயிரை ஊட்டிக் கொண்டிருந்தது. பருவ மாற்றத்தின் அந்தப் படபடப்பு என்னென்னவோ எண்ணங்களை எழுப்பியது.

காத்தியாயினிக்கு அவருடைய உணர்ச்சி புரிந்தது. தன்னைக் கட்டுப்படுத்திக் கொள்ளும் முயற்சியில் அவர் தனியாய்த் தவித்ததும் அவளுக்குத் தெள்ளத் தெரிந்தது.

ஜன்னலோரமாய் நின்று, சிட்டுக் குருவிகளின் கொட்டத்தைப் பார்த்துக் கொண்டு, நீண்ட பெருமூச்சுக்களுடன், கால்களைத் தரையில் பரபரவெனத் தேய்த்து அவர் தம் உடம்பை முறுக்கிக் கொள்வதை அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். ஏக்கத்தோடு சாய்வு நாற்காலியில் வந்து அவர் விழுவதையும், இருப்புக் கொள்ளாமல் மறுபடியும் எழுந்து அறையைச் சுற்றி வருவதையும், தம் இரு கைகளையும் ஒன்றுடனொன்று இறுகப் பிடித்துக்கொண்டு ஏதோ உணர்ச்சியைக் களைந்துவிடும் வெறியில் தொண்டையைச் செருமுவதையும் பார்க்கப் பார்க்க, அவளுக்கு அவருடைய தவிப்பு, சொல்லாமலேயே புரிந்து விட்டது.

அந்த உடல் தவிப்பையும் கூட நிவர்த்திக்க அவள் துணிந்து விட்டாள். இடுக்கிட்டுத் தயங்கிய அவரை ஒரு புனிதமான உணர்ச்சியுடன் தேற்றினாள் காத்தியாயினி.

அப்புறம் இரண்டு நாட்கள் அவளுடைய முகத்தைப் பார்க்கக்கூட அவர் கூசினார். இத்தனை வயதுக்கப்புறம்...

மறுபடியும் மெதுவாக அவரைத் தேற்றி, இதமான அன்பிலே அவரை மகிழ வைத்தாள் அவள். இதத்தையே நாடிய அவர் மனமும் இதை ஏற்றுக் கொள்ளப் பெரும்பாடு படவில்லை. இதெல்லாம் அப்புறம் சகஜமாகி விட்டது.

கேசவபிள்ளை கொஞ்சம் கொஞ்சமாய் மனமும் உடலும் தேறிக் கொண்டு வந்தார். 'தன்னை நேசிக்க ஓர் உள்ளம் இருக்கிறது; தன் இதயத்துக்குச் சூட்டைத் தர ஒரு மனம் காத்திருக்கிறது; தனக்கு ஆதரவாய் ஓர் அன்புப் பெட்டகம் திறந்திருக்கிறது' என்ற நினைப்பு அவரைத் தெம்பு கொள்ளச் செய்தது.

தன் முயற்சியில் சிறுகச் சிறுகப் பெற்று வரும் வெற்றி, காத்தியாயினியை மகிழ்ச்சியில் திளைக்க வைத்தது. அவளுக்குக் கிடைத்த நிம்மதி, உள்ளத்தை அப்படியே பூரிக்க வைத்து இலேசாக்கி மேலே மேலே பறக்க வைத்தது. கேசவபிள்ளைக்கும் சரி, அவளுக்கும் சரி, நேற்றுக் காலை வரையில் சுற்றுப்புறமே நினைவில்லை.

வழக்கம் போல நேற்றுக் காலை பள்ளியில் நுழைந்த காத்தியாயினி, ஏதோ என்னவென்று புரிந்து கொள்ள முடியாத ஒரு மாற்றத்தைக் கவனித்தாள். எல்லோரும் அவளையே ஒரு மாதிரியாகப் பார்ப்பது போலிருந்தது. ஒரு மாதிரியாய்ச் சிரித்துக் கொண்டு, 'கசமுச' வென்று பேசிக் கொள்வதைப் போல் இருந்தது. அவள் உள்ளம் விநோதமாய்க் குழம்பிப் படபடத்தது

வகுப்பில் அவள் நுழைந்த போது, மாணவ மாணவிகள் என்றுமில்லாமல், 'ஓ'வெனக் கூச்சலிட்டார்கள். அவள் திகைத்தாள். அவர்கள் அடங்காமல் ஆர்ப்பரித்தார்கள்; ஆபாசமாய் ஊளையிட்டார்கள். அவளுக்கு வியப்பாயும், இனமறியாத கலவரமாயும் இருந்தது. கரும்

பலகைப் பக்கம் திரும்பியவள், அதில் எழுதியிருந்த வார்த்தைகளைக் கண்டு விக்கித்துப் போய் ஒரடி பின்வாங்கினுள். இயக்கம் நின்றிருந்த உணர்வு ஒரு கணத்தில் தன் நிலையை அடைந்ததும், அடக்க முடியாத குமுறலுடனும், கலவரத்துடனும் வகுப்பை விட்டு வெளியே ஓடி வந்தாள் அவள். மாணவர்கள் வெற்றி ஆரவாரம் எழுப்பினர்.

வெளியே வந்த காத்தியாயினியின் கண்களில் எதிர்ப்பட்ட சுவர்களிலெல்லாம் அதே ஆபாச வார்த்தைகள். பேயைக் கண்டவள் போல் ஒரே ஓட்டமாய்த் தன் இருப்பிடம் சேர்ந்தாள் அவள்.

கலவரம்; பயம்; பீதி; அவமானம்; வெறுப்பு..... அப்பப்பா, என்னென்ன உணர்ச்சிக் கொந்தளிப்புக்கள்; உள்ளச் சுழற்சிகள் !

எழுதியிருந்த வார்த்தைகளில் ஓர் எழுத்துக்கூடப் பொய்யல்லதான். ஆனல், அதில் தொனித்த கேவலம், ஆபாசம்—காத்தியாயினியின் நெஞ்சிலிருந்து வெடித்து வந்த குமுறல் உடலை உலுக்கியது. உலகத்தின் கண்களில் தானெரு...

தான் நடந்து கொண்டது உண்மையிலேயே, ஆபாசமான கேவலமான இனக் கவர்ச்சியின் விளைவான வெறியா?.... உண்மையிலேயே.... நிஜமாய்.... கேவலத்தைத் தவிர அதில் வேறு..... உலகமே! உனக்கு நல்ல கண்ணில்லே !

குமுறிக் குமுறித் தானே சுதாரித்துக் கொண்டு ஓய்ந்த காத்தியாயினிக்கு அந்த ஊரை விட்டுப் போய் விடுவதைத் தவிர வேறு வழி தெரியவில்லை. இனியும் அங்கிருக்க முடியாது.

அப்போதுதான் அந்தச் செய்தி — கோவ பிள்ளை தூக்கிட்டுக் கொண்டு உயிர் விட்ட செய்தி — அவளுக்குத் தெரிய வந்தது. நெஞ்சிலிருந்து 'படார்' என்று ஏதோ ஒன்று நழுவி விட்ட சூனிய உணர்ச்சியுடன் வெறிக்க வெறிக்க நின்று கொண்டிருந்த காத்தியாயினி இப்போதுதான் தன்னேயே புரிந்து கொண்டாள்.

அவள் அவரைக் காதலித்திருக்கிறுள்!



மனைவி: என் சிநேகிதிக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கேன். மறக்காமல் போஸ்ட் செய்து விடுங்கள் !

கணவன்: மறந்து போயிட்டா !

மனைவி: பரவாயில்லே; அந்தக் கடிதத்தின் முடிவில், என் கணவர் 'இந்தக் கடிதத்தை போஸ்ட் செய்வதற்கு மறந்து போயிடுவார், தவருக நினைத்துக் கொள்ளாதே !' என்று நானே எழுதியிருக்கிறேன் !

'காதல்' என்பது நெஞ்சோடு நெஞ்சுக்கு உண்டாகும் உறவானுல் அவள் அவரைக் காதலித்திருக்கிறுள். வேறு எந்தப் பொருத்தத்தைப் பற்றியும் கவலைப்படாமல் தன் உடலையே அவருக்கு அர்ப்பணிக்கும் அளவுக்கு அவள் அவரைக் காதலித்திருக்கிறுள். ஆறுதல் தேடிய ஓர் இதயத்துக்கு ஆதரவாய் இருப்பதாக நினைத்துக் கொண்டு, தன்னையே இழந்து விட்டாள் அவள். அவள் உணர்ச்சியெல்லாம் உறைந்து விட்டது.

'அவர் இப்படிச் செய்திருக்க வேண்டாம்' என்று தோன்றியது ஒரு சமயம். இன்னெரு சமயம், 'அவருக்கு வேறு எந்த விதமான முடிவும் இருந்திருக்க முடியாது' என்றும் தோன்றியது.

அவர் இந்த முடிவை அடைய, தான்தான் காரணமோ என்ற கேள்வி நினைவுப் பொறியைக் குழப்பிய போதிலும், நினைவின் முடிவில் நிம்மதியே உண்டாயிற்று. துடித்துக் கொண்டிருந்த ஓர் இதயத்துக்குத் தன்னல் இதம் தர முடிந்தது என்ற நினைப்பு வேறு எந்தக் கவலைக்கும் இடம் தரவில்லை.

கொழுகொம்பைக் கொடி பற்றிக் கொண்டுவிட்ட போதிலும்கூட, இதமான புது வெய்யில் சூட்டைக் கூடத் தாங்க முடியாமல் கொடி கருகிவிட்டது.

மழை நின்று இளம் வெயில் அடித்துக் கொண்டிருந்தது. அப்பா! மழைக்குப்பின் வரும் இந்தப் புது வெய்யில்தான் எத்தனை இதம்! எத்தனை சுகம் !

நீண்ட பெருமூச்சுடன் ரயில் வந்து நின்றது. புது வாழ்க்கையை எதிர்நோக்கி நிச்சலனமான இதயத்துடன் ரயிலில் ஏறி உட்கார்ந்த காத்தியாயினிக்குத் தான் இரண்டு மாதங்களாகக் குளிக்கவில்லை என்ற நினைப்புத் திடீரென வரவும், கண்களிலிருந்து நீர் பொங்கிப் பார்வையை மறைத்தது.

புது வெய்யிலும்கூட உறைக்குமோ?

இதோ ஒரு ஐடியா!



அல்சேஸ் லொரேன் என்ற கிராமத்தின் மத்தியில் ஒரு பெரிய மணியைக் கட்டியிருந்தார்கள். நெருப்பு, புயல், வெள்ளம் போன்ற ஏதாவது பெரும் விபத்து ஊரில் ஏற்பட்டால் அந்த மணியை அடித்து, மக்களை எச்சரிப்பது அந்தக் கிராம வழக்கம். ஆனால் சென்ற பல ஆண்டுகளாக விபத்துக்கள் எதுவும் ஏற்படாமல் போகவே அந்த மணி துருப்பிடிக்க ஆரம்பித்துவிட்டது. எனவே இனி மணியை அடிக்கடி உபயோகிக்க வேண்டுமென்று கிராமப் பெரியவர்கள் முடிவு கட்டினார்கள். மணியைப் பயன்படுத்திவிடுவது எளிதுதான். ஆனால் விபத்துக்கு எங்கே போவது? நீண்ட நேரம் யோசித்தார்கள். கடைசியில் கூட்டத்திலிருந்த ஒரு சிறுவன் யோசனை கூறினான்:

''நம் கிராமத்துக்கு மாதா மாதம் வரி வசூலிப்பவர் வருகிறார் அல்லவா? அவரைக் கண்டதும் எல்லோரும் பதுங்கி விடுகிறோம். சில சமயம் அவர் திடீரென்று வந்துவிடுவதால் நிலைமை சிக்கலாகி விடுகிறது. எனவே அவர் நடவடிக்கையைக் கண்காணித்து, மாதா மாதம் அவர் வருகையை அறிவிக்க இந்த மணியை அடிக்கலாம்!''

சிறுவனின் யோசனை எதிர்ப்பில்லாமல் உடனே ஏற்றுக் கொள்ளப்பட்டது.

- ''மலிக்''

வயது என்ன?



லண்டன் மாநகரச் சீமாட்டி ஒருத்தி ஏராளமாகப் பணம் செலுத்தி ஓர் அழகு நிபுணரிடம் தன்னை அலங்காரம் செய்து கொண்டாள். பின்னர் பெர்னார்ட் ஷாவைச் சந்தித்து, ''எங்கே என் வயதென்ன? சொல்லுங்கள், பார்க்கலாம்!'' என்றாள்.

சீமாட்டியை மேலும் கீழுமாக நோக்கிய பெர்னார்டு ஷா ''சிறப்பான உன்னுடைய பல்வரிசையைப் பார்த்தால் பதினெட்டு வயதென்றும், உனது சொர்ணமயமான கூந்தலைக் கண்டால் பத்தொன்பது வயதென்றும் நீ நிற்கும் நிலையைப் பார்த்தால் பதினான்கு வயதென்றும் எனக்குச் சொல்லத் தோன்றுகிறது'' என்றார் புன்சிரிப்புடன்.

சீமாட்டிக்குப் பெருமை தாங்கவில்லை. ''என்னைத் தாங்கள் இப்படிப் புகழ்ந்ததற்கு ரொம்ப வந்தனம். இருந்தாலும் என் சரியான வயதென்னவென்று நினைக்கிறீர்கள்? அதைச் சொல்லுங்கள்'' என்று கேட்டாள்.

அதற்கு ஷா, ''நான்தான் சொன்னேனே? நான் குறிப்பிட்ட மூன்று வயதுகளையும் அதாவது 18, 19, 14 இவற்றைக் கூட்டினால் விடை என்ன? ஐம்பத்தொன்று அல்லவா?'' என்றார்.

- பாஸ்கரன்



பொழுதுபோக்காகப் பேசுவதற்கும் வம்பு பேசுவதற்கும் வித்தியாசம் இதுதான்: நான்கு பெண்கள் சேர்ந்தால் பேச்சு தொடங்குகிறது. அதில் ஒருவர் எழுந்து போனதும் வம்பு தொடங்குகிறது.

– ஹெர்ப் ஷ்ரைனர்
(எஸ். எல். எஸ்.)

மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?

''மாஸ்கோவுக்கு நான் சென்றிருந்த போது மாணவர்களுக்கு லெனின் உபதேசிப்பதாக ஒரு படம் சுவரில் தீட்டப்பட்டிருந்ததைக் கண்டேன். அதில் 'மாணவர்கள் என்ன செய்ய வேண்டும்?' என்ற கேள்விக்கு 'முதல் காரியம் நீங்கள் படிக்க வேண்டும். இரண்டாவது காரியம் நீங்கள் படிக்க வேண்டும். மூன்றாவது காரியமும் நீங்கள் படிக்க வேண்டும்' என்று லெனின் கூறியதாக எழுதப்பட்டிருந்தது'' என்று மாஸ்கோவில் தமக்கு ஏற்பட்ட ஓர் அநுபவத்தைச் சுட்டிக் காட்டுகிறார் நேருஜி.

- வீ. சம்பந்தம்



விசில் அடிக்கும் மொழி!



துருக்கியைச் சேர்ந்த ''கஸ்கோய்'' என்ற கிராம மக்களின் பாஷை விநோதமானது. இவர்கள் வார்த்தைகளால் பேசுவதே கிடையாது. இவர்கள் ஒருவருக்கொருவர் பேசுவதெல்லாம் 'சீழ்க்கை' மூலமே! இக்கிராமத்துக்குச் சென்றால் எங்கு பார்த்தாலும் சீழ்க்கை ஓசையே கேட்கும். இங்குள்ள குழந்தைகள்கூட வாயால் பேசாமல் சீழ்க்கை மொழியிலேயே வாக்குவாதம் செய்கின்றனர்.

இவர்களின் பலவித சீழ்க்கைகளுக்குப் பலவித பொருள்கள் உண்டு. உச்ச ஸ்தாயியில் சீழ்க்கை ஒலி கேட்டால் ''குழந்தை பிறந்திருக்கிறது; அல்லது யாரோ இறந்து விட்டார்கள்; யாரோ விருந்தாளிகள் வந்துள்ளனர்'' போன்ற பல பொருள்கள் உண்டு. இக்கிராமத்தின் ஜனத்தொகை ஐந்நூறு. இந்த விநோத பாஷை இங்கு பல நூற்றாண்டுகளாகப் பழக்கத்திலிருக்கிறதாம்.

தகவல்: வி. ந. ஸ்ரீதரன்

நான்கு விரற்கடை வித்தியாசம்!



அக்பரின் சபா மண்டபத்திலே ஒரு நாள். அறிவாளிகள் குழுமியிருந்தனர். சபையோரைப் பார்த்து அக்பர் கேட்டார்: 'பொய்க்கும் மெய்க்கும் இடையில் உள்ள தூரம் என்ன? விடை தெரிந்தவர் கூறலாம்!'

சபையில் அமைதி தவழ்ந்தது. அறிவாளிகள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டே மௌனமாக இருந்தனர். பீர்பல் என்ற அரசவை விதூஷகர் எழுந்து பேசினார்.

''நான்கு விரற்கடை தூர வித்தியாசம்!''

''எப்படி?''-அக்பர் ஆவலுடன் கேட்டார்.

''அரசே! காதால் கேட்பது பொய். கண்ணால் காண்பது மெய். எனவே, பொய்க்கும் மெய்க்கும் உள்ள வித்தியாசம் காதுக்கும் கண்ணுக்கும் உள்ள தூரம். அதாவது நான்கு விரற்கடை தூரம்!'' என்றார் பீர்பல்.

ஆரவாரத்தால் சபா மண்டபமே கலகலத்தது.

-எம்.ஆர்.

உப்புக் குறைக்கும் வழி!

தக்காளி சூப் அல்லது அதுபோன்ற வேறேதேனும் ரசத்தில், உப்பு கூடி விட்டதென்றால், இல்லத்தரசிகள் என்ன செய்யலாம்? உப்பு கூடிய வஸ்துவில் உருளைக் கிழங்கைப் போட்டு விட வேண்டும். உருளைக்கிழங்கு ஓரளவுக்கு வெந்தானதும், அதன் தோல் உப்பை அப்படியே உறிஞ்சி விட்டிருப்பதைக் காணலாம்.



- ''சுரையா''

நகைச்சுவை இழக்கிலேம்!

பிரபல அமெரிக்க நகைச்சுவையாளர் மார்க்டுவெய்ன் பிரிட்டிஷ் அரசாங்கம் விதித்த ஒரு வரியைக் கண்டித்து விக்டோரியா மகாராணிக்கே ஒரு கடிதம் எழுதினார். கடிதத்தில் தம்மை அறிமுகப் படுத்திக் கொள்ளும் முறையில், ''நான் உங்களைப் பார்த்ததில்லை; ஆனால் உங்கள் மகன் வேல்ஸ் இளவரசரை நான் சந்தித்ததுண்டு. ஸ்டிராண்ட் வீதியில் ஓர் ஊர்வலத்துக்கு முன்னால் அவர் போய்க் கொண்டிருந்தார். நான் பஸ்ஸில் இருந்து பார்த்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சந்தித்ததுதான்!'' என்று கிண்டலாகக் குறிப்பிட்டிருந்தார்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர் மார்க் டுவெயின் இங்கிலாந்துக்கு விஜயம் செய்தார். அப்பொழுது ஏழாம் எட்வர்ட் (முன்னாள் வேல்ஸ் இளவரசர்) சக்கரவர்த்தியாகி யிருந்தார். மார்க் டுவெயினை அரசவையில் சக்கரவர்த்தியிடம் அறிமுகம் செய்துவைக்க ஏற்பாடாகியிருந்தது.

ஆனால் அறிமுகம் ஆரம்பமாவதற்கு முன் சக்கரவர்த்தியே முந்திக்கொண்டு ''உங்களை மீண்டும் சந்திப்பதில் நான் பெரிதும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்றார் புன்முறுவலோடு.

மார்க் டுவெய்ன், ''இல்லையே! தங்களைச் சந்திக்கும் பாக்கியம் இதற்குமுன் எனக்குக் கிடைத்ததில்லையே!'' என்று இடைமறித்தார்.

''என்ன மிஸ்டர் டுவெய்ன், அதற்குள் மறந்துவிட்டீர்களே! நான் ஸ்டிராண்ட் வீதியில் ஓர் ஊர்வலத்துக்கு முன் சென்று கொண்டிருந்தபோது நீங்கள் ஒரு பஸ்ஸில் இருந்து கொண்டு...!''



அப்பொழுதுதான் மார்க் டுவெயினுக்கு உதயமாயிற்று, விக்டோரியா மகாராணிக்குத் தாம் ஒரு காலத்தில் எழுதிய கடிதத்தை அவர் தம் மகனிடம் காட்டிச் சிரித்திருக்கிறார் என்று!

தகவல்: பிலால்


பாண்ட்ஸ்
ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர்
POND'S
சொப்பன சுந்தரியின் வதனப் பொலிவை உங்களுக்கு அளிக்கும்
பாண்ட்ஸ் ட்ரீம்ஃப்ளவர் ஃபேஸ் பவுடர் சீராகப் படிந்து முகத்திலுள்ள சிறு குறைகளை மூடி மறைக்கிறது...முகத்தைப் பளிச்சென்று வைக்கிறது! உங்கள் சரும நிறத்திற்கேற்றபடி தேர்ந்தெடுக்கப் பலவித வண்ணங்களில் கிடைக்கின்றது.
சீஸ்ப்ரோ - பாண்ட்ஸ் இன்கார்ப்பொரேடட்
(வரையறுக்கப்பட்ட பொறுப்புடன் யு.எஸ்.ஏ.வில் இணைக்கப்பட்டது)

JWT-P-3290

பொல்லாத காசுகள்

பாலுவின் அப்பா ஒரு காப்பி ஹோட்டல் வைத்திருந்தார். தினந்தோறும் அதிகாலையில் எழுந்து ஹோட்டலைக் கவனிக்கப் போய்விடு வார் அவர். ஒரு நாள் அவருக்கு முக்கிய மான வேலை இருந்தது. அதனால் பாலு வைக் கொஞ்ச நேரம் தம் 'கல்லா' மேஜைக்கு அருகில் உட்கார்ந்து ஹோட்டல் வியாபாரத்தைக் கவனிக்கச் சொன்னார். பாலுவுக்குச் சந்தோஷம் பிடிபடவில்லை; பெருமை தாங்கவில்லை. அப்பாவின் நாற்காலியில் அமர்ந்து வேலையைக் கவனித்தான்.

அந்தச் சமயம் பார்த்து, எவனோ காப்பி குடிக்க வந்தவன் அசோக சக்கரம் போட்ட ஐம்பது பைசா நாணயத்தை மேஜையில் அலட்சிய மாக வைத்து விட்டு மீதிச் சில்லறை வாங்காமல் போய் விட்டான். பாலுவுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. அவன் ஏமாந்து விட்டதாக எண்ணிச் சந்தோஷப் பட்டான்.

அப்பொழுது பாலுவின் அப்பா ஹோட்டலுக்கு வந்தார். பாலு பெருமையுடன் "அப்பா, ஓர் ஆசாமி காப்பி சாப்பிட்டு விட்டு ஐம்பது பைசா நாணயத்தை மேஜை மேல் வைத்து மீதிச் சில்லறையைக்கூட வாங்கிக் கொள்ளாமல் போய் விட் டான்!" என்று சந்தோஷத்தோடு சொன்னான்.

"அப்படியா! எங்கே அந்த ஐம்பது காசு?" என்று கேட்டார் பாலுவின் அப்பா.

"இதோ, அப்பா!" என்று பாலு அந்த ஐம்பது காசை அப்பாவிடம் காட்டினான்.

பாலுவின் அப்பா அந்தக் காசைப் பார்த்ததும் திடுக்கிட்டார். அது செல்லாக் காசு. உடனே அவருக்குக் கோபம் வந்து விட்டது. "நீ கெட் டிக்காரன், ஏமாறமாட்டாய் என்று நினைத் தேன். சுத்த முட்டாளாயிருக்கிறாயே! இந்தச் செல்லாக் காசை நீதான் மாற்றிக் கொண்டு வர வேண்டும்...!" என்று கண்டிப்பாய்ச் சொல்லி விட்டார். பாலு அசடு வழிய அந்த நாணயத்தை வாங்கிக் கொண்டான்.

அன்று மாலை பாலு வெளியே புறப்பட் டான். அந்த நாணயத்தை எப்படி மாற்று வது, யாரிடம் மாற்றுவது, யாரை ஏமாற்று வது என்று யோசித்துக் கொண்டே தெரு வில் போய்க் கொண்டிருந்தான். அப் பொழுது அவன் நண்பன் கண்ணன் எதிரே வந்தான். பாலுவும் அவன் அருகில் சென்றான். கண்ணன் சட்டென்று நின் றான்; கீழே உற்றுப் பார்த்தான்; பிறகு பாலுவைப் பார்த்தான். அதற்குள் அவனை நெருங்கி விட்ட பாலு அவன் உற்றுப் பார்த்த இடத்தையே பார்த் தான். அங்கே ஓர் ஐம்பது காசு நாணயம் இருந்தது. உடனே பாலு தன் காலை அதன் மீது வைத்து மறைத்துக் கொண்டு, "கண்ணா, என்ன பார்க்கிறாய்? என்னத்தை யாவது தவற விட்டு விட்டாயா?" என்று அக்கறையோடு கேட்டான்.

உடனே கண்ணன், "ஆமாண்டா பாலு, கையிலே ஐம்பது காசு வைத்துக் கொண்டிருந்தேன். கீழே விழுந்துவிட் டது" என்றான் கீழே பார்த்துக் கொண்டு.

அந்த ஐம்பது காசின் மேலேயே பாலு தன் காலை வைத்துக் கொண்டிருப்பது கண்ணனுக்குத் தெரியவில்லை.


பாலு மிகவும் சாமர்த்தியமாகக் கீழே குனிந்து தேடுவது போல் நடித்துத் தன் கையிலிருந்த ஐம்பது காசு நாணயத் தைக் கீழேயிருந்து எடுத்தது போல் எடுத்து, "இதோ!" என்று கூறிக் கண்ணனின் ஜேபியில் போட்டான்.

"நன்றி" என்று சொல்லி நடையைக் கட்டினான் கண்ணன். கொஞ்ச தூரம் சென்றதும் கண்ணன் தன் ஜேபியில்



பாப்பா மலர்

ஆர்.பி.நாபன்



"பாருடீ, உன் மகனே! வீட்டிலே சோறு வடிக்க நாலணாக் காசு இல்லே, இவன் பெரிய ராஜாவாட்டம் சினிமாவுக்குப் போய் விட்டு வராண்டி, உதவாக்கரை...!"

"அவன் சினிமாவுக்குத்தான் போனான்னு உங்களுக்கு எப்படித் தெரியும்?"

"என்னடி அப்படிக் கேட்டுப்புட்டே? அவன் எனக்கு முன் சீட்டிலேதானேடி குந்திக்கிட்டிருந்தான்!"

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

கைவிட்டு, பாலு போட்ட நாணயத்தை எடுத்துப் பார்த்தான். அவன் முகம் வாடி விட்டது. வாடாமல் என்ன செய்யும்? அந்த ஐம்பது காசுதான் செல்லாக் காசாயிற்றே!

அதை எப்படியாவது செல்ல வைத்து விடுவது என்று தீர்மானம் செய்து கொண்டான் கண்ணன்.

பாலுவுக்கு ஒரே ஆனந்தம். செல்லாக் காசு கைவிட்டுப் போய் நல்ல காசு கிடைத்து விட்டதென்றால் அவனுக்குச் சந்தோஷமாய் இருக்காதா? கண்ணன் தன் பார்வையிலிருந்து மறைந்ததும் பாலு தன் காலடியிலிருந்த ஐம்பது பைசா நாணயத்தை எடுத்து நன்றாய்த் துடைத்துப் பார்த்தான்.

அவ்வளவுதான்; அவன் முகம் வாடி விட்டது. ஏன்? என்ன காரணம்? அதுவும் ஒரு செல்லாக் காசுதான். ஆனால் இது தலை போட்ட ஐம்பது காசு. பாலு சற்று யோசித்தான். 'பரவாயில்லே. அப்பாவை ஏமாற்ற இது போதும்.' பாலுவுக்கா தெரியாது?

நேரே ஹோட்டலுக்குப் போனான் பாலு. அப்பா வேலைக்காரனைத் திட்டிக் கொண்டிருந்த சமயம் பார்த்து, கல்லாவில் ஐம்பது பைசா நாணயத்தைப் போட்டு விட்டுச் சில்லறையாக ஐம்பது பைசா நாணயங்களை எடுத்துக் கொண்டான். பிறகு அப்பாவைப் பார்த்து, "இதோ, அப்பா! அந்தச் செல்லாத காசை மாற்றி விட்டேன்!" என்று கூறி அப்பாவிடம் ஐம்பது பைசாச் சில்லறையைக் கொடுத்து விட்டான்.

அப்பா அவனை ரொம்பவும் பாராட்டினார். முதுகில் தட்டிக் கொடுத்தார்.

அன்று இரவு பணத்தை எண்ணிப் பார்த்த போது பாலுவின் தகப்பனார் கையில், தலை போட்ட ஐம்பது பைசா நாணயம் அகப்பட்டது. அவர் திகைத்தார். தாமே அதைக் கவனியாமல் யாரிடமிருந்தோ வாங்கிவிட்டதாக நினைத்தார். எப்படியாவது அதை யாரிடமேனும் தள்ளிவிட வேண்டும் என்று தீர்மானித்து அக்காசைத் தனியாகக் கல்லாப் பெட்டியில் போட்டு வைத்தார்.

மறுநாள் கண்ணன் ஹோட்டலுக்கு வந்தான். நல்ல கூட்டம். பாலுவின் அப்பா கண்ணனைப் பார்த்து விட்டார். "என்னடா கண்ணு, என்ன வேண்டும்?" என்று கேட்டார்.

"எட்டணாவுக்குச் சில்லறை வாங்கிக் கொண்டு வரச் சொன்னார் அப்பா...." என்று கூறி அசோக சக்கரம் பொறித்த செல்லாத ஐம்பது காசை நல்ல பக்கம் தெரியும்படி மேஜை மேல் வைத்தான்.

பாலுவின் அப்பா சட்டென்று அதை உள்ளே போட்டுவிட்டு, சில்லறை தேடுவது போல் நடித்து, "கண்ணு, சில்லறை இல்லேயேடா!" என்று சொல்லித் தனியாக வைத்திருந்த தலை போட்ட செல்லாத காசை நல்ல பக்கம் தெரியும்படி கண்ணனிடம் கொடுத்தார். கண்ணன் கவனியாமல் அந்தக் காசை வாங்கிப் பையில் போட்டுக் கொண்டு விட்டான். தெருவில் இறங்கிக் கொஞ்ச தூரம் போனதும் அதை எடுத்துப் பார்த்து அது வேறொரு செல்லாத காசு என்றறிந்து வியப்படைந்தான். 'நேற்றுத் தெருவில் கிடைத்ததும் செல்லாக் காசு. அதை மாற்றப் போனால் கிடைத்ததும் செல்லாத காசே! இந்தப் பொல்லாத காசுகள் இரண்டும் என்னையே சுற்றுகின்றனவே.....!'

"கிரீச்....." என்ற சத்தம் கேட்டுக் கண்ணன் தன் சிந்தனையிலிருந்து விடுபட்டுத் தன்னைச் சுற்றிக் கார்களும், பஸ்களும் நிற்பதைப் பார்த்து, பயந்து தாவிக் குதித்து உயிர் தப்பினான்.

ஆனால் அந்தச் செல்லாக் காசு எங்கே? கண்ணன் துள்ளிக் குதித்தபோது அது எங்கேயோ விழுந்து விட்டது. 'பீடை தொலைந்தது' என்று எண்ணி நிம்மதியாக வீடு போய்ச் சேர்ந்தான் கண்ணன்.

அங்கே பாலுவின் அப்பா, செல்லாத தலை போட்ட காசைப் பார்த்துத் திடுக்கிட்டார். 'மறுபடியும் இது இங்கே எப்படி வந்தது!' என்று யோசித்தார். உடனே பாலுவை அழைத்து, "பாலு, நீ ரொம்பக் கெட்டிக்காரனாயிற்றே! நேற்றும் இதே மாதிரி ஐம்பது காசை மாற்றிக் கொண்டு வந்தாயே. இதையும் மாற்றிக் கொண்டு வா" என்று கூறிச் செல்லாக் காசைக் கொடுத்தார்.

பாலு வாங்கிக் கொண்டு வாசலுக்கு ஓடிய ,வேகத்தில் வாழைப்பழத் தோலில் காலை வைத்து, வழுக்கி, ஒரு பல்டியடித்தான். அந்த ஐம்பது காசு நாணயம் சாக்கடைக்குள்ளே விழுந்து விட்டது.

அந்தச் செல்லாத காசுகள் சேர வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேர்ந்து விட்டன. தொலையட்டும். ஆனால் அந்தச் செல்லாத காசுகள் மிகவும் பொல்லாத காசுகள் இல்லையா?


விருந்து என்றால் HMV Playboy
விருந்திலே முக்கியத்துவம் கொண்டது இசை. பிளேபாய் இதை தரவல்லது. விருந்திற்கு உயிர் கொடுக்கும் இந்த அடக்கமான ரிகார்ட் பிளேயரில் உங்களுக்குப் பிடித்த இசைத் தட்டுக்களை—பிரபலமான 78 ஆர்.பி.எம். இசைத்தட்டுக்கள் முதல் இன்றைய நவீன பிளாஸ்டிக் இசைத் தட்டுக்கள் வரை (ஈ.பி. இசைத் தட்டுக்கள்—12 நிமிடம் பாடக்கூடியது; எல்.பி. இசைத் தட்டுக்கள்—50 நிமிடம் பாடக்கூடியது) கேட்டு மகிழலாம். இதனாலேதான் பாடத் தெரிந்தவர் முதல் கேட்டு ரசிப்பவர் வரை விருந்தை பிரமாதப்படுத்துவது பிளேபாய் என்கின்றனர்.
அங்கிருக்கும்
எச்எம்வி பிளேபாய்
மாடல் 9161—ஏ.ஸி. மெயின்
மாடல் 9761-A
பாட்டரியால் இயங்குவது
விலை ரூ. 263.20
எக்ஸைஸ் வரி உள்பட
"HIS MASTER'S VOICE"
His Master's Voice
GC-129 TAM

உதகமண்டலத்தின் பளபளப்பும், மினுமினுப்பும் கொடைக்கானலுக்குக் கிடையாது என்பது உண்மையே. ஆனாலும், இயற்கையாக ஓங்கி வளர்ந்துள்ள யூகலிப்டஸ், பைன் மரங்களும், தானே உருவான பாறை வடிவங்களும், குளுமை காட்டும் நீரோடை, நீர்வீழ்ச்சிகளும் கண்ணுக்கு இதமானவை.

உதகமண்டலம் செயற்கைக் கவர்ச்சியுள்ள சினிமா நடிகை என்றால், கொடைக்கானலை இயல்பாகவே அடக்க குணமுள்ள குடும்பப் பெண் என்று சொல்லலாம்.

மிதமான குளிர். இலேசான தூறலுடன் உள்ளத்துக்கு உற்சாகம் ஊட்டும் சூழ்நிலை. யமன்கள் இப்போது கொடைக்கானலில்தான் இருக்கிறார்கள். அவர்கள் இங்கு வந்த காரணம் என். ஸி. ஸி. காம்ப்பை இந்த வருஷம் கொடைக்கானலில் வைத்திருந்ததுதான். 'பரேட்' செய்த நேரம் போக மிகுதியுள்ள நேரத்தை போட் ஹவுஸில் படகு ஓட்டியும், ஏறியிறங்கும் ரஸ்தாக்களில் ஓடியாடித் துரத்தியும் கழித்தார்கள். ஆபத்தான தற்கொலைப் பாறையையும், பில்லர் ராக்ஸ் குகைகளையும், மற்றவர்கள் அலற அலறத் துறுதுறுவென்று எட்டி எக்கிப் பார்த்தும் பொழுதை உற்சாகமாகக் கழித்துவந்தார்கள்.



''ஷாட் ஷாட்!''

பட பட படவென்று கைத்தட்டல்கள் கேட்டன. பாராட்டுக்கள் தொடர்ந்தன.

யமன்களும் பெரியப்பாவும்

பூப்பந்து ஆட்டத்தில் பிரமாதமான ஷாட் ஒன்றை அடித்துவிட்ட பாமா, சுற்றிலும் இருந்தவர்களை நெஞ்சை நிமிரப் பெருமையுடன் பார்த்துவிட்டு அடுத்த ஆட்டத்தை ஆரம்பிக்கப் பந்தையும், மட்டையையும் தூக்கினாள். ''பாமாங்கிறது யாரும்மா?'' என்ற பியூன் கிழவனின் குரல் கேட்டு, தூக்கிய பந்து மட்டை அப்படியேயிருக்க, 'போஸ்' கொடுத்தவாறு பாமா திரும்பிப் பார்த்தாள். ''நான் தான்!'' என்றாள் அவள்.

'' தந்தி வந்திருக்காம். அவசரமா ஐயா கூப்பிடறார்'' என்ற கிழவனைத் தொடர்ந்து. ''சாந்தி, நீ ஆடறியா?''



தன்று பந்தையும், மட்டையையும் தந்து விட்டுப் பாமா சென்றாள். மீண்டும் கைத் தட்டல், பாராட்டுக்கள் கேட்டன. பெருமிதத்துடன் ஆட்டம் தொடர்ந்தது.

பத்து நிமிஷம் கழித்துக் கையில் தந்தியும், முழம் நீளத்துக்குத் தொங்கிய முகத்திலே கலங்கிய கண்களுமாகப் பாமா திரும்பினாள். மற்றவர்கள் பந்தையும், மட்டைகளையும், பேப்பர் பென்சிலையும் போட்டு விட்டுத் திமுதிமுவென்று ஓடி வந்து பிலுபிலுவென்று அவளைச் சூழ்ந்து கொண்டார்கள்.

''ஏண்டி, 'ஙே'ன்னு விழிக்கிறே?'', ''என்னடி தந்தியிலே?'' என்ற விசாரணைகளும், ''யாருக்கென்னடி உடம்பு?'', ''உடனே ஊருக்கு வரச் சொல்லியிருக்கிறதா?'' என்ற கேள்விகளும், ''பதில் சொல்லேண்டி, சனியனே!'', ''வாயைத் திறவேண்டி, மக்கு பிளாஸ்திரி!'' என்ற அதட்டல்களுமாகத் தொடர்ந்தன.

இன்னும் கொஞ்சம் போனால் அந்தப் பாமா 'ஓ'வென்று அழவே ஆரம்பித்துவிடுவாள் போலிருக்கவே, ''ஸ்லை! எல்லாம் கம்மாயிருங்கடி!'' என்று அதட்டினாள் மைதிலி. ''இவளே! தந்தியைக் கொடு, இப்படி!'' என்று அதைப் பிடுங்கிக் கொண்டு படிக்கலானாள். 'திருநெல்வேலி எக்ஸ்பிரஸில் வருகிறேன் — சாந்திநாதன்.'

''ஏண்டி பாமா, யாரடி இந்தச் சாந்திநாதன்?''

''பெ.... பெ....'' என்று ஆரம்பித்த பாமாவைத் திக்கலும் திணறலும் மடக்க, கஷ்டப்பட்டு, ''பெரியப்பா!'' என்று முடித்தாள்.

''பெரியப்பாவா? அவர் வருகிறார் என்றால் ஏண்டி, இப்படி நடுங்கறே! பெற்றோர் தினக் கொண்டாட்டத்துக்கு வருகிறாரோ, என்னவோ?''

''விஷயம் புரியாம பேசாதேடி இவளே!'' ஹெலன் தாமஸ் சொன்னாள். ''அவரை ஏற்கெனவே பார்த்திருக்கேன் நான். முன்கோபக்காரர். தொட்டதுக்கெல்லாம் முணுக்கென்று கோபம் வந்து விடும். அப்பப்பா! எந்த நிமிஷமும் அவர் மூக்கு நுனியிலே கோபம் சுடர் விட்டுத் தெறிச்சுக்கிட்டேயிருக்கும். அவர் வந்தாரோ அவ்வளவுதான்!''

''ஆ.....ங்....'' என்று அழவே ஆரம்பித்துவிட்ட பாமாவைத் தேற்றிவிட்டு, ''அப்படியா?'' என்றாள் மைதிலி.

''அதை ஏன் கேட்கிறே! அவள் பெரியப்பா வரல்லே. நம்ப கொண்டாட்டத்துக்கெல்லாம் முற்றுப்புள்ளி வருகிறது.''

''அட பாவமே! கொடைக்கானலுக்கு வந்தும்கூட கோடை வெப்பம் தீரல்லேயா! இப்ப என்னடி பண்ணறது?''

நின்று போய்விட்ட ஆட்டத்தை மீண்டும் தொடங்கினார்கள். ஏதேதோ யோசனைகள். பந்து சரியாக இயங்காமல் வலையிலும், அவுட்டிலுமாக விழுந்து கொண்டிருந்தது. ''சே!'' என்று எரிச்சலுடன் மைதிலி ஓங்கி அடித்த பந்து 'விர்'ரென்று மேலே பறந்து போய், உயரத்திலிருந்த ரோட்டில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த சேதுவின் பின்னந் தலையை 'டொப்' என்ற ஓசையுடன் தாக்கிவிட்டு அப்பால் போய் விழுந்தது. சட்டென்று 'பிரேக்' போட்டு நின்று, தன் தலையைத் தாக்கியது என்னவென்று சுற்றுமுற்றும் பார்த்து விட்டுத் தலையைத் தடவிக் கொண்டிருந்த சேதுவைக் கண்டதும் மைதிலிக்கு உடனே ஒரு யோசனை பிறந்து விட்டது. ''வாங்கடி!'' என்ற கூவலுடன் தோழிகள் பின்தொடரக் கும்பலாகப் பாதையை நோக்கி வேகமாக ஏறி வரலானாள்.

ஆவேசமாக வரும் பெண்கள் பட்டாளத்தைக் கண்டதும் பந்துக்காகத்தான் சண்டை போட வருகிறார்கள் போலும் என்றெண்ணிக் கையிலிருந்த பந்தை அவர்கள் பக்கமாக வீசி எறிந்துவிட்டு, ஓட்டம் பிடிக்கச் சைக்



கிளைக் கிளப்பினான் அவன். ''சேது! மிஸ்டர் சேது!'' என்ற மைதிலியின் குரல் அவனை பிரேக் போட்டு இழுத்தது. சேது இறங்கித் திரும்பிப் பார்த்தான்.

இறைக்க இறைக்க வந்து நின்ற மைதிலி, ''மிஸ்டர் சேது. ஒரு சின்ன உதவி!'' என்று ஆரம்பித்தாள்.

ஃ ஃ ஃ

''அவசியம் அவர்களுக்கொரு சங்கடம்னு கைகொடுக்க வேண்டியது நம் கடமையில்லையா?'' என்று சுரேஷ்குமார் கேட்டான்.

''அது சரி. அவர் எத்தனை நாளைக்குத் தங்கப் போகிறாராம்?''

''ஒரே ஒரு நாள்!''—சேது சொன்னான். ''ஒரே ஒரு நாள்தான். பழனியாண்டவன் தரிசனத்துக்கு வந்தவர் அப்படியே இங்கே வந்து இவளையும் பார்த்துவிட்டு, அப்படியே குறிஞ்சி ஆண்டவர் கோயிலுக்குப் போய்த் தரிசனமும் பண்ணிவிட்டுப் போகப் போகிறாராம். ஏண்டா, ஒரு நாள்தானே! அட்ஜஸ்ட் பண்ண முடியாதா?''

''அவசியம், பண்ணலாம். அப்புறம் சொல்லு!'' என்று சுரேஷ்குமார் விவரம் கேட்டான். ''அவரைப் பற்றி, அவரது குண விசேஷங்களைப் பற்றி ஏதாவது தகவல் உண்டா?''

''நிறைய இருக்கு.'' சேது அடுக்கினான். ''வருகிறவர் இருக்கிறாரே, நம்ம பாமாவுக்குப் பெரியப்பா. மகா முன்கோபக்காரர். சின்ன விஷயத்துக்கும் முணுக்கென்று கோபம் வந்துவிடும். அப்புறம் பெரும் தீனிக்காரர். இருபத்தி நாலு மணி நேரமும் கொறிப்ப

தற்கு ஏதாவது கொடுத்துக்கொண்டேயிருக்கணும். வாயும் கையும் அசை போட்டுக்கொண்டேயிருக்கணும். அவர் கௌரவமாக எதையாவது வேண்டாம் என்று சொல்லுவார். நாமதான் அவரைக் கெஞ்சிக் கொண்டேயிருக்க வேணும். அதாவது அவராக எதையும் கேட்டு வாங்கியதாக இருக்கக் கூடாது. நம்முடைய வற்புறுத்தலுக்காகவே அவர் ஏற்பதாயிருக்க வேணும். இல்லாவிட்டால் மகாகோபம் வந்து விடும் அவருக்கு.''

''இவ்வளவு பெரிய சங்கடமா?'' என்று யமன்கள் விழிக்க, ''டேய்! இவன்களே!'' என்று சேது கெஞ்சினான். ''எப்படியாவது சமாளிப்போம்டா! எனக்காக இதை நீங்கள் செய்யணும்!''

''ஏண்டா, அவ்வளவு கஷ்டம்?'' என்ற மனோகரன், ''நான் தரேன், அருமையான யோசனை! கோடை ரோடுக்குப் போய் அவரை இங்கு அழைத்து வருவோம். வருகிற வழியிலேயே பெரிய பாறையாகப் பார்த்து எட்டிப் பார்க்கச் சொல்லி விட்டு அவரை ஒரே தள்ளு தள்ளி விடுவோம்!'' என்று முடித்தான்.

''யாவ்!'' என்று மற்றவர்கள் அலறினார்கள்.

''அடேயப்பா மனோகரா! தயவு செய்து உன் வாயையும் வாலையும் மூடிக் கொண்டு சும்மா இருக்கிறாயா? ஏன் சேது, அவர் எந்த ஊரிலிருந்து வருகிறாராம்?'' என்று கேட்டான் சுரேஷ் குமார்.

''ஊரா... உம்?'' என்று யோசித்தான். ''ஆங்! நினைவுக்கு வந்து விட்டது'' என்று துள்ளினான். ''புளித்தலை....புளித் தலை!''

அத்தனை பேரும் மீண்டும் ''யாவ்!'' என்றலற, பீதிக்கு என்ன காரணம் என்று புரியாமல் விழித்தான். ''ஏண்டா? அந்த ஊருக்கு என்ன?''

''ஊருக்கென்னவா? மாலைப் பத்திரிகையைப் பார்க்கவில்லையா நீ?'' என்ற சுரேஷ் குமார் ஒரு இனத்தானை எடுத்துத் தினேஷைச் சற்றே குனியச் சொல்லி அவன் முதுகின் மேல் பேப்பரைப் பிரித்து ஓர் இடத்தை விரலால் சுட்டிக் காட்டிப் படித்தான். ''நூதன ஜுரம்! மக்களுக்கோர் எச்சரிக்கை! புளித்தலைக் கிராமத்திலும் அதன் சுற்று வட்டாரத்திலும் 'டெங்கு' என்று அழைக்கப்படும் நூதன ஜுரம் ஒன்று பரவி வருகிறது. மேலும் பரவாதிருக்கப் பஞ்சாயத்தார் முயற்சி செய்து வருகிறார்கள். இருப்பினும் பொதுமக்கள் கவனமாக இருக்கும்படி எச்சரிக்கப்படுகிறார்கள். ஜுரத்தின் லட்சணங்கள்: முதல் நாள் ஜலதோஷமும் மறுநாள் இலேசான ஜுரமும் அதைத் தொடர்ந்து கடும் ஜுரமும் வரும். மூட்டுக்கு மூட்டு கடும் வலி எடுக்கும்.''

''ஐயோ எனக்கு இப்பவே ஜலதோஷம் பிடிச்சுட்டதே!'' ''எனக்கு மண்டையிடி'', ''எனக்கு ஜுரம் வரும் போலிருக்கு'' என்று கூவலும் கூச்சலும் எழுந்தன. நடுங்கிப் போன சேது சொன்னான். ''எதையாவது செய்யுங்கடா! நான் வாக்குக் கொடுத்துட்டேனே!''

''ஆனாலும் அந்த மைதிலிக்காக நீ எங்களை இப்படி ஒரு தர்ம சங்கடத்தில் மாட்டி வைத்திருக்க வேண்டாம். அவரை ஒரு தனி கூடாரத்தில் தங்க வைப்போம். ஒரு நாள் அநுமதி பெற்று ஊருக்குப்போயிருக்கிறானே சந்துரு, அவன் கூட இருக்கிற சர்க்கரையை நம்ம யார் கூடாரத்திலாவது அழைத்து வைத்துக் கொள்ளலாம். அந்தக் கூடாரத்தை அவருக்குக் கொடுத்து விடலாம். அவர் போனதும் கூடாரத்தை பினாயிலோ, கிருமிநாசினி மருந்தோ போட்டுத் துவைத்து விடலாம். சரிதானா?'' என்று கேட்டான் சுரேஷ் குமார்.

''சரி'' என்று மற்றவர்கள் நெட்டுயிர்த்தவாறு கூறினர். சேது நிம்மதிப் பெருமூச்சு விட மனோகரன் மட்டும் சந்தேகத்தோடு கேட்டான். ''ஏண்டா! கிராமத்துக்குன்னு போனானே சந்துரு! ஒருவேளை இந்தப் புளித் தலைக்குத்தானா?''

''வாயை பினாயில் போட்டுக் கழுவு, போ!'' என்று குமார் அதட்டினான். ''அவன் ஊருக்கும் புளித்தலைக்கும் நூறு மைலிருக்கு. அந்த 'டெங்கு' நூறு மைல் தாண்டி அவன் ஊருக்குப் போறதுக்குள்ளே அவன் புறப்பட்டு இங்கே வந்து சேர்ந்துடுவான்.''

''அப்ப நாளைக்கு பஸ் ஸ்டாண்டில்தான் தவமா?''

''இல்லை. அது வேறு சேறி விழப் போறது. இமே கோடை ரோடு ரயில்வே ஸ்டேஷனுக்கே போய் அழைத்து வருவோம். அதுதான் சுலபம்.''

சுலபமாகச் சொல்லி விட்டார்களே யொழிய, கோடை ரோடுக்குப் போவதிலிருந்து 'விருந்தினர்' தங்க அனுமதி கேட்பது வரையில் மிகவும் சிரமப்பட்டுப் போனார்கள்.

கோடை ரோடில் புசுபுசுவென்று இறங்கிய பிரயாணிகள் கும்பலில் பாமாவின் பெரியப்பாவைக் கண்டுபிடிப்பது அவ்வளவு சுலபமாயிருக்கவில்லை. ''நீங்கள்தானே பாமாவின் பெரியப்பா?'' என்று ஒன்றிரண்டு பேர்களைக் கேட்கப் போய், அவர்கள் இவர்களது வாலிப மெருகையும், இளமைவனப்பையும் கண்டு கண்களைச் சந்தேகத்துடன் இடுக்கவே, பேசாமல் கோடைக்கானலுக்கே திரும்பி விட்டார்கள்.

''இதுதான் ஸார்!'' துணைக்கு வந்த கிராமத்து ஆள் மேலே ரோட்டிலிருந்து சுட்டிக் காட்டினான். ''என்.ஸி.ஸி. படிக்கிற புள்ளைங்க கூடாரம் போட்டுள்ள இடம்!''

சுற்றும் முற்றும் பார்த்த அந்த இளைஞர் விழித்தார். ''என்னப்பா! இங்கே கூட்டிக்கிட்டு வந்துவிட்டுட்டே! உன்னை யார் இங்கே வர வழி காட்டச் சொன்னது?''

''என்னங்க?'' — அந்தக் கிராமத்து ஆளுக்குக் கோபம் வந்து விட்டது. ''நீங்க தானே சொன்னீங்க இங்கிட்டுப் போகணும்னு. இப்பக் கதையை மாத்தறீங்க?''


''ஷட் அப்! நான் சொன்னது கேர்ல்ஸ் காம்ப்பை!'' என்று அவர் சீறினார்.

''ஆங்! இங்கிலீஷிலே இட்டறீங்களா?'' என்று கிராமத்தான் கத்த, அவர் அதட்ட, அவர்களுக்குள் பேச்சு தடித்து விட்டது. பள்ளத்தாக்கில் காம்ப் கொடிக் கம்பத்தைச் சுற்றி அமர்ந்து அரட்டையடித்துக் கொண்டிருந்த யமன்கள் திரும்பிப் பார்த்த

எப்பொழுதும் புத்துணர்ச்சியுடன் இருங்கள்
நாள்முழுவதும் சுறுசுறுப்பாக
இயங்குவதற்கான புத்துணர்ச்சிக்கு
புதிய கால்கேட் லோர்னே டால்க்

புதிய கால்கேட் லோர்னே டால்க்கின் புதுப்பிக்கும் நறுமணம் உங்களைக் குளுமையுடனும், புத்துணர்ச்சியுடனும் வைத்திருக்கிறது.... நாள் முழுவதும் அந்தத் துடியான சுறுசுறுப்பைத் தருகிறது, இளமைத் துடிப்பும், சுறுசுறுப்பும், விளையாட்டுகளில் பிரியமுள்ளவர்கள் குறிப்பாக கால்கேட் லோர்னே டால்க் வியர்வையைத் துரிதமாக கிரகித்துக்கொண்டு தாங்கள், நாள் முழுவதும் உற்சாகமாக இருக்க உதவுவதை நன்கு அறிவார்கள்!

இது சிக்கனமானதும்கூட! உங்கள் குடும்பத்தினருக்கு கால்கேட் லோர்னே டால்க்கை வாங்குங்கள்.—அது சுறுசுறுப்பான நாகரீக மக்களுக்கேற்ற புதியதொரு பரவசமூட்டும் நறுமணம் கொண்டது!







CLT.CJ.TAM


ARYAN
ஆரியன்
டி-லக்ஸ் மற்றும்
ஸ்டாண்டார்ட்
இவையிரண்டும்
தம்ப் க்ரிப்புடன்
கிடைக்கின்றன.
ARYAN TOOTH BRUSH
இந்தியாவின்
தலைசிறந்த
பிரஷ்கள்
ஆரியன்
ஷேவிங் பிரஷ்
Aryan
திறமைக்கும் கீர்த்திக்கும் சின்னம்!

போது, நின்று நின்று திரும்பித் திரும்பி அந்தக் கிராமத்தானைத் திட்டியவாறு இறங்கிக் கொண்டிருந்தார் அவர். அவரைப் பார்த்ததும் புரிந்து விட்டது யமன்களுக்கு.

'பாமாவின் பெரியப்பா' என்று கூறித் திமுதிமுவென்று ஓடிப் பிலுபிலுவென்று அவரைச் சுற்றிச் சூழ்ந்து கொண்டார்கள். ''நமஸ்காரம் ஸார்!'', ''வணக்கம் ஐயா'', ''குட் மார்னிங் ஸார்!'' ''நமஸ்தே ஜி'' போன்ற பலவிதமான வரவேற்புகளைக் கண்டு அவரது சிவந்த மூக்கு மேலும் சிவந்து கோபம் சுடர் விட்டுத் தெறித்தது.

''என்ன கிண்டலா பண்ணறீங்க? வழியை விடுங்க!'' என்று யமன்களை விலக்கி நாலடி நடந்தவர் நின்றார், திரும்பினார். ''உங்களைக் கேட்டாலும் கூடத் தகவல் கிடைக்குமே! கார்ல்ஸ் கேம்ப் எங்கே யிருக்கு?''

''எங்க வீட்டுப் பரண்மேல்'' என்ற மனோகரனை அடக்கிவிட்டுச் சொன்னான் சுரேஷ்குமார்: ''ரொம்ப தூரமிருக்கு ஸார். இப்படியே நேரே போனால் இரண்டு மூன்று மைல் இருக்கும்'' என்றான்.

''ரெண்டுமில்லே மூணுமில்லே. அஞ்சு மைல். 'பில்லர் ராக்'குக்குப் போகிற வழியிலே யிருக்கு'' என்றான் சேது மிகைப்படுத்தி.

''அது சரி!'' என்று பெருமூச்சு விட்ட அவர் நடக்க, ''ஸார், ஸார்!'' என்று அவர்கள் பின்தொடர்ந்து ஓடித் தடுத்தார்கள். ''போனாலும் அவர்களைப் பார்க்க முடியாது ஸார். 'ஆப்ஸர்வேட்ரி' பார்க்க அவர்களை அழைச்சிட்டுப் போயிருப்பாங்க. சாயங்காலம்தான் பார்க்க முடியும்.''

''இது வேறா?'' என்று நாலடி நடந்தவர் நின்றார். ''மிஸ்டர்! இந்த ஊரிலே நல்ல ஹோட்டல் எதுன்னு சொல்ல முடியுமா? வசதியான அறை தேவை.''

''வசதியானதா?'' சுரேஷ்குமார் சொன்னான்: ''இது ஸீஸன். மட்டமான ரூம்கூட இப்ப கிடைக்காது..''

''அப்படியா?''

''தங்கறதுக்கான ஏற்பாடு முழுதும் நாங்க செய்து வைத்திருக்கோம். நீங்க பேசாமல் எங்கள் கூட வாங்க.''

''என்ன?'' என்று திகைத்துப் போனார் அவர். ''நான் வரப்போறது உங்களுக்கு முன்பே தெரியுமா?''



''ஏழு வருஷங்களாக உங்க அம்மா இங்கே, காப்பி குடிச்ச செலவு மட்டும் ரூ. 1,344·78 ஆகியிருக்கிறது.''



''நீ கேட்டபடி என் மகள் விஜயாவை உனக்கே கொடுத்து விடுகிறேன்! ஆனால், ஒரு நிபந்தனை, என்னுடைய மற்ற ஒன்பது பெண்களுக்கும் நீதான் திருமணம் செய்து வைக்க வேண்டும்.''



''ஆபரேஷன் கேஸுக்கு மயக்க மருந்து கொடுக்கச் சொன்னீர்களே டாக்டர்! மருந்து ஸ்டாக் இல்லே. என் பார்வையாலே மயக்கிட்டேன், சார்!''

''துப்பறியும் மேதை யமன் குரூப் என்று கேள்விப்பட்டதில்லையா நீங்கள்?'' சுரேஷ்குமாரின் நெஞ்சு நிமிர்ந்தது பெருமையால். ''பெண்கள் முகாமில் ஆண்கள் விருந்தினராக வந்தால் எங்களோடு தங்க வைப்போம்; அதே போல எங்களுக்கு யாராவது பெண்விருந்தாளி வந்தால் அவர்களோடு தங்க வைப்போம். அப்படி எங்களுக்குள் ஓர் உடன்பாடு!''

''அப்படியா?'' என்றவரின் பெட்டியை ஒருவன் பிடுங்கிக்கொள்ள, அவரைக் கைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார்கள்.

ஒரு மணி இருக்கும்.

''டேய், இவனே!'' தீனன் சொன்னான். ''போய் அவரைச் சாப்பிடக் கூப்பிடேண்டா!''

''நான் மாட்டேன்.'' சேது நடுங்கினான். ''அது வேறு சீறி விழுந்தால்?...''

''என் அருமை இளைஞர்களே!'' கூடாரத்துக்கு வெளியே தலைநீட்டிய அவர் கேட்டார், அருமையாக. ''இங்கே சாப்பிட எதுவுமே கிடைக்காதா? பசிக்கிறதே!''

"உங்களுக்கில்லாத சாப்பாடா! வாங்க ஸார்!" என்று அழைத்துப் போய் ஒரு மேஜையருகே அமர வைத்தார்கள். மேஜை நிறையத் தட்டுத் தட்டாகப் பலகாரங்கள். சிப்பல் நிறையச் சாதம், பெரிய பெரிய பாத்திரங்களில் சாம்பார், ரசம் இருந்தன.

"என் அருமை இளைஞர்களே! நீங்கள் இன்னமுமா சாப்பிடவில்லை?"

"அப்பவே முடிச்சுட்டோமே!"

"சாப்பிட்டாச்சா?" அவர் விழிகள் விரிந்தன. "அப்ப இத்தனையும் யாருக்கு?" என்றவர் "உங்களுக்குத்தான்" என்ற கோரஸ் குரல் வந்ததும் அயர்ந்து போனார். "நான்சென்ஸ்! நானென்ன பகாசுரனா! கொஞ்சம் சாதமும் தயிரும் போதும். மிச்சத்தை எடுத்துக் கொண்டு போங்க."

"அப்படிச் சொல்லக் கூடாது. நாங்கள் சிரமப்பட்டு வாங்கி, பிரியத்தோடு பரிமாறியது. அத்தனையும் நீங்கள் சாப்பிட்டே யாகணும். விடமாட்டோம்."

'ஆ' என்று அச்சமும், ஆச்சரியமுமாகத் திறந்த வாயில் முழுசாக ஒரு லட்டு திணிக்கப்பட்டது. அவர் அலற அலறப் புகட்டி விட்டார்கள். கொஞ்ச நேரத்தில் வயிறு வெடிக்க, கண்கள் பிதுங்க அரை குறை உயிராகி விட்ட அவரைக் கொண்டு வந்து கட்டிலில் போட்டு விட்டார்கள். "நாலு மணிக்கு டிபனும் காப்பியும் கொண்டு வருகிறோம்" என்று அவரை அலறவைத்தனர். "அப்புறமாக நீங்கள் பாமாவைப் பார்க்கப் போகலாம்" என்றார்கள்.

'பாமா' என்று சொல்ல முயன்று பலதரம் வாயைத் திறந்தும், அது 'பாவ்—பாவ்' என்று ஏப்பமாகவே வரக் களைப்புடன் கண்ணுறங்க ஆரம்பித்தார். நான்கு மணிக்கு யமன்கள் வந்து 'காப்பி டிபன் பாமா' என்ற போதும்கூட 'சட், என்ன இது தொல்லை!' என்று மறுபக்கம் திரும்பிப் படுத்து விட்டார்.

அவருக்கு ஜுரமோ என்று சந்தேகப்பட்ட யமன்கள் அட்ஜுடெண்டிடம் சொல்லி டாக்டரை வரவழைத்து அவர் அலற அலற ஊசியும் போட்டு விட்டார்கள்.

அவர் எப்போது கண் விழிப்பாரோ என்று காத்திருந்த யமன்களைக் கடந்து, தோளில் தொங்கிய பிரயாணப் பையுடன் "என்ன நண்பர்காள்!" என்ற கூவலுடன் ஓர் உருவம் கடந்து சென்றது. 'ஹாய்' என்றவர்கள் 'ஹை' என்று பதறியோடி அவனைப் பிடித்து இழுத்தார்கள். "நீ எப்படா வந்தாய் ஊரிலிருந்து?"

அந்த உருவம் சந்துருவேதான்.

"அங்கே கூடாரத்துக்குப் போகாதே! விருந்தாளி தங்கியிருக்கிறார்" என்றவாறு அவனைச் சேதுவின் கூடாரத்துக்கு அழைத்துப் போய், அரட்டையடித்துக் கொஞ்சிக் குலாவினர். அவன் கொண்டு வந்த எள்ளுருண்டையைத் தின்று தீர்த்தனர். அப்போது ஓடோடி வந்தான் மனோகரன். "ஏய்....ய் ...மை...மைதிலி!"

"உதைப்பேன் ராஸ்கல்!" சேதுவுக்குக் கோபம் வந்தது. "மை மைதிலி என்கிறாயா?" என்று சீறி விழ, மனோகரன் "இல்லேடா! மைதிலியும் தோழிகளும் மேலே வந்து நிக்கறாங்க" என்று விளக்கினான். பிரயாணக் களைப்புடன் படுத்திருந்த சந்துருவைத் தவிர மற்றவர்கள் எழுந்து ஓடினார்கள். புரண்ட சந்துருவின் கையில் சிக்கியது ஒரு தினப் பத்திரிகை. படித்துப் பார்க்கலானான்.

"ஸாரி, ப்ளீஸ்" மைதிலி சொன்னாள். "அனாவசியமாகத் தொல்லை தந்துவிட்டோம்" என்றவள், "சேச்சே இதிலென்ன தொல்லை? அவரைப் பத்திரமாக வைத்திருக்கோம்" என்று சேது கூறியதும், தன் சிநேகிதிகளைப் பார்த்து விழித்தாள். "யாரை?"

"பாமாவின் பெரியப்பாவைத்தான். வயிறு நிறையச் சாப்பாடு போட்டுத் திணிச்சு அட்ஜுடெண்டிடம் சொல்லி டாக்டரை வரவழைத்து 'டெங்கு' தடுப்பு ஊசியும் போட்டு விட்டோமே. அவரானால் தூங்கறார், தூங்கறார், அப்படித் தூங்கறார்."

"அட பாவமே!" மைதிலி அனுதாபப் பட்டாள். "யாரைப் போட்டு இப்படிச் சித்திரவதை பண்ணினீர்கள்? இவள் பெரியப்பாவுக்குத்தான் டெங்கு ஜுரம் வந்து புறப்பட முடியவில்லையாமே! தந்தி வந்திருக்கே!"

"அப்படியா? அப்ப இங்கே வந்து தங்கியிருக்கிறவர் யாராம்?" என்றவர்கள் மைதிலி கும்பல் பின்னால் தொடரக் கூடாரத்துக்குள் நுழைந்தார்கள். அஜீரண வயிற்று வலியால் துடித்துக் கொண்டிருந்த அவரை எழுப்பிக் கேட்டார்கள். விசாரித்ததில் அவர் ஓர் எழுத்தாளர் என்றும், கல்லூரி மாணவிகளைப் பற்றி எழுதக் கதை தேடி வந்ததாகவும் தெரிய வந்தது. பாவம்!

விவரம் முழுதும் சொல்லி "எழுந்து இதைச் சாப்பிடுங்க" என்ற, பாமா, அவர் அலறிய அலறலைக் கண்டு ஓடிப் போய் மைதிலியைக் கட்டிக் கொண்டாள். பிறகு "அஜீர்ண மாத்திரை ஸார்; நிமிஷத்தில் குணம் தெரியும்" என்று தைரியமூட்டி மாத்திரையை விழுங்கச் செய்தாள்.

குணம் தெரியத் தெரிய 'டங்'கென்று எழுந்து உட்கார்ந்த அந்த எழுத்தாளர் குதூகலத்துடன் குதித்தார். "ஆகா! கண்டேன் கதையை! யாரையோ எதிர்பார்த்து யாரையோ சித்திரவதை செய்வது அருமையான ப்ளாட். பிரமாதமான ப்ளாட்! இப்பவே போய் எழுதறேன்" என்றவர், பெட்டியைத் தூக்கிக் கொண்டு நடந்தார்.

அசட்டுத்தனத்தைச் செய்ததனால் தலையைச் சொறிந்து கொண்டிருந்தவர்களை அடுத்த கூடாரத்திலிருந்து எழுந்த பெரிய அலறல் நடுங்க வைத்து விட்டது.

அலறியவன் சந்துரு. காரணம், 'டெங்கு' ஜுரத்தைப் பற்றிப் பத்திரிகையில் படித்து விட்டதுதான். "டேய்! டேய்! என்னோடே சில புளித்தலைவாசிங்க வந்திருந்தாங்க. அதிலே சிலர் காய்ச்சல் வந்தவர்களைப் போலவே போர்த்திக் கொண்டிருந்தாங்க. எதுக்கும் எல்லோரும் தடுப்பு ஊசி போட்டுக் கொள்ளுவோம்டா! டாக்டர்.... டாக்டர்!" என்று தலை தெறிக்க ஓடலானான்.

மைதிலியும் சிநேகிதிகளும் அந்தர்த்தியானமாகிவிட, யமன்களுக்குத் தலை சுற்றியது. மூட்டுக்கு மூட்டு வலியெடுத்தது. ஜுரம் அடிப்பது போலிருந்தது.



INVEST IN SMALL SAVINGS


இளமேனியருக்கு
இணங்கிய
உறவு
பியர்ஸ்...
PEARS
TRANSPARENT
SOAP
மென்மை கொஞ்சும் தூய
கிளிசரின் சோப்
தன் தூய்மையைக் கண்கூடாக உணர்த்துவது பியர்ஸ்
PEARS
TRANSPARENT
SOAP

இதோ ஒரு நிறைகுடம்

மாலே நாலரை மணிக்கு மேல் கிண்டி பொறியியல் கல்லூரியின் 'லெக்சர்' ஹாலில் எட்டிப் பார்ப்பவர்களுக்கு ஓர் அதிசயமான காட்சி தென்படும். கச்சம் வைத்து வேட்டி கட்டிக் கொண்டு கர்நாடகமாகக் காட்சி தரும் கச்சலான ஆசாமி ஒருவர், மேடையில் நின்று கொண்டு விரிவுரையாற்றிக் கொண்டிருப்பார். எதிரிலே மாணவர்களாக அமர்ந்திருப்பார்கள் — அந்தக் கல்லூரியில் ஆசிரியர்களாகப் பணி புரிபவர்கள். அவர்கள் கற்றுக் கொள்ளும் பாடம்: சம்ஸ்கிருதம்.

சீரும் சிறப்பும் சொல் வளமும் நிரம்பப் பெற்ற சம்ஸ்கிருத மொழியிலே உள்ள பொறியியல் பற்றிய நூல்களையும், அவற்றில் காணப்படும் விஞ்ஞானக் குறிப்புக்களையும், இந்தப் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கு எடுத்துக் கூறும்படி தொழிற் கல்வி டைரக்டர் திரு முத்தையன் அவர்களால் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கும் அந்த நபர்தான் திரு எஸ். என். ஸ்ரீராம தேசிகன் அவர்கள்.

தொண்டை மண்டலத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஸ்ரீராமதேசிகன் கல்வி பயின்றதென்னவோ முழுக்க முழுக்க ஆந்திர மாநிலத்தில்தான். சம்ஸ்கிருத மொழியில் சிரோமணி பட்டம் பெற்றுள்ள இவர் பட்டம் எதுவும் பெறாமலே தேர்ச்சியும், புலமையும் பெற்றிருக்கும் மொழிகள்: தமிழ், ஆங்கிலம், இந்தி, தெலுங்கு. ஐந்து மொழிகளிலும் ஒன்றிலிருந்து இன்னொன்றுக்குச் சுவை குன்றாமல் மொழிபெயர்க்கும் ஆற்றல் படைத்திருந்தாலும், பிற மொழிகளிலிருந்து வடமொழியில் நூல்களை மொழி மாற்றம் செய்யும்போது ஏற்படும் உற்சாகம் மற்ற மொழி மாற்றங்களின்போது ஏற்படுவதில்லை என்கிறார். அதற்குக் காரணம், ''வடமொழியின் மீது நான் கொண்டிருக்கும் தீவிரப் பற்று மட்டுமல்ல; சம்ஸ்கிருதம் ஒன்றின் மூலம்தான் பாரத மக்களை இணைத்துப் பிணைக்க முடியும் என்று நம்புகிறேன்'' என்கிறார்.

பத்திரிகைகளிலே அந்தக் காலம் முதல் (''1940-லே என் முதல் கட்டுரை பிரசுரமாகியது...'') இந்தக் காலம் வரை கட்டுரைகளும், விமரிசனங்களுமாக எழுதி வரும் இவர், திருப்பாவை, பாரதியாரின் பாஞ்சாலி சபதம், ஞான ரதம், கம்பராமாயணம் (பால காண்டம்) ஆகியவற்றை சம்ஸ்கிருதத்தில் அழகுற மொழி பெயர்த்திருந்த போதிலும் பெருமைப்படுவதென்னவோ, திருக்குறளை வடமொழியில் மொழிபெயர்த்தது குறித்துத்தான்!


வேலையில்லாமல் இவர் கஷ்டப்பட்டுக் கொண்டிருந்த போது தஞ்சை சரஸ்வதி மகால் நூல்நிலையத்தில் உடனடியாக ஓர் உத்தியோகம் வாங்கித் தந்த பேராசிரியர் கல்கி அவர்களிடம், தாம் சென்னையிலேயே இருந்து சம்ஸ்கிருதத்துக்குத் தொண்டு செய்து முன்னுக்கு வரப் போவதாகக் கூறி வேலையை மறுத்தது இவர் நெஞ்சுறுதியைக் காட்டினாலும் இன்னும் நெஞ்சில் உறுத்திக் கொண்டிருக்கிறது! ''எஞ்சினியரிங் காலேஜில் போய்க் கட்டுக் குடுமியும் தானுமாக நீர் லெக்சர் செய்கிறீரா? பேஷ்! பேஷ்!'' என்று சொல்ல இன்றைக்குக் கல்கி அவர்கள் இல்லையே என்று வருந்துகிறார்.

1942ம் ஆண்டில் தஞ்சையில் நடந்த ஒரே ஒரு நாடகத்தில் — ஸ்ரீ வேதாந்த தேசிகன் எழுதிய 'சங்கல்ப சூர்யோதயம்'— இவர் ஸ்ரீ தேசிகன் வேடம் தாங்கி நடித்திருக்கிறார். இவருக்கு அந்தப் பாத்திரம் கிடைக்கக் காரணம் என்ன?..... ''ஸ்ரீ வேதாந்த தேசிகன் குள்ளமாக, பார்ப்பதற்குக் கொஞ்சம் அழகற்றவராக இருப்பாராம்!.....'' என்கிறார் ஸ்ரீராம தேசிகன் சிரித்துக் கொண்டே.

இலக்கியம், நாடகம் என்றால் அடுத்த படியாக சினிமாவும் மனத்தில் தோன்றுகிறதல்லவா? இந்தப் பன்மொழி அறிஞர் அந்தத் துறையிலும் கொஞ்ச நாட்கள் பணியாற்றியதுண்டு; (காலஞ்சென்ற) பிரகதி ஸ்டுடியோவின் கதை இலாகாவில். இவர் திரைக் கதை அமைத்து வசனம் எழுதிய படம் மாளவிகா. (சம்ஸ்கிருத 'மாளவிகாக்னிமித்திர'த்தின் தழுவல்) படம் என்ன ஆயிற்று?... ''4000 அடிகளுக்குள்ளேயே பிராணனை விட்டு விட்டது...!''

சம்ஸ்கிருத மொழி ஆராய்ச்சி, மொழி பெயர்ப்பு, பல மொழிகளில் கட்டுரைகளும், விமரிசனங்களும் எழுதுவது — இவையே திரு ஸ்ரீராம தேசிகனின் அன்றாட அலுவல்கள். இவர் எழுதியுள்ள புத்தகங்களை எல்லாப் பல்கலைக்கழக நூல் நிலையங்களிலும் வாங்கலாம் என்று பல்கலைக் கழக மானியக் கமிஷன் சிபாரிசு செய்திருப்பதால், புத்தகம் விற்பதில் அவ்வளவாகச் சிரமம் இல்லையென்றாலும் புத்தகத்தை வெளிக் கொணர்வதற்குள் உயிர் போய் உயிர் வந்து விடுகிறது என்கிறார் இவர். பின் எப்படிச் சமாளிக்கிறார்? சம்ஸ்கிருத வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்ட சிலரது நன்கொடைகள் மூலம்தானாம்.

திரு ஸ்ரீராம தேசிகன்



நாற்பத்து நான்கு வயது நிரம்பப் பெற்ற இவருக்கு எட்டாவது வயதில் திருமணம் ஆகியது. ஒன்பதாவது வயதில் இன்னொரு திருமணம் செய்து கொண்டார். அப்படி இரண்டாவது முறையாகக் கைப்பிடித்தது சம்ஸ்கிருதத்தை!

— முகுந்தன்


உங்கள் கூந்தலின் உண்மையான
அழகை வெளிப்படுத்த
கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
COLGATE
HAIR OIL
பளபளப்புடனும், அடர்த்தியுடன் இளமைத் துடிப்போடும் விளங்கும் நீண்ட கூந்தலின் ரகசியம் தினந்தோறும் குளிக்குமுன் மயிர்க் கால்களிலும், கேசத்திலும் கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் தேய்த்துக்கொள்வதே என்பதை லக்ஷக்கணக்கான குடும்பத்தினர் அறிந்திருக்கின்றனர். அதன் உன்னதமான நறுமணத்திலும் நீங்கள் பரவசமடைவீர்கள்... கால்கேட் காஸ்டர் ஹேர் ஆயில் உங்கள் கேச வளர்ச்சிக்கு உதவுவதைக் கண்டு நீங்களே ஆனந்தமடைவீர்கள்!
அதன் பரவசமூட்டும் நறுமணத்தை உங்கள் குடும்பத்தினர் விரும்புவர்
எகானமி சைஸ் வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்
கால்கேட்
பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில்
இப்பொழுது
கால்கேட் பெர்பியூம்டு கோகோனட் ஹேர் ஆயில்


புகழ்பெற்ற பிட் வைரம்

'ராகம்'

வைரங்களின் வரலாறு 3

இந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட வைரங்களில் பழம் பெருமை வாய்ந்தது கோஹினூர்; மிகப் பெரியது பிட் வைரம். அது கண்டெடுக்கப்பட்ட பொழுது அதன் எடை 410 காரட். குல்லினன் என்கிற வைரம் ஆப்பிரிக்காவில் 1905ம் ஆண்டு கண்டெடுக்கப்படுவதற்கு முன்னால் பிட் வைரந்தான் மிகப் பெரிய வைரமாகக் கருதப்பட்டு வந்தது. இவ்வைரத்தின் வரலாறும் ருசிகரமானது.

மசூலிப்பட்டணத்துக்கருகே இருபது மைல் தூரத்திலிருந்த வைரச் சுரங்கமொன்றில் ஒரு சாதாரணக் கூலியாளால் இவ்வைரம் 1701ம் ஆண்டில் கண்டெடுக்கப் பட்டது. அதை அவன் அடைந்தபொழுது தனிமையில் இருந்தான். அதை அவன் உடனுக்குடன் சுரங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்திருக்க வேண்டும். ஆனால் அதை ஒப்படைக்க அவனுக்கு மனமில்லை. சுரங்கத்தை விட்டு வெளியேறும் பொழுது அவனைச் சோதிப்பார்களே, என்ன செய்வது? அவனுக்கொரு புத்திசாலித்தனமான யோசனை தோன்றியது. தன்னுடைய காலில் அவன் தானாகவே ஒரு வெட்டுக் காயத்தை உண்டாக்கிக் கொண்டான். அதைச் சுற்றிக் கட்டிக் கொண்ட துணிக்குள் அவ்வைரத்தை மறைத்து வைத்துக் கொண்டான். அவன் சுரங்கத்தை விட்டு வெளியேறிய போது, அவன் காலில் சுற்றப்பட்டிருந்த ரத்தக் கறை படிந்த துணிக்குள் பெரிய வைரமொன்று ஒளிந்து



கொண்டிருக்கிறது என்பதை யாரும் சந்தேகிக்கவில்லை.

அவ்வைரத்தைக் கடத்திச் செல்லும்வரையில் மிகவும் தைரியமாக நடந்து கொண்ட அவனுக்கு மனத்தில் பயம் தோன்றி விட்டது. தன்வசம் வைரம் இருப்பது தெரிய வந்தால் தனக்கு மரண தண்டனை கிடைக்கக்கூடும் என்கிற பயமோ என்னவோ? அல்லது தான் வைரத்தைத் திருடிக் கொண்டு வந்ததை யாராவது பார்த்து விட்டிருக்கலாம் என்கிற பயமாகவும் இருக்கலாம். வெளிநாட்டுக்கு ஓடி விடுவது என்று அவன் தீர்மானித்துவிட்டான். அவன் நேரே கடற்கரைக்குச் சென்றான். அங்கே ஓர் ஆங்கிலக் கப்பல் நின்று கொண்டிருந்தது. அந்தக் கப்பலின் தலைவனை அணுகிய கூலியாள் தன்னைப் பத்திரமாக வேறொரு தேசத்துக்குக் கொண்டு போய் விட்டால் தன்னிடம் இருக்கும் வைரத்தை அவனுக்குக் கொடுத்து விடுவதாகக் கூறினான். கப்பல் தலைவன் ஒப்புக் கொண்டான். கூலியாளை ஏற்றிக் கொண்டு கப்பல் புறப்பட்டது. நடுக் கடல் வந்ததோ இல்லையோ, அவனிடம் இருந்த வைரத்தைப் பிடுங்கிக் கொண்டு அவனைக் கடலில் தள்ளி விட்டான் கப்பல் தலைவன்! அடுத்த துறைமுகத்தில் நங்கூரமிட்ட கப்பல் தலைவன் அவ்வைரத்தைச் சுமாரான விலைக்கு ஜேம்சந்த் என்கிற பிரபல வைர வியாபாரியிடம் விற்றான்.

கப்பல் தலைவனுக்கு அவ்வைரத்தின் உண்மை மதிப்புத் தெரிந்திருக்க வில்லை; ஆனால் வியாபாரிக்குத் தெரிந்தது. அப்பொழுது சென்னையில் தாமஸ் பிட் என்னும் ஆங்கிலேயர் கவர்னராக இருந்தார். ஜேம்சந்த் அவ்வைரத்தை அவரிடம் எடுத்துச் சென்று காண்பித்தான். அதை வாங்கிக் கொள்ள அவர் ஆசைப்பட்டார். கணிசமான விலைக்கு அதை அவரிடம் விற்றான்.

அந்த வைரம் ஜேம்சந்தின் கைக்கு எப்படி வந்தது என்பது பிட்டுக்குத் தெரியுமா. தெரியாதா? தெரிந்துமிருக்கலாம். தெரியாமலும் இருந்திருக்கலாம். அது களவாடப்பட்ட வைரம் என்பதைத் தெரிந்தே அவர் அதை வாங்கியிருந்தால் அது அவருடைய குற்றந்தான்.

அவர் இங்கிலாந்துக்குத் திரும்பிய பொழுது அவர் வசம் பெரிய வைரமொன்று இருப்பது லண்டன்வாசிகளுக்குத் தெரிய வந்தது. அவ்வளவு பெரிய வைரத்தை அவர் நியாயமான விலைக்கு வாங்கியிருக்க முடியுமா என்கிற கேள்வி எழுந்தது. யாரையாவது மிரட்டிப் பிடுங்கிக் கொண்டாரா? அல்லது யாரிடமிருந்தாவது லஞ்சமாகப் பெற்றாரா என்கிற ஐயம் வேறு கிளப்பப்பட்டது. பிட்டுக்கு ஏன் அந்த வைரத்தை வாங்கினோம் என்றாகி விட்டது. தம் நற்பெயரைக் காப்பாற்றிக் கொள்ளத் தனக்கு அவ்வைரம் கிடைத்த விதத்தைப் பற்றி ஓர் அறிக்கையே வெளியிட வேண்டியதாயிற்று!

பிட் அவ்வைரத்தைத் தருந்தபடி வெட்டிப் பட்டை தீட்டினார். அப்பொழுது அதன் எடை 137 காரட்டுகளாகக் குறைந்தது. அது பிட் வைரம் என்கிற பெயரை அடைந்தது.

அப்பொழுது பிரான்ஸை, சிறுவனாயிருந்த இளவரசன் பதினைந்தாம் லூயி சார்பில் டியூக் ஆப் ஓர்லியான் என்கிற பிரபு அரசாண்டு வந்தார். அவர் இவ்வைரத்தைப் பிட்டிடமிருந்து 1717ம் ஆண்டில் 1,35,000 பவுண்டு விலைக்கு வாங்கிக் கொண்டார்! பிரான்ஸுக்குச் சென்ற பிட் வைரம் ரீஜெண்ட் என்கிற பெயரில் அரசாங்கப் பொக்கிஷ சாலையில் பாதுகாக்கப்பட்டது.

பிரஞ்சுப் புரட்சி வந்தது. புரட்சி அரசாங்கம், அரசாங்கப் பொக்கிஷ சாலையைச் சேர்ந்த அபூர்வ நவரத்தினங்கள், நகைகள் முதலியவற்றை மக்கள் கண்டு களிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டது. அந்தப் பொருள்கள் திங்கள்தோறும் அரசமாளிகையின் ஹால் ஒன்றில் காட்சிக்காக வைக்கப்பட்டன.

சமயம் பார்த்துக் கொண்டிருந்த மெய்த் என்கிற பாரிஸ் நகர ரௌடி, ஒரு திங்கட் கிழமை தனது சகாக்களுடன் அந்த ஹாலில் நுழைந்து முக்கியமான நவரத்தினங்களையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு கம்பி நீட்டினான். அவனிடம் சிக்கியவற்றில் பிட் வைரமும் ஒன்று.

மெய்த்தையும் அவனுடைய சகாக்களையும் பிடிக்கப் போலீஸ் அலையாய் அலைந்தது. அவர்கள் பாரிஸிலிருந்து தப்பி ஓடிவிட்டிருப்பார்கள். ஆனால் அவர்கள் ஒளிந்திருந்த இடத்தைக் கார்பின் என்கிற பெண்ணொருத்தி போலீசுக்குத் தெரிவித்துவிட்டாள். இருபது நபர்களைப் போலீஸ் கைது செய்தது. கூரையொன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த பிட் வைரம் மீட்கப்பட்டது. அதைத் தவிர்த்து மற்ற நவமணிகள் சேற்றுக் குழியொன்றிலிருந்து மீட்கப்பட்டன!

பிரான்ஸில் புரட்சி அரசாங்கம் கவிழ்ந்து குடியரசு தலைதூக்கியது. குடியரசு அரசாங்கத்துக்குப் பணமுடை ஏற்பட்டது. பொக்கிஷத்தில் இருக்கும் விலை உயர்ந்த பொருள்களை விற்றுப் பணம் சேகரிப்பது என்று தீர்மானிக்கப்பட்டது. ஹாலந்து நாட்டு அரசாங்கம் பிட் வைரத்தைப் பெருந் தொகை கொடுத்து வாங்கிக் கொண்டது. பிட் வைரம் பிரான்ஸை விட்டு ஹாலந்துக்குச் சென்றது.

பிரான்ஸில் குடியரசு முடிவடைந்து நெப்போலியன் மன்னனானான். ஐரோப்பா முழுவதையும் ஒரு கலக்குக் கலக்க ஆரம்பித்த நெப்போலியன் பிரான்சுக்குச் சொந்தமாக இருந்த பிட் வைரம் பிரான்ஸுக்கே திரும்பி வர வேண்டும் என்று நினைத்தானோ என்னவோ? ஹாலந்திலிருந்து அதை எடுத்து வந்து தனது வாளின் கைப்பிடியில் பதித்துக் கொண்டான். வாட்டர்லூவில் தோல்வி கண்ட நெப்போலியன் கைதியாக்கப்பட்டுப் பிரான்ஸை விட்டு வெளியேற்றப்பட்ட பொழுது அவ்வாள் பிரான்சிலேயே தங்கிவிட்டது.

இப்பொழுது பிட் வைரம், பிரான்சிலுள்ள லோவர் என்னும் இடத்திலுள்ள கண்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

MARRIAGE



Sub-Lieutenant **PREM GANGADAR MHASKE** and Smt. **PRITI MHASKE** (Nee Indira Champagaram Iyer) married at Bombay on 16th May 1966



சென்னை, கானன் டங்கர்லி அண்டு கம்பெனி (மதருஸ்) லிமிடெட் மானேஜிங் டைரக்டர் ஸ்ரீ பி. எஸ். சுப்ரமணியம் அவர்கள் குமாரத்தி சௌ. பாகீரதி (சித்ரா)வுக்கும், கோட்டயம் அட்வகேட் ஸ்ரீ கிருஷ்ண அய்யர் அவர்கள் குமாரரும் எர்ணாகுளம், வருமானவரி அதிகாரியுமான சிரஞ்சீவி கே. சுப்பிரமணியம் அவர்களுக்கும் சமீபத்தில் சென்னையில் திருமணம் சிறப்பாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

திருமணம்



ஓய்வுபெற்ற டிப்டி கலெக்டர் ஸ்ரீ என். வி. சந்திரன் அவர்களின் புதல்வி சௌபாக்கியவதி லீலாவுக்கும் ஸ்டேட் பாங்க் ஆப் பிகானிர் & ஜெய்ப்பூர் சென்னை கிளையைச் சேர்ந்த B. ராஜகோபாலனுக்கும் திருமணம் சென்னையில் அண்மையில் சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!



திருப்பந்துறை ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யர் அவர்களின் ஸ்வீகார குமாரர் சிரஞ்சீவி R. வெங்கட்ராமணி B.Com.க்கும் திருக்கருகாவூர் மிராசுதார் ஸ்ரீ ராமமூர்த்தி அய்யர் அவர்களின் குமாரி சௌபாக்கியவதி மீனாக்ஷிக்கும் திருமணம் சமீபத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

வாழ்க மணமக்கள்!

புலமையும் புலமைக்கு நிகரான எளிமையும் படைத்த திருமுருக கிருபானந்தவாரியார் அவர்களது அறுபதாண்டு நிறைவு முருகனருளின் திருவிழா, அறிவின் பெருவிழா, இறையுணர்வின் இனிய விழா, சொல்லாற்றலின் சிறப்பு விழா, தரும சிந்தனையின் தனிப்பெரும் விழா என்றே கூறலாம். நாடு நகரமெங்கும், பட்டிதொட்டியெங்கும், மூலைமுடுக்குகளெங்கும் அயராமல், தளராமல் பக்திச் சுவை பெருக்கி வரும் வாரியார், ஆஸ்திக உலகின் ஆதார ஸ்தம்பங்களில் ஒருவராக மதிக்கத் தக்கவர். கந்தன் கருணை பெற்ற கவிவாணர் மரபையும் சிவனருட் செல்வர்களின் திருக்கூட்டத்தையும் சேர்ந்த இப்பெரியார் தமது 'கந்தன் கருணை', 'சிவனருட் செல்வர்' தொடர்கள் மூலம் கல்கி வாசகர்களின் அருமையான உறவினராகிவிட்டவர். அண்மையில் மணிவிழா கண்ட மற்றொரு முருகனருள் பெற்ற தமிழ்ச் செல்வரின் அழகிய கட்டுரையைப் பிரசுரித்து வாரியார் அவர்களுக்கு நம் அன்பரின் அஞ்சலியையும் அளிக்கிறோம்; 'கோடியில் ஒருவரான இவரது சக்தி கோடியாண்டுகள் பிரகாசிக்க வேண்டும்' என்று வேலாயுதனை வேண்டுகிறோம். அவரது உருவப் படத்தை அட்டைப்படமாக வெளியிடுவதன்மூலம் பெரு மகிழ்வு கொள்கிறோம்.

— ஆசிரியர்

கோடியில் ஒருவர்

கி. வா. ஜகந்நாதன்

"மணியார்டர் வந்திருக்கிறது" என்று தபால்காரர் சொன்னார்.

"எத்தனை?" என்று கேட்டார் ஸ்ரீ வாரியார் அவர்கள்.

"எட்டணா!" என்றார் தபால்காரர்.

"எட்டணாவா!" என்று உடன் இருந்தவர்கள் சிரித்துக் கொண்டே கேட்டார்கள். "எட்டணாவைப் போய் மணியார்டர் செய்த பேர்வழி யார் ஐயா?" என்று ஒருவர் கேட்டார்.

"வயலூரிலிருந்து வந்திருக்கிறது" என்று தபால்காரர் கூறியவுடன் எல்லோருக்கும் ஆவல் அதிகமாயிற்று. திரு கிருபானந்த வாரியார் அவர்கள் வயலூர் முருகனிடம் அளவிறந்த ஈடுபாடுடையவர். அந்த ஊரிலிருந்து வந்ததென்றால், ஏதாவது விஷயம் இருக்க வேண்டும் என்று எல்லாரும் எண்ணினார்கள்.

மணியார்டரை வாங்கிக் கீழே கூப்பனைப் பார்த்தார் வாரியார். "ஆண்டவன் கட்டளைப்படி தாங்கள் செலுத்திய எட்டணாவைத் திருப்பி யனுப்பி யிருக்கிறேன். பெற்றுக் கொள்ள வேண்டும்" என்று இருந்தது. கீழே வயலூர்த் திருக்கோயில் தர்மகர்த்தா திரு தோட்டா ராதாகிருஷ்ண செட்டியார் அவர்கள் கையெழுத்திட்டிருந்தார்.

அதற்குச் சில நாட்களுக்கு முன்புதான் திரு வாரியார் வயலூர் சென்று முருகனுடைய தரிசனம் செய்து விட்டு வந்திருந்தார். அங்கே போயிருந்தபோது, "எட்டணாச் செலுத்தினால் முருகனுக்கு வெள்ளிக் கவசம் போட்டுத்தரிசனம் செய்யும்படி செய்வோம்" என்ற அறிக்கையை அறிந்து எட்டணாச் செலுத்தி வயலூர் முருகனுடைய வெள்ளிக் கவசக் கோலத்தைத் தரிசித்தார். இது இப்போது வாரியார் நினைவுக்கு வந்தது.

"ஆமாம்! நான் செலுத்திய எட்டணாவைத் திருப்பி யனுப்புவானேன்? ஆண்டவன் என்ன கட்டளையிட்டான்?" என்று வாரியாரவர்கள் யோசித்தார். சில நாட்கள் கழித்து உண்மை வெளியாயிற்று.

திரு கிருபானந்தவாரியார் வயலூர் முருகனைத் தரிசித்துவிட்டு வந்த அன்று இரவு திருச்சியில் இருந்த அக் கோயில் தர்மகர்த்தாவாகிய திரு தோட்டா ராதாகிருஷ்ண செட்டியார் ஒரு கனவு கண்டார். ஒரு சாமியார் கனவிலே தோன்றி, "ஏண்டா, எட்டணா வாங்கிக் கொண்டாயே, அதனால் திருக்கோயில் திருப்பணி முடிந்து விடுமா?" என்று கேட்டார். செட்டியாரவர்களுக்கு வயலூரில் நிகழ்ந்தது ஒன்றும் தெரியாது. அவர் மறுநாள் காலையில் பரபரப்போடு வயலூர் சென்றார். பூசை செய்பவர்களை, "நேற்று யாரேனும் இங்கே வந்து எட்டணா செலுத்தித் தரிசனம் செய்து கொண்டாரா?" என்று கேட்டார். பூசகர்கள் வாரியார் வந்த செய்தியைச் சொன்னவுடன், முருகனே தம் கனவில் வந்து கூறியதாக எண்ணி அந்த எட்டணாவை மணியார்டர் செய்துவிட்டார். 'திருப்பணி செய்யும் பொறுப்பையே ஏற்று



முடிக்கத் தக்கவரிடம் இந்த எட்டணையை வாங்கிக் கொண்டு திருப்தி அடையலாமா ?' என்ற குறிப்பை ஆண்டவன் தெரிவித்தான் என்று செட்டியார் எண்ணினார்.

பிறகு வாரியாரவர்கள் திருச்சி வந்தபோது செட்டியார் தம் நண்பர்களுடன் சேர்ந்து வயலூர்த் திருப்பணியை முடித்துத் தரவேண்டும் என்று கூறி தாம் கண்ட கனவைப் பற்றிச் சொன்னார். இறைவன் இட்ட ஆணையாகவே கருதி அவ்வாறே திருப்பணியை நிறைவேற்ற முயல்வதாக ஒப்புக் கொண்டார் வாரியார். 1935-ம் ஆண்டில் வயலூர் ராஜகோபுரத் திருப்பணியைத் 'தொடங்கி முப்பதாயிரம் ரூபாய் செலவில் அப்பணியை நிறைவேற்றிக் கும்பாபிஷேகம் செய்தார்.


முருகப் பெருமானுடைய திருவருளே தம்மை இயக்கி வைக்கிறது என்று நம்பும் வாரியாரவர்களுடைய வாழ்க்கை அற்புதம் நிறைந்த வாழ்க்கை; அருள் நிறைந்த வாழ்க்கை.


வேலூருக்கும் காட்பாடிக்கும் இடையே உள்ள காங்கேய நல்லூரில் திரு மல்லையதாஸ் பாகவதருக்கும் ஸ்ரீமதி கனகவல்லியம்மையாருக்கும் இரண்டாம் புத்திரராகத் தோன்றினார். அவர் பிறந்த திருநாள் 25–8–1906. இந்த ஆகஸ்டு 25-ஆம் தேதி யன்று அறுபதாண்டு நிறைந்து அருளும், பொருளும், கொடையும், நடையும் சிறந்து விளங்குகிறார் திரு வாரியார் அவர்கள்.

இப்போதெல்லாம் புனைபெயர் வைத்துக் கொள்வதில் ஒரு மோகம் இருக்கிறது. கிருபானந்த வாரியார் என்பதும் புனை பெயர் என்று பலர் எண்ணுகிறார்கள். அவருடைய தந்தையார் சோதிடத்தில் வல்லவர். அவர் பிறந்த நட்சத்திரமாகிய சுவாதிக்கு ஏற்றபடி அந்தத் திருநாமத்தை வைத்தார்.

திரு மல்லையதாஸ் பாகவதரவர்கள் இலக்கண இலக்கியப் புலமை பெற்று இன்னிசையும் கற்றுக் கதைகள் பண்ணிக் கொண்டிருந்தார். அதனால்தான் பாகவதர் என்ற பெயருக்கு உரியவரானார். அவர் தம்முடைய புதல்வருக்கு வேண்டிய கல்விப் பயிற்சியைத் தாமே அளித்தார். கிருபானந்தவாரியார் தம் தந்தையாரிடமே யாவும் கற்றார். கூரிய அறிவு படைத்தவராக இருந்ததால் எதையும் விரைவிலேயே கற்றுக் கொண்டார். பாகவதரவர்கள் உபந்நியாசம் செய்யப் போகும் இடங்களுக்கெல்லாம் உடன்சென்று கையேடு படிப்பார். பின்பாட்டுப் பாடுவார். இதனால் அவருடைய கல்வி விளக்கம் பெற்றது. தாமே நூல்களைப் படித்து அறிந்து கொண்டும் வந்தார். கவி பாடும் பழக்கமும் உண்டாயிற்று.

வாரியாருக்கு ஒன்பதாம் வயது நடந்து கொண்டிருந்தபோது அவருடைய நண்பர்களெல்லாம் சேர்ந்து, ''நீ இந்த ஊர்க் கோயிலில் பிரசங்கம்







பண்ணவேண்டும்'' என்று வற்புறுத்தினார்கள். காங்கேயநல்லூர் முருகன் சந்நிதியில் வாரியாருடைய கன்னிப் பிரசங்கம் நடைபெற்றது. அப்போது அவர் கொஞ்சம் தட்டுத் தடுமாறியே பேசினார். ஆனால் சொற்பொழிவாற்றும் அற்புதக் கலைக்கு அன்றே பிள்ளையார் சுழி போட்டாகி விட்டது.

இசையில் இன்னும் அதிகமான பயிற்சி இருந்தால் நல்லது என்று அவருடைய தந்தையார் எண்ணினார். அதற்காகச் சென்னை வந்து வீணைப் பயிற்சி பெற ஏற்பாடு செய்தார். தேன்மடம் வரதாசாரியார் என்ற சங்கீத வித்வான் வாரியாருக்கு வீணை கற்றுத் தந்தார். சிந்தாதிரிப்பேட்டையில் தங்கி அவர் தம் இசையறிவை வளர்த்துக்கொண்டு வந்தார். அப்போது சில சொற்பொழிவுகள் ஆற்றினார். இவ்வளவு இளமையில் அழகாகவும் இனிமையாகவும் உள்ளத்தைக் கவரும் வண்ணமும் அவர் பேசுவதைக் கண்டு யாவரும் வியப்பில் ஆழ்ந்தார்கள். திருப்புகழ்த் தத்துவார்த்தப் பிரசங்கத் தொடரை நடத்த வேண்டும் என்று பலரும் வேண்டிக் கொண்டனர். அப்படியே வாரியார் நடத்தலானார். நாளுக்கு நாள் கூட்டம் பெருகியது. சென்னையில் வெவ்வேறு இடங்களில் பேச அழைத்தார்கள். இசையும் பாவமும் கலந்து பொங்க அற்புதமான சொன்மாரியை வாரியார் பொழியப் பொழிய மக்கள் வெள்ளம் போலத் திரண்டனர். வீணைப் பயிற்சி செய்ய வந்தவர் இப்போது பெரிய சொற் கொண்டலாக விளங்கலானார். ஆனாலும் தந்தையின் கட்டளைப்படி மூன்று ஆண்டுகள் வீணைப் பயிற்சி செய்து முடித்தார். அதற்கு மேல் அவருக்கு நேரம் இல்லை. வெளியூரில் உள்ளவர்கள் அவரை அழைத்துச் சென்றார்கள். எங்கே சென்றாலும் அவருடைய சொற்பொழிவைக் கேட்க ஆயிரக் கணக்கில் கூடினார்கள். 'சமயச் சொற்பொழிவுக்கு இவ்வளவு கூட்டமா?' என்று யாவரும் மூக்கில் விரல் வைத்தார்கள்.

வாரியார் தம்முடைய பத்தொன்பதாம் வயதில் தம் மாமன் மகளான ஸ்ரீமதி அமிர்தலக்ஷ்மியம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். 1935ஆம் வருஷம் திருப்புகழமிர்தம் என்ற மாதப் பத்திரிகையைத் தொடங்கினார். திருப்புகழுக்கு விரிவுரையும், கந்தரலங்காரம் முதலிய நூற்பாடல்களுக்கு விரிவுரையும், கற்பு என்ற தலைப்பில் பல கதைகளும் எழுதி வரத் தொடங்கினார். அந்தப் பத்திரிகை இன்னும் நடந்து கொண்டிருக்கிறது.

பள்ளிக்கூடத்தை மிதியாதவர் வாரியார்; ஆனால் பெரிய கல்லூரிகளால் ஆகாத அறிவு தானத்தை அவர் செய்து வருகிறார். சட்டையே அணியாதவர் அவர்; ஆனால் ஆடையணிகளால் தம்மை அலங்கரித்துக் கொண்ட செல்வர்களும், அதிகாரிகளும் இன்று அவரைத் தெய்வமாகப் போற்றுகிறார்கள். இல்லற வாழ்வில் நல்லொழுக்கத்துடன் வாழும் அவரைத் துறவறம் பூண்ட பெரியவர்கள் இல்லற ஞானி என்று மதித்துப் பாராட்டுகிறார்கள். ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளாகிய ஸ்ரீ சங்கராச்சாரிய சுவாமிகள் வாரியாரிடம் தனித்த அன்பு பூண்டிருக்கிறார்கள். சரஸ்வதி கடாட்சாமிர்தம் என்ற பட்டத்தை வழங்கியருளியிருக்கிறார்கள்.

வாரியார் சொற்பொழிவுகளைச் செய்து செய்து பொருளீட்டி நடத்தி வைத்த கோயில் திருப்பணிகள் ஒன்றல்ல, இரண்டல்ல. முன்பு வயலூர்த் திருப்பணியைப் பற்றிச் சொன்னேன். வயலூரில் கும்பாபிஷேகம் நடைபெற்ற செய்தி பத்திரிகைகளில் வெளியாகியது. ஹிந்துப் பத்திரிகையில் வயலூர்த் திருப்பணி என்பதற்குப் பதிலாக வடலூர்த் திருப்பணி என்று பிழையாக வெளியாயிற்று. ஒரே ஓர் எழுத்துத்தான் பிழை. அதைக் கண்ட அன்பர்கள், ''இது பிழையல்ல. இறைவனே இடும் கட்டளை. நீங்கள் வடலூரில் இராமலிங்க சுவாமிகள் நிறுவிய சத்திய சன்மார்க்க சபையின் திருப்பணியையும் எடுத்து முடிக்க வேண்டும் என்று அவனே சொல்லாமல் சொல்லுகிறான்'' என்றார்கள். அவர்கள் அதைச் சொன்னபோது அந்தத் திருப்பணி உண்மையாகவே நடைபெறும் என்று நம்பினார்களோ, இல்லையோ; சில ஆண்டுகளுக்குப் பின்பு வாரியாரவர்கள் வடலூர்த் திருப்பணியையும் மேற்கொண்டார். அவர் ஒருவரே முன்னின்று பலவகையான இன்னல்கள் வந்தாலும் தளராமல் மூன்றரை லட்சத்துக்கு மேல் பொருளீட்டித் திருப்பணியை நிறைவேற்றிக் கும்பாபிஷேகத்தை நடத்தினார். லட்சக் கணக்கில் அன்று மக்கள் திரண்டிருந்தனர். அன்னம் மலை போலக் குவிந்திருந்தது. பழங்காலத்தில் மன்னர்கள் செய்த அறச் செயல்களை ஒரு புலவர், சொற்பொழிவாளர், சமயப் பிரசங்கி செய்தார் என்றால் அதைவிட ஆச்சரியம் வேறு இல்லை. மன்னர்களுக்கும் அதிகாரிகளுக்கும் நா அசைந்தால் நாடசையும் என்று கூறுவார்கள். இக்காலத்தில் அது பொய்த்து விட்டது. ஆனால் வாரியார் நா அசைந்தால் நாடு அசைகிறது; பல்லாயிரக் கணக்கான மக்களின் உள்ளம் நெகிழ்கிறது. பணக்காரர்களின் பைகள் நெகிழ்கின்றன; அதிகார மிடுக்கும், அகங்காரத் துடுக்கும் உள்ளவர்கள் நெகிழ்ந்து போகிறார்கள். கொடுக்காத லோபியும் நல்ல காரியத்துக்குக் கொடுக்க வேண்டும் என்று எண்ணுகிறான்.

அவர் உலகியலறிவில் சிறந்தவர். அன்றன்று உலகில் நடைபெறும் செய்திகளைப் பத்திரிகைகளின் வாயிலாக அறிந்து கொள்கிறார். அவருடைய பேச்சில் நவரசமும் திகழும். மிகவும் கடினமான கருத்துக்களையும் அழகான உபமானங்களைச் சொல்லி விளங்க வைத்து விடுவார். இயல், இசை, நாடகம் என்ற மூன்று வகைகளையும் அவர் பேச்சில் காணலாம். உலகியலை இடையிடையே சொல்லிக் குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைத்து விடுவார். அவர் பேச்சைக் கேட்கிறவர்கள் இரண்டு நிமிஷங்களுக்கு ஒரு முறை சிரித்தே தீர வேண்டும். மூன்று மணி, நான்கு மணி என்று அலுக்காமல் சலிக்காமல், ஆயிரக் கணக்கான மக்கள் கேட்டுச் சுவைக்கும்படி அந்த நகைச் சுவை


OVALTINE
The Supreme Food Beverage
A scientifically prepared concentration combining the vitalising and energy giving properties of ripe Barley Malt, pure Creamy Milk together with valuable Natural Phosphatides and Vitamins.
EXTRA VITAMIN FORTIFIED



யும், உலகியல் அநுபவங்களும் செய்து விடும். அன்று காலைப் பத்திரிகையில் வந்த செய்தியைப் புராணப் பிரசங்கத்தினிடையே ஒரு சந்தர்ப்பம் உண்டாக்கிக் கொண்டு, குறிப்பாக இணைத்து விடுவார்.

கூட்டத்தில் சிலர் எழுந்தால், ''அவசரமானவர்கள் எழுந்து போகலாம் என்று தசரதர் உத்தரவு போட்டார். சிலர் எழுந்தார்கள்'' என்று கதையோடு இணைப்பார். பிறகு யாருக்காவது எழுந்து செல்லும் துணிவு வருமா?

இளம் பிள்ளைகளை இடையிடையே கேள்வி கேட்டு அவர்கள் கவனத்தை இழுக்கும் புதிய உத்தியை அவர் கண்டுபிடித்திருக்கிறார். சரியான பதில் சொன்னால் ஏதாவது புத்தகம் பரிசு அளிப்பார். அவர்கள் தம்முடைய வாலைச் சுருட்டிக் கொண்டு நம்மை எப்போது கேட்கப் போகிறாரோ என்று அவர் வாயையே பார்த்துக் கொண்டிருப்பார்கள்.

அவர் சொல்லும் உபகதைகளும், உவமைகளும் முழுக்க முழுக்க அவருக்கே உரியவை; தெளிவாகக் கருத்தை விளக்குபவை.

புலாலுண்ணுவதை அவர் கண்டித்துப் பேசுவார். அவர் பேசுவதைக் கேட்டுப் புலாலுணவை விட்டவர்கள் ஆயிரக் கணக்கான பேர்கள் உண்டு. சிலர், ''பசும் பாலைச் சாப்பிடுகிறோமே! அதுமட்டும் கொழுப்பு அல்லவா? அது எப்படிச் சைவமாகும்?'' என்று கேட்பதுண்டு. அதை நினைந்து விடை கூறுவார் வாரியார்: ''பெற்ற தாயின் பாலைக் குழந்தைகள் அருந்துகிறார்கள். அவளுடைய கொழுப்பை உண்ணுகிறார்கள் என்று சொல்வது? இறைவன் இயற்கையிலே அமைத்த நியதி அது'' என்பார்.

பிறருடைய குற்றங்களைச் சொல்லிப் புறங்கூறுவாரை எண்ணி ஓர் உவமை கூறுவார். ''கடைக்காரர் தம்முடைய கடையைப் பூட்டுகிறார். மற்றக் கடைக்காரர்களும் பூட்டுகிறார்கள். இந்த ஆசாமி தம்முடைய கடைப் பூட்டை இழுத்துப் பார்ப்பாரே யல்லாமல் மற்றவர் கடைப் பூட்டுகளை ஒவ்வொன்றாக இழுத்துப் பார்த்துக் கொண்டிருப்பாரா? அப்படிப் பார்த்தால் அவரை என்னவென்று சொல்வது?'' என்பார்.

சிரிக்கவும் வைப்பார்; அழவும் வைப்பார். கடகடவென்று திருப்புகழ்ப் பாக்களை ஒதிப் பிரமிக்கவும் வைப்பார்.

அவர் கூறும் துணுக்குகளை இப்போது பத்திரிகைகளுக்கு அங்கங்கே உள்ளவர்கள் எழுதியனுப்புகிறார்கள். அவருடன் நாலு பேர்கள் இருந்து அவர் பேசுவனவற்றையெல்லாம் சுருக்கெழுத்தில் எழுதிப் பிறகு அவற்றைத் துணுக்குகள் வேறு, உவமைகள் வேறு, கதைகள் வேறாகப் பிரித்து வைத்தால் நான்கு மாதப் பத்திரிகைகளை நடத்தலாம். கவிநயங்களும், நீதி உபதேசங்களும் கணக்கிலே அடங்குமா?

எத்தனையோ பேர்களுக்குப் பொருளுதவி செய்கிறார். இப்போதெல்லாம் எவ்வளவு பணம் பெற்றாலும் அவ்வளவையும் திருப்பணிகளுக்கும் தர்மங்களுக்குமே கொடுத்து விடுகிறார். இதை அவர் விரதமாகவே மேற்கொண்டிருக்கிறார்.

ஔவைப் பாட்டி ஒரு பாட்டுப் பாடியிருக்கிறாள்:

''ஆர்த்தசபை நூற்றொருவர்
ஆயிரத்தொன் றாம்புலவர்
வார்த்தை பதினா யிரத் தொருவர்-
பூத்தமலர்த்
தண்டா மரைத்திருவே
தாதாகோ டிக்கொருவர்
உண்டாயின் உண்டென் றறு''

என்பது அந்தப் பாட்டு. அதன்படி பார்த்தால் திரு கிருபானந்தவாரியார் அவர்கள் சபையேறுவதால் நூற்றில் ஒருவர்; நல்ல புலவராதலின் ஆயிரத்தில் ஒருவர்; பேச்சு வன்மையால் பதினாயிரத்தில் ஒருவர்; வாரி வாரி வழங்குவதனால் கோடியில் ஒருவர் என்றே சொல்ல வேண்டும். அவர் பல்லாண்டு வாழ்க!

இடம் கிடைத்தது எப்படி!

'ரஜினி முகமது கல்லூரி'யின் பிரின்ஸிபால் கங்காதரன் தீவிர சிந்தனையில் ஈடுபட்டிருந்தார். 'புதுமுக' வகுப்புக்கான 'அட்மிஷன்' எல்லாம் முடிந்து விட்டது' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்ட சமயத்தில், தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களில் ஒருவன் அவன் விரும்பிய 'குரூப்' கிடைத்த காரணத்தால் வேறு கல்லூரியில் சேர்ந்து விட்டான்! அந்தக் காலியான இடத்தை நிரப்பவே விண்ணப்ப மனுப் பிரகாரம் இருவரைப் பேட்டிக்கு அழைத்திருந்தார். ஒருவன் மகேஷ்; மற்றவன் சுரேஷ். இருவருமே சரிசமமாக மார்க்குகள் வாங்கியிருந்தனர். கேட்ட கேள்விகளுக்கு இருவருமே சரியாகப் பதிலளித்தனர். 'யாரைத் தேர்ந்தெடுப்பது? மகேஷா? இல்லை; சுரேஷா ?' கண்டிப்புக்கும் கண்ணியத்துக்கும் பெயர் போன கங்காதரன் குழம்பிப் போனார்!

'ட்ரிங்.... டிரிங்' மேசையை அலங்கரித்த தொலைபேசி சுநாதம் எழுப்பியது. கங்காதரன் சிந்தனை கலைய, 'ரிஸீவரை'க் கையில் எடுத்தார். ''மந்திரியின் காரியதரிசி பேசுகிறேன். சுரேஷ் நமக்கு வேண்டப்பட்ட பையன். ஐயாவே சொல்லச் சொன்னார்.''

''சரி, பார்க்கலாம்!'' கால்மணி நேரம் கழிந்திருக்கும். தொலைபேசி அலறியது. கங்காதரன் அலுப்புடன் ஃபோனை எடுத்தார். ''புதுமுக வகுப்பில் சீட் காலியாயிருக்காமே! சுரேஷ் என்று ஒரு பையன் வருவான். அவனையே 'செலக்ட்' பண்ணிடுங்கோ !'' கல்லூரிக்கு நிதி உதவிய கனவானின் வேண்டுகோள். ''சரி! பார்க்கலாம்!'' கங்காதரன் தேர்ந்த அரசியல் பிரமுகரைப் போல் பதிலளித்தார்.

மறு நாள் மாலை மகேஷுக்குக் கல்லூரியில் சேர அழைப்பு வந்தது. தன்னைவிட மகேஷ் எந்தவிதத்தில் உயர்ந்தவன், அவனுக்குப் புதுமுக வகுப்பில் இடம் கிடைக்கக் காரணமென்ன என்று மூளையைக் குழப்பிக் கொண்டிருந்தான் சுரேஷ். கங்காதரனுக்குச் சிபாரிசு என்றாலே பிடிக்காது என்பதை அறிந்து கொண்டு, மகேஷ் செய்த சூழ்ச்சியை அவன் எங்கே கண்டான்?

—'மயார்'



திருமுருக கிருபானந்த வாரியார்

15. ''சிவபெருமானும் புறகு''

தத்தன் அரசரைத் தாங்கிப் பிடித்த வாறே, ''சுவாமி! தங்கள் முடிவு இப்படியாகி விட்டதே'' என்று கண் கலங்கினான். ''மன்னர் பெருமானே! அடியேன் என்ன செய்ய வேண்டும்?'' என்று கண்ணீர் மல்கக் கேட்டான்.

உயிர் துறக்கும் நிலையில்கூட மெய்ப்பொருள் நாயனார், ''என் ராஜ்யத்தைக் காப்பாற்று'' என்று சொல்லவில்லை. தம்மைக் கொலை செய்தவர் புறம் விழியைச் சாய்த்துப் பணியாளிடம் கூறுவார்: ''தத்தா! இவர் எவ்வளவு கொடியவராக இருந்தாலும் கொண்ட வேடத்துக்கு மரியாதை கொடுக்க வேண்டும். இவர் என்னைக் கொன்றார் என்று ஊராரும், அரசசேவகர்களும் அறிந்தால் இவரைக் கொல்ல முயற்சி செய்வார்கள். அவ்விதம் இவருக்கு எனது ஆட்களால் எவ்வித இடையூறும் ஏற்படாமல் பாதுகாத்து, நீ உடன் சென்று வழியனுப்பிவிட்டு வா'' என்று கட்டளையிட்டார்.

அறிவும், வீரமும், அரசரது ஆணை கடவாத் திறமும் ஒருங்கேயமைந்த தத்தன் முத்தநாதனை அழைத்துக் கொண்டு வழியனுப்பி வைக்கப் புறப்பட்டான்.

அரசர் பெருமானை அத்தீயவன் கொன்ற செய்தி காட்டுத் தீயைப் போல் ஊரெங்கும் பரவியது. எல்லோர் உள்ளத்திலும் துன்ப வெள்ளம் ஊற்றெடுத்தது. அவ்வெள்ளத்தை வற்றச் செய்து சினக்கனல் கொழுந்து விட்டு எரியத் தொடங்கியது. எங்கும் ஓரே பரபரப்பு. பலர் காலகூட விடம் போல் சீறினர்.

முத்தநாதனைக் கொல்ல நாலாபக்கங்களிலும் வெள்ளம் போல் மக்கள் சூழ்ந்து வந்தனர். அவர்களைத் தடுத்த தத்தன், ''இந்த வேடதாரியை எவ்வித இடையூறுமின்றிக் கொண்டு போய்விட வேண்டும் என்பது மன்னர்பெருமானின் கட்டளை'' என்று கூறினான். அரசரது ஆணைக்கு மதிப்புத் தந்து மக்களும் விலகினர். தத்தன் வாளை ஏந்திக் காவல் செய்த வண்ணம் முத்தநாதனை ஊர் கடந்து, ஆட்கள் அணுக முடியாத கானகத்தில் விடுத்துவந்தான்.

முத்தநாதன் துன்பமின்றி நகர் கடந்த செய்தியை அறியும் ஆர்வத்தினால் பிரிந்து செல்லுகின்ற உயிரைச் செல்லாத வண்ணமாகத் தாங்கிக் கொண்டிருந்தார் மெய்ப்பொருள் நாயனார். மன்னர் பெருமானிடம் வந்து விரும்பிய செய்தியைக் கூறினான்.

நாயனாரின் அகம் குளிர்ந்தது. முகம் பொலிந்தது. ''இன்று எனக்கு ஐயன் செய்த உபகாரம் யார் செய்வார்?'' என்று கூறித் தத்தனை அருள் நிறைந்த பார்வையால் நோக்கினார்; நிறைபெருங்கருணை மிகவும் செய்தார்.

சென்றடி வணங்கி நின்று
''செய்தவ வேடம் கொண்டு
வென்றவற் கிடையூ றின்றி
விட்டனன்'' என்று கூற
''இன்றெனக் கையன் செய்த
தியார்செய்ய வல்லார்?'' என்று
நின்றவன் தன்னை நோக்கி
நிறைபெரும் கருணை கூர்ந்தார்.

அமைச்சர்களையும், உறவினர்களையும், நண்பர்களையும் நோக்கி, ''நீங்கள்

யாவரும் பரவிய திருநீற்றன்பு பாது காத்து உய்ப்பீர்'' என்று பணித்தருளி. அம்பலத்தாடும் எம்பெருமான் பூங்கழலைச் சிந்தை செய்தார். குஞ்சிதபாதஞ் சேர்ந்து பேரானந்தப் பெருவாழ்வு பெற்றார்.

ஃ ஃ ஃ

ஐந்நூறு ரூபாய் கொடுத்துப் பசுமாடு வாங்கி அதற்குத் தீனி போட்டார் ஒருவர். ''நான் வாங்கிய மாடு. ஆதலால் நானே பால் கறப்பேன்'' என்று அவர் செம்பைத் தூக்கிக் கொண்டு போனால் பால் கிடைக்காது. 'பால்' என்பதில் உள்ள கால் போக எஞ்சியுள்ளதுதான் கிடைக்கும். பசு பின்னங் காலைத் தூக்கித் திருச்சாத்து சாத்தினால் வேறென்ன கிடைக்கும்? பசுவினிடமிருந்து பால் கறக்க வேண்டுமானால் அதற்குப் பிரியமான கன்றைத் துணை அழைத்துச் செல்ல வேண்டும். அது போல், சிவபெருமானுடைய திருவருளைப் பெறுவதற்கு அடியவர் துணை இன்றியமையாதது. சிவபக்தியிலும் அடியவரிடம் பக்தி புரிவதே திருவருளைப் பெறுவதற்கு எளிய வழி. அடியவர் பக்தியை விளக்குவது விறன் மிண்ட நாயனாருடைய வரலாறு.

மெய்ப்பொருள் நாயனாரைப் போன்று வேடம் புனைந்த யாவரேயாயினும் அன்பு செய்யும் தன்மையுடையவரல்ல இவர். உண்மையான அடியவர்களையே போற்றும் தகவுடையவர். ''மெய்ப் பத்தர்கள் பால் பரிவுடையார் எம்பிரானார் விறன்மிண்டர்'' என்பது சேக்கிழார் பெருமானின் வாக்கு.

நீர்வளம், நிலவளம், மலைவளம், குடிவளம் முதலிய எல்லா வளங்களையும் உடையது மலை நாடு. சிவபெருமானை வேண்டிப் பெரு மாதவம் புரிந்து பரசு என்ற ஆயுதம் பெற்ற பரசுராமருடைய நாடு அது. தன் தந்தை சமதக்கினியைக் கொன்ற காரணத்தால் இருபத்தோரு தலைமுறை மன்னர் குலத்தை வதைத்த பரசுராமர், அவ்வுதிர நீரால் பிதிர்க் கடன் கழித்தார். பின்னர் கடலால் சூழ்ந்த இவ்வுலகைக் காசிபர்க்குத் தந்துவிட்டு மேற்கடலை அடைந்தார். மழுவினால் கடலை விலகச் செய்து இதனால் மலை நாட்டைப் பெற்றார். அம்மலை நாட்டை வேதியர்க்கு வழங்கி விட்டார் பரசுராமர். வளமை மிக்க அந்த மலை நாட்டில் விளங்கும் பல ஊர்களில் திருச்செங்குன்றூர் சிறந்த பழைமையான ஊர். அந்தத் திருநகரில் உழவுத் தொழிலில் வல்லவரும் வேதாகம நெறியில் ஒழுகுபவருமாகிய வேளாளர்களும், மறைநூல் வல்ல வேதியரும் இனிது வாழ்ந்து வந்தனர்.

அப்பொற் பதியி னிடைவேளாண்
குலத்தை விளக்க அவதரித்தார்:
செப்பற் கரிய பெருஞ்சீர்த்திச்
சிவனார் செய்ய கழல் பற்றி
எப்பற் றினையும் அறஎறிவார்
எல்லை தெரிய ஒண்ணாதார்
மெய்ப்பத் தர்கள்பாற் பரிவுடையார்
எம்பி ரானார் விறன்மிண்டர்

நிலமகளது மலர் முகம் போன்று விளங்கும் திருச்செங்குன்றூரில் வேளாண் குலத்தில் அவதரித்தவர் விறன்மிண்ட நாயனார்.

அகப்பற்று, புறப்பற்று என்ற இரு பற்றுக்களையும் அறவே ஒழித்து உரைக்க வொண்ணாத சிவபெருமானது திருவடிகளைப் பற்றி நின்றார் அவர். நுட்பமான அறிவு நலமும், திட்பமான மன நலமும் படைத்தவர். தணியாத காதலுடன் ஐந்தெழுத்தை ஓதுவார். திருநீறும் கண்டிகையும் பூண்டு சிவ பக்தி செய்து வருவார். நதியும் மதியும் புனைந்த சடைநம்பர் விரும்பி வாழும் திருப்பதிகள் எங்கும் சென்று எம்பிரானை வழிபடுவார். அவ்வாறு



வழிபடும்போது சிவனடியார் திருக்கூட்டத்தை முதலில் தொழுது பின்னரே பரமேசுவரனைத் தொழுவார். அதுவே ஆன்றோர் மரபுமாகும்.

''அடியாருறவு மரன்பூசை
நேசமு மன்புமன்றிப்
படிமிதில் வேறு
பயனுளதோ ?''
''நல்லா ரிணக்கமும் நின்பூசை
நேசமும் ஞானமுமே
அல்லாறு வேறு
நிலேவுளதோ''

என்பார் பட்டினத்துச் சுவாமிகள்.

பொன் கொழிக்கும் அருவி பாயும் மலை நாட்டைக் கடந்து ஏனைய நாடுகளில் சென்று ஆங்காங்குள்ள திருக்கூட்டத்தினரைத் தொழுதும், சிவாலயங்களைச் சேவித்தும், திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் வாழும் திருவாரூரை அடைந்த விறன்மிண்ட நாயனர் புற்றிடங் கொண்ட புராதனராம் புண்ணியரைப் புகழ்ந்து போற்றினர்.

திருவாரூர் திருக்கோயிலில் சிறப்புற்று விளங்குவது தேவாசிரியன் மண்டபம். அத்திரு மண்டபத்தில் அடியார் குழாம் இருந்து அரநாமம் ஓதி அன்பு செய்யும் போது சிவலோகம் போல் விளங்கும். அக் கூட்டத்துள் தாமும் ஒருவராக இருந்தார் விறன் மிண்ட நாயனர்.

நம்பியாரூரர் நாடோறும் பூங்கோயில் சென்று புற்றிடங் கொண்ட திருமூலநாதரை வழிபடும் நியதி பூண்டவர். அதன்படி ஒருநாள் திருக்கோயிலினுட் செல்கையில் தேவாசிரியன் திருமண்டபத்தில் குழுமியிருந்த திருக்கூட்டத்தினரை மனத்தால் தொழுதார்; 'இத் திருத் தொண்டர்கட்கு என்னை அடியேனுகச் செய்யும் நாள்எந்நாளோ?' என்று இறைவரைச் சிந்தித்து, புறவணக்கம் புரியாது நேரே கோயிலினுட் சென்ருர். அடியார் குழாத்தினின்றும் ஒதுங்கிச் சென்ற சுந்தரரை நோக்கிச் சினந்தார் விறன்மிண்டர். ''திருக்கூட்டத்தை வணங்காது ஒதுங்கிச் செல்லும் வன்ரெண்டன் அடியார்கட்குப் புறகு'' என்ருர். அம்மட்டோடும் நிற்கவில்லை அவர். ''சுந்தரரை வலிதில் ஓலை காட்டி ஆட்கொண்ட சிவபெருமானும் புறகு'' என்ருர். 'புறகு அடியவர் பக்கத்தில் அத்துணை உறுதி பூண்டிருந்தார் அவர். அடியவர் பக்தியில் சிறந்த விறன்மிண்டர் இறைவரையும் அவ்வாறு நமக்குத் தேவையில்லை'' என்று கூறியது முறையாகுமோ என வினவலாம். இறைவரது திருவருள் மயமாக நிற்கும் அவருடைய சொல்லும் செயலும் இறைவருடையனவேயாகும்.

விறன்மிண்ட நாயனர் கூறியதைக் கேட்ட சுந்தரர் அஞ்சினர். ஆலமுண்ட நீலகண்டரைச் சிந்தித்து நின்ருர். சிவபெருமான் அவருக்கு, ''தில்லை வாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியேன்'' என்று அடியெடுத்துக் கொடுத்தருளினர். நம்பியாரூரர் திருத்தொண்டத் தொகையைப் பாடித் திருக் கூட்டத்தை வணங்கினர். விறன்மிண்ட நாயனர் சினத்துடன், ''சிவபெருமானும் புறகு'' என்று கூறிய சொல்லே திருத்தொண்டத்தொகை பாடுவதற்கு மூல காரணமாகும். விண்ணும் மண்ணும் உய்ய சுந்தரரைத் திருத்தொண்டத் தொகை பாடுவிக்கும் பொருட்டு இவ்வாறு கூற இவரை இறைவரது திருவருள் தூண்டியது.

சுந்தரரின் திருத்தொண்டத் தொகையைக் கேட்ட விறன்மிண்ட நாயனர் அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார். ''இச் சுந்தரருடைய உள்ளம் அடியாரிடத்திலே பதிந்திருக்கிறது'' என்பதைப் புரிந்து கொண்டு இன்பம் அடைந்தார். அடியவர்பால் அவர் கொண்டிருந்த அளவற்ற பக்தியைக் கண்டு மகிழ்ந்த சிவபெருமான் நாயனரைத் தம்மைப் பிரியாது வணங்கும் சிவ கணங்கட்குத் தலைவராகத் திகழுமாறு அருள் புரிந்தார்.

16. பிரம்மசரியத்தின் எடை

ஞானம் ஒளி மயமானது. அஞ்ஞானம் இருள்மயமானது. ஒளி மார்க்கத்தில் உள்ளவர்க்குச் சுவர்க்கமும்இருள் மார்க்கத்தில் உள்ளவர்களுக்கு நரகமும் கிடைக்கும். உத்தராயணத்தில் இறந்தால் சுவர்க்கமும், தட்சிணுயனத்தில் இறந்தால் நரகமும் என்கிருர்கள். உத்தராயணம் என்பது ஒளி நெறி; தட்சிணுயனம் என்பது இருள் நெறி.

ஞானம் பெற வேண்டுமானல் ஞான சாஸ்திரங்களைப் படிக்க வேண்டும். ஞான சாஸ்திரங்களின் சாரம் பெரிய புராணம். நாம் பெறுகின்ற ஞானமே நம்மை நீதி நெறியில் செலுத்தும் என்கிருர் அருணகிரி நாதர்.

''ஆராபு நீதிவேலு மயிலுமெய்ஞ்
ஞானபி ராம தாப வடிவமும்
ஆபாத னேனு நாளு நினைவது
பெறவேணும்''

YET ANOTHER FEATHER

Sankar Brand Calcium Carbide-the first make of Indian Calcium Carbide to be exported - has added yet another feather to its cap. It now proudly holds the ISI trademark, another tribute to its superb quality.

With the main use of Calcium Carbide in the manufacture of acetylene gas for welding and various other purposes Sankar Brand Calcium Carbide has made itself indispensable to industry at large.


SANKAR BRAND CALCIUM CARBIDE

SOLE SELLING AGENTS :

V. D. SWAMI & CO. PRIVATE LTD.

Calcutta • Madras • Delhi • Bombay

IS 1040



INVEST IN DEFENCE SAVINGS AND SERVE THE NATION.

வாழ்க்கையில் நீதி நெறியினின்றும் பிறழ்ந்து விட்டால் இருள் வழியாக நரகுக்குச் செல்ல வேண்டும்.

அமர்நீதி நாயனார் வரலாறு கோவணத்தின் பெருமையை இன்று எடுத்துக் காட்டுகின்றது. அமர்தல் என்றால் விரும்புதல் என்று பொருள். நீதி இவரை விரும்பி வந்து இவர்பால் தங்கியதால் அமர்நீதி எனப் பெயர் பெற்றவர் இவர்.

சீரில் நீடிய செம்பியர்
பொன்னிநன் னாட்டுக்
காரின் மேவிய களிஅளி
மலர்ப்பொழில் சூழ்ந்து
தேரின் மேவிய செழுமணி
வீதிகள் சிறந்து
பாரில் நீடிய பெருமைசேர்
பதிபழை யாறை

செம்பியர் என்றால் சோழர். அவர்கள் அனைவரும் சிவபெருமானிடம் பக்தி பூண்டவர்கள். காவிரியில், பொன் துகள் உள்ளது என்று கூறப்படுகிறது. அந்தக் காரணம் பற்றியே பொன்னி என்று அழைக்கப்படுகிறது காவிரி. அந்த நதியினால் வளம் பெறும் நாடு பொன்னி நாடு.

சிறப்பு மிக்க சோழ வள நாட்டில் வளமை குன்றாது விளங்குவது பழையாறை. வண்டுகளில் ஒருவகை எல்லாவற்றிலும் உட்காரும். கருவண்டோ தேனைத் தவிர வேறு ஒன்றையும் விரும்பாது. பழையாறை என்னும் அப்பதியில் கரிய வண்டுகள் தேன் உண்டு மகிழ்ந்து இசை பாடும் இனிய பூம்பொழில்கள் சூழ்ந்திருக்கின்றன. செழுமணித் தேரோடும் திருவீதிகளுடன் கூடியது அத்திருத்தலம். என்றும் அழியாது நின்ற பெருமையுடையது அப்பதி.

சிவமணங் கமழும் பழையாறை என்ற அத்திருப்பதியில் அமர்நீதியார் அவதரித்தார். வணிகர் குலத்திலே வந்த அவர், வணிகர் குலத்துக்கு ஏற்றவாறு வாணிபம் செய்து வாழ்ந்தார். விவசாயமும் வியாபாரமும் உலகுக்கு இரு கண்கள் போன்றவை. பலப்பல தேசத்துப் பொருள்களை நிரம்ப வருவித்து ஒருபுறத்தில் குவித்து, குறைந்த லாபத்துக்கு விற்று ஒருசிறிதும் மாறுபாடின்றிச் செய்யும் வாணிபத்தால் மக்கட்கு மிகப் பெரிய நன்மை கிட்டும்.

''வாணிகஞ் செய்வார்க்கு வாணிகம் பேணிப்
பிறவுந் தமபோற் செயின்''

என்பார் திருவள்ளுவர்.

அமர்நீதி நாயனார் பலர்க்கும் பயனுடைய இத்தகு வாணிபம் செய்து அறத்தின் வழியாக நிறைந்த பொருள் ஈட்டினார்.

சிந்தை செய்வது சிவன்கழல்
அல்லதொன் றில்லார்
அந்திவண்ணர்தம் அடியவர்க்
கமுதுசெய் வித்துக்
கந்தை கீளுடை கோவணம்
கருத்தறிந் துதவி
வந்த செல்வத்தின் வளத்தினால்
வரும்பயன் கொள்வார்

''இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க'' என்ற திருவாக்கின்படி இவர் எப்போதும் ''சிந்தை செய்வது சிவன் கழல் அல்லதொன் றில்லார்'' செம்மேனி எம்மானுடைய தொண்டர்கட்கு அன்னமும், ஆடையும், கோவணமும் தந்து சத்துவக்கும் இன்பத்தை அனுபவித்து வந்தார்.

பழையாறைக்குப் பக்கத்தில் உள்ள சிவஸ்தலம் திருநல்லூர். அப்பர் பெருமானுக்கு முக்கட்பரமர் திருவடி சூட்டிய அருமையான தலம் அது. அத்திருநல்லூரிலே அடிக்கடி திருவிழா நடக்கும். திருவிழாச் சமயங்களில் நாயனார் தம் குடும்பத்துடன் சென்று இறைவரைச் சேவிப்பது வழக்கம். அடியார்கள் இருந்து அமுது செய்யும் பொருட்டுத் திருநல்லூரிலே சிறந்த திருமடம் ஒன்று அமைத்தார். திருநல்லூரிலேயே குடியேறி விட்டார் நாயனார்.

பிரம்மசரியத்தின் பெருமையைத் தரும் கோவணத்தின் பெருமையையும் அமர்நீதியாரின் அன்புத் திறத்தையும் உலகத்தினருக்குக் காட்டி அவரை ஆட்கொள்ள வேண்டும் என்று கருணையங் கடவுள் திருவுளங் கொண்டார்.

பிரம்மசாரி வடிவந் தாங்கி வந்தார் இறைவர். ஆண்டவனைக் காண அனைவரும் செல்லுதல் இயல்பு. ஆனால் அடியவரைக் காண வந்தாராம் அவர்! அழகிய சிகை; மூன்று வரிவுடன் திருவுலராத பச்சைத் தருப்பையாற் செய்த பவித்திரம்; முப்புரி நூல்; முஞ்சிப் புல்லால் முறுக்கிய அரைநாண்; வெண்மையான கோவணம்; அறிவுக்கதிர் வீசும் திருமுகம்; கருணை பொழியும் கண்கள்; சிவந்த திருமேனி; அமைதியான தோற்றம் ஆகிய இத்தகைய கோலங்களைக் கொண்டு அடியவர் உள்ளத்திலும், மறை முடியிலும் நீங்காத திருவடியை நிலம் செய் தவத்தால் மண்ணிற்பட நடந்து வருகின்றார்.

(தொடரும்)

இட்டிலிக்குச் சாம்பார்!



நகரத்திலே நாலாவிதப் பொருள்கள் உண்டு தான் - அந்த
நாலாவிதப் பொருள்களிலே இட்டிலி ஒன்றுதான்
சிகரத்திலே ஏறிக் கொள்ள அதுவும் துடிக்குது - நம்ம
சர்க்கார் கூட அதற்கு ஒரு விளக்கம் கொடுக்குது!

இட்டிலி யென்றால் சட்டினி சாம்பார் அதற்கு உறவினர் - இதை
அறிந்து உள்ளார் நாட்டினிலே நமது மரபினர்
தொட்டுக்கொள்ளும் பொருளதற்குக் கட்டணம் போடவோ?-இந்தத்
தொல்லையதால் மக்கள் வசைப் புராணம் பாடவோ?

ஓட்டல்களிலே ஆயிரக்கணக்கில் உற்பத்தியாகுது - அது
உற்பத்தியாகும் இடத்தில் இப்போ இளைத்தும் போகுது
நாட்டில் சில கடைகள் விலையைக் கூட்டியும் விட்டது - இந்த
நகர மக்கள் நெஞ்சில் அது நஞ்சாய்ப் பட்டது!

சாம்பாருக்கு விலையைப் போடல் தீம்பாய் ஆகுமே - இது
சில பண்டத்துக்குத் தொடர்ந்து வரவழியாய்ப் போகுமே
ஏம்பா காப்பிக்குச் சர்க்கரை இல்லை என்றால் அதற்குமே - உடன்
எடுப்பீர் கட்டணம் என்று சொன்னால் நிலைமை குதர்க்கமே!





ஏப்ரல் 29ந் தேதி வெள்ளிக்கிழமைதான் எங்கள் மலேசிய நாட்டுப் பயணத்தின் கடைசி நாள். ஆம்; எங்கட்கு இந்திய அரசு தந்திருந்த பயணச் சீட்டு (Passport) 30-4-66 வரையே செல்லும். எனவே, நாங்கள் 30–4–66ல் இந்திய மண்ணில் இருந்துவிட வேண்டும். ஆனதால் 29–4–66ல் சிங்கபுரத்திலிருந்து புறப்படும் விமானத்தில் வெகு முன்னெச்சரிக்கையுடன் இட ஒதுக்கம் செய்து கொண்டு விட்டோம்.

அன்று காலை எழுந்ததும், அங்குள்ள முருகன் கோயில், மாரியம்மன் கோயில்களுக்கெல்லாம் சென்று வழிபாடு செய்துகொண்டோம். நண்பர்கள் இல்லங்களில் நல்விருந்து அருந்தினோம். ஊரை ஒரு வட்டம் வந்து கண்ணாரக் கண்டு களித்தோம். கடைத் தெருக்களையும் ஒரு நோட்டம் விட்டோம். அவரவரும் சிற்சில பண்டங்களை வாங்கவும் செய்தோம். இந்த நெருக்கடியில் சிங்கபுரம் வானொலி நிலையம் சென்று ஒவ்வொருவரும் இரண்டு மூன்று சொற்பொழிவுகளை, நாடாப் பதிவு (Tape record) செய்துவிட்டு வந்தோம்.

வானொலி நிலையங்கள் இங்கும் சரி, கோலாலம்பூரிலும் சரி வளமாக இருக்கின்றன. ஒரே காலத்தில் பல பேச்சுக்களைத் தனித்தனியே பதிவு செய்து கொள்ள எல்லா வசதிகளும் உள்ளன. யந்திரங்களும் கருவிகளும் நவீனப் பாணியில் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை யெல்லாம் விடப் பேசுகின்றவர்களின் நேர்மையில் நிலையத்தார் வைத்துள்ள நம்பிக்கை இருக்கிறதே, அதைத்தான் நான் பெரிதும் பாராட்டுகிறேன். ''இன்ன பொருளைப் பற்றிப் பேசுங்கள்'' என்று சொல்லிவிட்டு நம்மைப் பேச அனுமதித்து விடுகின்றனர். எழுதிக் கொண்டு போய்த்தான் ஆக வேண்டும் என்ற நிர்ப்பந்தம் எதுவும் இல்லை. பேசுபவர்கட்கு முழுச் சுதந்திரம் தந்துவிடுவதால் பேசுகின்றவர்களும் மிக்க பொறுப்புணர்ச்சியுடன் நடந்து கொள்ளுகின்றனர்.

கோலாலம்பூரில் தொலைக் காட்சி (Television) நிகழ்ச்சி ஒன்றுக்கு அழைக்கப்பட்டிருந்தோம். பேராசிரியர் அ. சீநிவாசராகவன், திரு கி. வா. ஜகந்நாதன், நீதிபதி எஸ். மகராஜன், திரு அ. ச. ஞானசம்பந்தன், பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார் ஆகியவர்களுடன் என்னையும் அழைத்திருந்தனர். அனைவரும் சென்றோம். எங்கட்கு மேக்கப் வேறு செய்து படப்பிடிப்புக் கூடத்தில் அமரச் செய்து, 'பட்டி மண்டபம்' நடத்தப் பணித்தனர். அ.சீ.ரா. அவர்கள் தலைமை வகித்தார். பட்டி மண்டபப் பொருளோ, ''வாழ்வை நெறிப்படுத்துவது சமயநூல்களா? அல்லது இலக்கிய நூல்களா ?'' என்பதாகும். யானும், அ. ச. ஞானசம்பந்தன் அவர்களும் 'இலக்கிய நூல்களே' என்று வாதிட்டோம். மகராஜன் அவர்களும் கி. வா. ஜ. அவர்களும் சமய நூல்களே என்று வாதம் செய்தனர். லெ.ப. கரு அவர்கள் இரண்டையும் தழுவி அல்லது எதிர்த்துப் பேசலாம் என்றனர். அவர்களும் இரண்டையும் தழுவிக் கருத்துக்களை அவ்வப்பொழுது வெளியிட்டுக் கொண்டார். முடிவில் நிலையத்தார்க்குப் பெரிதும் திருப்தி ஏற்பட்டது.

இங்கும், யாருக்கும், எவ்விதக் கட்டுப்பாடுகளும் வரம்புகளும் விதிக்கப்படவில்லை. பேராசிரியர் சீநிவாச ராகவன் அவர்கள் மிக அருமையாக, வாதிடுபவர்களை இயக்கிக் கொண்டிருந்தார். இவற்றிலிருந்து மெய்யாகவே சுதந்திரம் அளித்து விட்டால் அந்தச் சுதந்திரர்கள் எவ்வளவு கவனத்துடனும் பொறுப்புடனும் நடந்து கொள்வார்கள் என்பது தெள்ளத் தெளியப் புலனாயிற்று. இந்த ஏற்பாட்டைச் செய்த திரு இலக்ஷ்மணம் அவர்களைப் பெரிதும் பாராட்ட வேண்டும். ஆனால் எங்கட்கெல்லாம் அரிதாரம் பூசி அமர்த்தியதால் எங்கள் அழகு வளரவில்லை என்றும் குறையத்தான் செய்தது என்றும் கண்டவர்கள் கூறினார்கள். எனக்கு அதில் ஒரு பெரிய மகிழ்ச்சி. என் அழகு குறைந்தது

என்று சொல்லும் பொழுது, 'அப்படியா! அப்படியானால் நம்மிடமும் அழகு நமக்கும் தெரியாமல் ஒளிந்து கொண்டல்லவா இருந்திருக்கிறது?' என்று எண்ணி மன நிறைவு கொண்டேன். அதற்காகவாவது நண்பர் இஷுவனத்தைப் பாராட்ட வேண்டுந் தானே?

29ந் தேதி முழுவதும் இருந்த இடத்தில் இராமல், உண்ணும் நேரம் போக மற்ற நேரம் எல்லாம் ஊரைச் சுற்றிக் கொண்டேயிருந்தோம். என்ன சுத்தமாக இருக்கிறது; எத்துணைக் கார்கள் ஓடிக் கொண்டேயிருக்கின்றன. எங்கு பார்த்தாலும் கடையும், பொருளும் வாணிபமும்தானா? ஹோட்டல்களும், சிற்றுண்டிச் சாலைகளும்தாம் எவ்வளவு அழகாக இருக்கின்றன என்று வியப்படைகிறோம். இங்கே மேல்நாட்டுப் பாணியில் உள்ள சுமார் 16 பெரிய ஹோட்டல்கள் உள்ளன. ஒரு நல்ல ஹோட்டலைப் பார்த்துத்தான் வைப்போமே என்று உள்ளே நுழைகிறோம் என்று எண்ணிக் கொள்ளுங்கள்.


ஒரு பெரிய ஹோட்டல் நம் கண்ணுக்குத் தெரிகிறது. அதைப் பார்க்க உள்ளே போகிறோம். வரவேற்பாளர் நம்மை வரவேற்கிறார். அருமையான ஆசனங்கள் வரவேற்புக் கூடத்தில்; இருக்கிறோம் அதன் மீது. வாய்ப்பு வசதி முதலிய விவரங்களைக் கேட்கிறோம். "இங்கே பலவகை உணவுகள் கிடைக்கும்; எல்லாப் பொருள்களும் கிடைக்கும் கடைகள் இங்கே உள்ளன. மதுக்கூடம் உண்டு; நடன அரங்கு உண்டு; இரவுக் கழகம் உண்டு; எந்த நாட்டுடனும் பேசத் தனித் தொலைபேசியுண்டு; இராப் பகல் எப்பொழுதும் குளிர்பதன வசதியுடன் கூடிய மோட்டார்கள் கிடைக்கும். அடித்தளத்திலே அருமையான படக்கூடமும் உண்டு" என்று அடுக்கிக் கொண்டே போகிறார் வரவேற்பாளர்.


கட்டணங்களைப் பற்றிக் கேட்கிறோம். பிறகு. ஒற்றைப் படுக்கையறைக்கு 20 ரிங்கி முதல் 42 ரிங்கி வரை நாள் வாடகை. இரட்டைப் படுக்கை அறைக்கு நாள் வாடகை 30 முதல் 52 ரிங்கி. ஒற்றைப் படுக்கையுள்ள தொடர் அறை (Suite)க்கு 66 ரிங்கி. இரட்டைப் படுக்கைத் தொடர் அறைக்கு 76 ரிங்கி. பெரும் புள்ளிகள் தங்குவதற்கு என்றுள்ள சந்திப்புக் கூடத்துடன் கூடிய தொடர் அறைக்கு வாடகை 128 ரிங்கிதான் என்று வரவேற்பாளர் சொல்வதைக் கேட்டு நாம் மயக்கம் போட்டு விழவில்லை என்றால் அதற்குக் காரணம் அங்கு செய்யப்பட்டிருக்கிற குளிர்ப்பதன அமைப்புத்தான். "அது கிடக்கட்டும்; ரிங்கி என்றால் என்ன?" என்றுதானே கேட்கிறீர்கள். மலாய் மொழியில் ரிங்கி; தமிழில் வெள்ளி. ஆங்கிலத்தில் மலாயன் டாலர் என்பார்கள். இன்றைய கணக்கில் பார்த்தால் ஒரு வெள்ளிக்குச் சுமார் 2-50 ரூபாய் சம்மாகும்.

இந்த ஹோட்டலுக்கே ஒரு கும்பிடு போட்டுவிட்டு வெளியே வருகிறோம். எங்கு நோக்கினும் பல பல கடைகள். ஆங்காங்கே சில தமிழர் கடைகள். 'நானும்தான் இருக்கிறேன்' என்று சொல்லிக் கொண்டிருந்தாலும் நம் கண்ணையும் கருத்தையும், ஏன், பசையுள்ளவர்களின் பணத்தையும் கவர்வன சீனர் கடைகள்தாம். எந்த நாட்டில், எங்கு உற்பத்தியானாலும், அவை எல்லாம் சிங்கப்பூரில்தான் குடிபுகுந்து விட்டன என்று சொல்லத் தோன்றுகிறது எனக்கு. அனைத்து நாட்டுப் பொருள்களும் இங்கு வருகின்றன. அனைத்து நாட்டு மக்களும் இங்கு வந்த வண்ணமாகவே இருக்கின்றனர். ஆனதால் போக்கும் வரவும் புலப்படாத வகையில் அங்கே வாணிகம் நடக்கிறது. எனவே, சிங்கபுரத்தின் உயிர் நாடி வாணிகம் என்பதில் தவறில்லை; மிகையுமில்லை. ஆனால் அந்த வாணிகத்தின் உயிர் நாடியோ சீனர் கையிலே தான் சிக்கிக் கிடக்கிறது என்றால் அது உண்மையுள் உண்மை. அந்த நாட்டுப் பொருளாதார வாழ்வை வருத்துப் பிடித்துக் காத்து வருவது அந்நாட்டு அரசாங்கமா அல்லது சீ. சி. சி (Chinese Chamber of Commerce) என்னும் சீனர் வாணிகச் சங்கமா என்று மாறி மாறிச் சிந்திக்கவே தோன்றும் நமக்கு.

இந்த நாட்டு (ஆம்; சிங்கப்பூரின்) வாழ்வும், வளமும் வாணிகத்தில்தான் இருக்கிறதென்ற காரணத்தால், வியாபார—வணிகச் சங்கங்கள் (Association of Trade and Commerce) பயணிகள் சங்கம் (Tourist Association) பயணிகள் குழு (Tourist Promotion Board) போன்ற பல்வகை நிறுவனங்களும் போட்டி போட்டுக் கொண்டு எங்கெங்கே என்னென்ன பண்டங்கள் கிடைக்கும் என்பதைப் பற்றி

சிங்கபுர நங்கையர். 1. சேலையுடுத்திய இந்திய மாது. 2, சராங் உடுத்திய மலாய் மாது. 3. செயோங்சம் அணிந்த சீன மகள்.





டைகர்பாம் தோட்டத்தின் நுழைவாயில்

விளக்கக் குறிப்புகள், கையேடுகள் முதலியவற்றை இலவசமாக அளிக்கின்றன.

அத்துடன் விடுகின்றனவா? அங்கே ஜாவகத்தாரின் மலாயரின், தமிழரின், வடஇந்தியரின், சீனரின், ஜப்பானியரின், ரஷ்யரின், பிரஞ்சுக்காரரின், இத்தாலியரின் சுவிஸ் நாட்டினரின் ஆங்கிலேயரின் உணவு வகைகள் எல்லாம் எங்கெங்கே என்னென்ன விலைக்குக் கிடைக்கின்றன என்பனவற்றைக் கூட ஊருக்குள் நுழைந்தவன் உடனே தெரிந்து கொள்ளும்படி செய்து விடுகிறார்கள். அவர்களின் பார்வையிலிருந்து யாரும் தப்பித்துக் கொண்டுவிட முடியாது.

விமானம், கப்பல், வந்ததும் சுங்க அதிகாரிகள் நமக்கு நுழைவு அநுமதி முத்திரையிட்டுத் தந்து நாட்டின் கதவைத் திறந்து விட்டதும் நமக்கு நல்வரவு கூறி வரவேற்பவர்கள் பயணிகள் வளர்ப்புக் குழுவினர், அல்லது பயணிகள் சங்கத்தாராகத்தான் இருப்பார்கள்.

நாம் பல நாட்டுச் சாமான்கள் வாங்க விருப்பம் கொண்டிருக்கிறோம் என்று தெரிந்தால் வாங்குவோர் சுவர்க்கம் (Shoppers' Paradise) என்னும் கையேட்டை நம் கைகளில் இருக்கச் செய்து விடுகிறார்கள். ஊர் சுற்றிப் பார்க்க வேண்டுமா? இடங்கள், செல் முறை, அங்குள்ள சிறப்பு, அவற்றின் வரலாறு, காலம், முதலிய விளக்கங்களுடன் கூடிய மூன்று நான்கு வகையான திட்டங்கள் படங்களுடன்கூடினவாய் நம்மை வந்தடையும். இப்படியே அங்குள்ள அருமைப்பாடுகளை எல்லாம் ஒவ்வொன்றாய் எழுதிக் கொண்டே போவதென்றால் இந்த ஆண்டில் உங்களிடமிருந்து விடைபெற முடியாதவனாகிவிடுவேன். சுருக்கமாகச் சொன்னால் சிங்கப்பூர் உலக நாகரிகம் முழுதும் ஒருங்கிணைந்த தனிப் பெரும் பட்டினமாகும். வாணிக வலு ஒன்றையே நம்பி வளம் பெற வளர்ந்து வரும் சிறப்புடை நகரமான சிங்கப்பூர் தன் நகர்ப்புறங்களையும் சேர்த்துக் கொண்டு தன்னாட்சியுள்ள ஒரு தனியரசாக, உலக நாடுகளில் ஒன்றாக மிளிர்கின்றது. சட்ட ரீதியிலும், ஆட்சி ரீதியிலும் தனித் தனி நாடுகளானாலும் எங்களைப் போன்ற பயணிகளைப் பொறுத்தவரை சிங்கபுரமும், மலேசியாவும் இணைந்தியலும் ஒரு நாடாகவே தோணுகிறது.

இன்னும் சில மணி நேரத்தில் இந்த அருமையான நாட்டிலிருந்து விடைபெற வேண்டியவர்கள் நாங்கள். நண்பர்களும் அன்பர்களும் சிறிதும் பிரிய மனமின்றி எங்களைச் சுற்றிக் கொண்டேயிருக்கிறார்கள். அல்லது நாங்கள் அவர்களைச் சுற்றிக்கொண்டேயிருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆம்; உறவும் நட்பும் அப்படித்தானே ஆட்டி வைக்கும் நம் போன்றவர்களை. அந்தச் சூழ்நிலையிலும் நாம் வந்த பணியை மறக்கலாமா; மறக்கத்தான் முடியுமா? எனவே, கருத்தரங்கு – மாநாட்டின் சிறப்பினைச் சிறிது சிந்தித்து விட்டுக் கட்டுரைத் தொடருக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம்; சரிதானே?

'மலேசியா மாநாடு' என்று நாம் சுருக்கமாக, அல்லது அடக்க ஒடுக்கமாகக் கூறினும் அது ஒரு மாநாடல்ல. சரியாகச் சொல்வதானால் ''தமிழ்த் துறைகளின் உலக ஆராய்ச்சிக் கருத்தரங்கு மாநாடு'' என்பதே பொருத்தமாகும்.

பலர் கூடிப் பேசுவதற்கு எத்தனையோ பெயர்கள் சொல்லப்படுகின்றன. சொற்பொழிவு; உரையரங்கு; பேரவை; மாநாடு; கருத்தரங்கு என்பன போன்ற பற்பல பெயர்களை நாம் அறிவோம். ஒவ்வொன்றும் அததற்கென்று தனி வரம்புகளை உடையன. ஆனால் அவ்வவற்றின் வரையறைகளை நாம் செம்மையாக வகுத்துக் கொண்டோமில்லை. எனவே, அந்நெறியில் நாம் முறையாக நடக்கவும் முடிவதில்லை. எந்தப் பெயரையாவது வைத்துவிட்டு எந்த முறையிலாவது நடத்தி முடித்து விடுகிறோம். ஒன்றைத் தொடங்கும் போது நம் உள்ளத்தில் மலரும் கருத்துக்கேற்பப் பெயரைச் சூட்டி விடுகிறோம். ஆனால் பின்னிலைவுகட்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, செயல்படும் போது, அந்த வரையறைகள் தகர்ந்து விடுகின்றன.

இப்படி நிகழ்வதற்குக் காரணம் யார்? குறிப்பிட்ட ஒரு சாராரை மட்டும் குற்றவாளிகள் என்று நாம் முடிவுகட்டிவிடப் படாது. இதற்குப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டியவர்கள் பலர். நடத்துவோர், பங்கு கொள்ளுவோர், இதற்குப் பலவகையிலும் உதவுவோர், இப்பணியில் ஈடுபட்டு உழைப்போர் முதலிய யாவருமே. இவர்கட்கெல்லாம் மேலாக, ''புது முயற்சி'' என்ற ஒன்றிருக்கிறதே அதன் மீதுதான் பெரும் பழியைச் சுமத்த வேண்டும். அதுதான் 'இப்படிச் செய்தால் தவறாகி விடுமா? அல்லது அப்படிச் செய்தால் சரியாகிவிடுமா?' என்றெல்லாம் தன்னைத் தானே அலட்டிக் கொண்டு அத்தனை குறைகட்கும் வழிகோலி விட்டு விடுகிறது. இதுதான் என் முடிவு. இதை மனத்திற்கொண்டு, இனி நாம் என்ன செய்ய வேண்டும் என்று சிறிது பார்ப்போம்.

கருத்தரங்கு - மாநாடு கூடுவதற்குக் குறைந்தது இரண்டு மாதங்கள் (ஆம் சுத்தமாக அறுபது நாட்கள்) முன்னதாகவே எழுத்



மலேசியக் கன்னியர் (சரவகத்) தேசிய உடையில்

துரைகள் வந்துவிட வேண்டும். அவற்றைவெல்லாம் தகுதியுடைய ஒரு குழு இருந்து ஆய்தல் வேண்டும். தகுதியற்றனவற்றையும் ஏற்கனவே மற்றையோர் வெளியிட்ட கருத்துக்களைத் தமதாக்கி எழுதி யனுப்பியவற்றையும் மறுதளிப்பதில் சிறிதும் தயங்கக் கூடாது. ஏற்றுக் கொண்டனவற்றை ஒரே அளவில், ஒரே தரத்தில், ஒரே புள்ளி எழுத்தில் அச்சிட வேண்டும். சில தனிக் காரணங்களுக்காக அதற்குரியவரே அச்சிட்டுக் கொணர விரும்பினால் அச்சிட வேண்டிய முறைகளைத் தெரிவித்து அச்சிட்டுக் கொண்டு வர அனுமதிக்கலாம்.

எவரெவருக்கு எழுத்துரை வழங்க அழைப்பு அனுப்பப்படுகிறதோ அவரவர்க்கும் பொருளுக்கேற்ப நேர அளவு என்ன என்பதையும் முன்னதாகவே தெரிவித்து விட வேண்டும். மொத்தம் கிடைக்கும் நேரத்துக்கேற்ப உரை வழங்குவோர் தொகையும் இருக்க வேண்டும். இனம் பெருகிவிட்டதென்று நேரத்தைக் குறைத்தல் பாபம். ஒவ்வோர் உரையும் எவ்வளவு நேரத்தைக் கவர்கிறதோ, அந்த நேர அளவில் குறைந்தது பாதி நேர அளவாவது ஐயமகலக் கேள்வி கேட்பதற்கும் அல்லது மறுப்புரைப்பதற்கும் கிடைக்கும்படி வழி வகை செய்ய வேண்டும்.

எல்லா எழுத்துரைகளும் தொகுதி—பகுதிவாரியாகப் பிரிக்கப்பட்டு, எண் பெற்றிருக்க வேண்டும். இந்தக் குறிப்பெண் மாநாட்டுக் கையேட்டிலும், நிகழ்ச்சி நிரலிலும் எழுத்துரைத் தலைப்புக்கு முன் துலக்கப்படவும் வேண்டும்.

எதிர்பாராதவகையில் ஏற்பட்ட தடைகள் போன்ற தனிக் காரணத்தால், நல்ல—பயனுள்ள — எழுத்துரைகள் தாமதமாக வந்தால் அவற்றை ஏற்றுக் கொள்வது முறையே தான். ஆனால் தரமோ—வளமோ இல்லாத எதையும் மறுக்கும் துணிவு நடத்துபவர்கட்கு மிக மிக இன்றியமையாத ஒன்றாகும் என்பதைக் கொஞ்சம் அழுத்தமாகவே வற்புறுத்த விரும்புகிறேன்.

நோக்கர்கள் அனுமதிப்பதில் எண்ணிக்கையை மறந்துவிட வேண்டும். தகுதியை அல்லது தரத்தை அளவாகக் கொள்ள வேண்டும். எக்காரணத்தாலும் நோக்கர்கள் நேரடியாகக் கருத்தரங்கில் பங்கு கொள்ள அனுமதிக்கப்படாது. விவாதத்தில் கலந்து கொள்ளும் தரமுள்ளவர்கள் எழுத்துரை வழங்கா விட்டாலும் அத்தகையவர்களைப் பெருமக்களாகவே ஏற்றுக் கொள்ளல் ஏற்புடைத்தேயாகும். இவற்றையும், இவை போன்ற பிறவற்றையும், கருத்தரங்கு - மாநாட்டுக்கு முன்னதாகவே ஆய்ந்து வரையறை செய்து கொண்டு விட்டால் கூடியவரை யாவும் செம்மையாகவே அமைந்து விடும்.

இத்தகைய கருத்தரங்கு — மாநாட்டைக் கூட்ட வேண்டும் என்ற எண்ணம் அனைத்து நாட்டுத் தமிழாராய்ச்சிக் கழகத்துக்கு ஏற்பட்டது. வேறொரு முறையில் சொன்னால் இத்தகைய கருத்தரங்கு மாநாடுகளைக் கூட்டித் தமிழ் வளர்க்கும் பணிபுரிவதற்கென்றே அ. நா. த. க. ஏற்பட்டிருக்கிறது என்று கூற வேண்டும்.

அ. நா. த. க. இம்முயற்சியில் முனைந்ததும், தங்குமிடம், வரவேற்றுபசரித்தல், பெருமக்களை மகிழ்ஊட்டல் முதலிய உதவிகளைச் செய்து மாநாட்டை நடத்திக் கொடுக்கும் பணியை மகிழ்வுடன் ஏற்றுக் கொண்டவை இரண்டு நிறுவனங்கள். அவை தாம் மலாயாப் பல்கலைக் கழகமும், மலாயா தேசியக் கல்வி (இந்தியப் பள்ளிகள்) வளர்ப்புக் கழகமும் ஆகும்.

மலேசிய அரசும், ஆளுங்கணத்தவரும் கொடுத்த நன்கொடையும் ஆதரவும்



மலாயாவின் மாட்டுவண்டி

மாநாட்டின் பெருமையை நீல நாட்டின. மலாய் நாட்டிலும் சிங்கபுரத்திலும் உள்ள தமிழர்கள் — அதிலும் பாட்டாளி மக்கள்— வழங்கிய நன்கொடை மாநாட்டில் எல்லாம் சிறக்க உதவியது.



திரு செல்வநாயகம்

இம்மாநாட்டுக்கு அடிகோலிய பெருமை யார் யாருக்குப் பெரிதும் உரியது என்பதை முன்பு கண்டோம். இம் மாநாடு இந்த அளவில் நடைபெற்ற தென்றால் அதற்குப் பெரும் பொறுப்பேற்றுக் கொண்டவர் — அரும் பணியாற்றியவர் — திரு வி. செல்வநாயகமே என்பதை நெஞ்சாரச் சொல்ல வேண்டும். இந்தியர் கல்வி வளர்ச்சியில் பேரார்வம் காட்டிப் பெரும் பணியாற்றிவரும் அவர் ஒரு மலாயன் ரயில்வே அதிகாரி. இவர்தான் மாநாட்டு அமைப்புக் குழுவின் பொதுச் செயலாளர்.

இவர்களை யெல்லாம் தமிழார்வமும், நல்ல நெஞ்சும் உள்ளவர்கள் மனமார வாழ்த்த வேண்டும்; நன்றி பாராட்டவேண்டும். இல்லையா? வாழ்க! வாழ்க! என்று மனம் இனிக்க, வாய் மணக்க, வாழ்த்துவோமாக.

இனி நேரமில்லை. நண்பர்களும், கார்களும் வந்து விட்ட பிறகு விமானத் திடலுக்குப் புறப்பட வேண்டியதுதானே? சரியாக இரவு ஆறு மணிக்குத்தான் வீட்டை விட்டுப் புறப்பட்டோம். சாமான்களை எடைபோட்டு, எங்கள் பயண அனுமதிச் சீட்டுகளை எல்லாம் சரி பார்த்துச் சில நிமிடங்களில் விமானத்துக்குப் போகத் தக்கவர்களாக ஆக்கிவிட்டார்கள். எல்லா நண்பர்களிடத்திலும் பிரியாவிடை பெற்றுக் கொண்டு சுமார் 6—45க்கு விமானத்தில் ஏறினோம். சரியாக இரவு ஏழு மணிக்குச் சிங்கபுரத்தை விட்டு வானில் மிதக்கத் தொடங்கி விட்டோம். நல்லஉபசரிப்பு. உண்டிஎல்லாம் தந்தார்கள். இனிய நினைவுகளிலே ஆழ்ந்து கனவுலகிலே மிதந்து கொண்டிருந்த நாங்கள் ஏதோ ஒரு முட்டல் ஒலி கேட்டுத் தன் நினைவு பெற்றோம். ''சென்னை வந்துவிட்டது. அன்பார்ந்த பயணிகளே! நன்றி'' என்று கூறிக் கொண்டே கதவைத் திறந்து விட்டார்கள். விமானக் கூடத்தின் கடிகாரம் ஒன்பது மணியை உணர்த்தியது. என்ன! இரண்டு மணி நேரந்தானா பயணம்? இங்கிருந்து பகல் இரண்டு மணிக்குப் புறப்பட்ட விமானம் சிங்கபுரத்தை இரவு எட்டு மணிக்குத்தானே அடைந்தது? தாய் நாட்டுக்குத் திரும்புகிற களிப்பினாலேஇந்திய விமானம் (கிராமத்துப் போக்கு வண்டி மாட்டைப்போல) இவ்வளவு வேகமாக வந்துவிட்டதா? என்று எண்ணி விடவில்லை. மலாயா நம் நாட்டுக்குக் கிழக்கே சுமார் 1200 மைலில் இருப்பதால் நம்மைவிட இரண்டு மணி நேரம் முன்னதாகவே பொழுது விடிந்து விடுகிறது. எனவே, அங்குள்ள மணிக்கு இரண்டு மணி குறைத்தால்அதுதான் இந்தியமணிஎன்பதைச் சொல்லவா வேண்டும்?

சீன வர்த்தக சபைக் கட்டடம்



சென்னை விமான நிலையத்தில் பல அன்பர்கள் வந்து அன்புடன் மாலை சூட்டி வரவேற்றனர். தாய்நாட்டின் மண்ணில் கால் பட்டதும் உடம்பெல்லாம் ஓர் இன்பவுணர்வு பரவுவதை உணர்ந்தோம். பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவன்றோ ?

நன்றி

மலேசியா மாநாட்டுக்குப் புறப்பட்ட பொழுதோ, அன்றி அங்கிருந்த நாட்களிலோ ஒரு கட்டுரை எழுத வேண்டும் என்று எண்ணினேனில்லை. ஆனால் திரும்பியதும் தலைவர் ராஜாஜியைக் கண்டு செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தேன். அப்பொழுது கல்கி அதிபர் திரு சதாசிவம் அவர்களும் உடனிருந்தார். அவர் மறு நாள், மாநாட்டுக்குப் போய் வந்த விவரங்களைக் கட்டுரையாக எழுத வேண்டுமென்று கேட்டுக் கொண்டார். என்னிடம் குறிப்பொன்றுமில்லை. விவர ஏடுகளும் இல்லை. இருப்பினும் தொடங்கி விட்டேன். தொடங்குமுன்னரே மலேயாவில் உள்ள திருவாளர்கள் பி. எஸ். சுப்பையா, எம். சி. தங்கக் காளீஸ்வரன் போன்ற சில நண்பர்கட்குச் சில விவரங்களும் விளக்கமும் கேட்டெழுதினேன். அவர்கள் அன்புடன் உடனேயே எனக்குத் தகவல் தந்தனர்; படங்கள், புள்ளி விவரங்கள் அனுப்பினர். தமிழ் நேசன் பத்திரிகையும் எனக்குதவிற்று. இவர்கட் கெல்லாம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

நாங்கள் அங்கிருந்த நாட்களில் எங்கட்குப் பல்லாற்றானும் உதவி புரிந்த நண்பர்கள், அன்பர்கள் யாவருக்கும் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறோம். வாழ்க, தமிழ் மொழி; வாழ்க உலகெலாம். அன்புள்ள

சா. கணேசன்

அத்தியாயம் பதினாறு

அவன் மனிதன்

விசுவநாதனை வரவேற்பதற்காக மதுரையில் சந்திரசேகர பாண்டியரும் அரியநாத முதலியாரும் காத்திருந்தனர். அரியநாத முதலியார் தமக்கிட்ட பணிகளை ஒருவாறு பாண்டிய நாட்டில் செய்து முடித்திருந்தார். மதுரைக்குத் தெற்கே கலவரங்கள் நடைபெற்ற பகுதிகளுக்குச் சென்று தம்முடைய இராஜ தந்திரத்தாலும் வீரத்தாலும் அடக்கி வந்தார். மேற்கொண்டும் அவ்வாறு தம்முடன் வந்த இராஜதந்திரிகளையும் வீரர்களையும் சந்திரசேகர பாண்டியரின் தலைமையில் அனுப்பி வைத்தார். சந்திரசேகர பாண்டியரின் வேலையும் ஒருவாறு முடிந்தது. திடீரென்று நாட்டில் வெடித்துக் கிளம்பிய கொந்தளிப்புக்கள் அடங்கி, அமைதி பரவத் தொடங்கியது.

விசுவநாதன் நேரே மதுரைக்கு விரைந்து விடவில்லை. பாண்டிய நாட்டின் வடக்கு எல்லை நகரமாக, வீரசோழனை முறியடித்த பிறகு விளங்கிய திருச்சிராப்பள்ளியில் சில தினங்கள் தங்கியிருந்தான். அதைச் சுற்றிலும் இருந்த திருவரங்கம், திருவானைக்கா முதலிய ஊர்களையும் சுற்றிப் பார்த்தான். குடிமக்களை அழைத்து அவர்களுடைய குறைகளைக் கேட்டறிந்தான்.

மதுரைக்கு வரும் வழியில் இருந்த ஊர்களிலெல்லாம் தங்கி, அவ்வாறே அங்கிருந்த குடிமக்களின் குறைகளையும் விசாரித்தான். தானே நேரில் கண்டறிந்துகொள்ளாமல், தனது ஆட்கள் பலரை நாட்டுக்குள் அனுப்பிச் செய்திகளுடன் மதுரைக்கு வந்து சேருமாறு பணித்தான்.

மதுரைக்கு அவன் வந்தபோது, சந்திரசேகர பாண்டியர் கேட்டுக் கொண்டபடி அவன் அவருடைய அரண்மனையில் தங்குவதற்கு உடன்படவில்லை. "நீங்கள் இந்த நாட்டின் அரசர்; தங்களுடைய அரண்மனையில் ஒரு பகுதியை நான் பகிர்ந்துகொள்வது சரியல்ல. அரண்மனையை அடுத்துள்ள மாளிகைகள் ஒன்றில் நான் வசிக்கிறேன். அது போதும் எனக்கு!" என்றான்.

அவ்வாறே ஒரு மாளிகையைத் தனக்கென்று வைத்துக் கொண்டு, அடுத்தாற்போல் இருந்த மாளிகைகளில் அரியநாத முதலியாரையும் ராமபத்திர நாயக்கரையும் குடியேறச் செய்தான். அரியநாத முதலியாரின் குடும்பம் விஜயநகரத்தில்தான் இருந்தது. ராமபத்திர நாயக்கர் மட்டிலும் குடும்பத்தோடு அவருக்கு விடப்பட்டிருந்த மாளிகையில் குடியேறிவிட்டார்.

விசுவநாதனின் மாளிகையில் அவனும் அரியநாத முதலியாரும் பாண்டி நாட்டின் நிலவரங்களைப் பற்றி ஆலோசிக்கத் தொடங்கினார்கள். அரியநாத முதலியார் அது வரையில் தாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளை அவனிடம் விவரித்தார். நாட்டு நிலை பற்றித் தம் கருத்தையும் கூறினார்.


"விஜயநகரத்திலிருந்து தெற்கே வெகு தொலைவில் இருப்பதாலும், தமிழ் நாட்டுச் சிற்றரசர்களின் ஆட்சியில் தலையிட வேண்டாம் என்று பெரிய சக்கரவர்த்திகள்



ஒதுங்கியிருந்ததாலும் இங்கே நிர்வாகம் சரிவர நடைபெறவில்லை. சந்திரசேகர பாண்டியரும் வலிமை இழந்தவராக இருப்பதால், அங்கங்கே பலர் தங்களைச் சிற்றரசர்கள் என்றும் பழம் பெரும் சோழ பாண்டியர்களின் வாரிசுகள் என்றும் கூறித் தலைக்குத் தலை அதிகாரம் செலுத்தி வருகிறார்கள். அவர்கள் அதிகாரம் செலுத்த முனைகிறார்களே தவிர, ஆட்சி நடத்த விரும்பவில்லை.''

''பழம் பெரும் தமிழ்ப் பேரரசர்களின் பண்பு எப்படியோ மாலிக்காபூரின் படையெடுப்புக்குப் பிறகு துண்டிக்கப்பட்டிருக்கு என்றுதான் நினைக்கிறேன்'' என்றான் விசுவநாதன்: ''அதற்குப் பிறகு அவன் விட்டுச் சென்ற சேனைத் தலைவர்களின் அதிகாரக் கொடுங்கோன்மை இங்கு சிறிது காலம் நடைபெற்றிருக்கிறது. அதிகாரம் செலுத்திக் குடிமக்களை உறிஞ்சுவதுதான் ஆட்சி என்று அவர்கள் காட்டியிருக்கிறார்கள். விஜயநகரத்திலிருந்து இங்கு வந்து தமிழ் நாட்டை அவர்களிடமிருந்து மீட்டுத் தந்த குமாரகம்பண்ணரும் நெடுநாட்கள் இங்கு தங்கவில்லை. ஆகவே, அதிகாரம் செலுத்தக் கற்றுக் கொண்ட சிறு தலைவர்கள் தங்கள் ஆட்சிக் கலையை அடியோடு மறந்துவிட்டார்கள் போலிருக்கிறது.''

''அப்படித்தான் இருக்க வேண்டும்'' என்று கூறித் தலையசைத்தார் அரியநாத முதலியார்.



''இதற்கிடையில் இங்கே தமிழர்—தெலுங்கர் என்ற வேற்றுமை உணர்ச்சியை வேறு தீவிரமாக யாரோ பரப்பியிருக்கிறார்கள்'' என்று மிகுந்த கவலையோடு குறிப்பிட்டான் விசுவநாதன்.

அரியநாத முதலியாருக்கும் இது சுருக்கெனத் தைத்தது. ''நான் தங்களுக்காக இதைக் கூறவில்லை. தெலுங்கர்கள் இந்த நாட்டுக்கு வந்திருக்கா விட்டால் இங்கே தமிழர்களின் நிலை என்ன ஆகியிருக்கும் என்றே சொல்ல முடியாது. நாகரிகமும் பண்பாடும் முதிர்ச்சியுற்று வளம் பெற்றிருந்த நாடு தமிழ் நாடு. பேரிலக்கியங்களும் பெருங்கோயில்களும் சித்திரங்களும் சிற்பங்களும் நிறைந்திருந்த மண் இந்த மண். குடிமக்களின் புற வாழ்க்கையும் எல்லா வகைகளிலும் செழிப்போடுதான் விளங்கியது. இவ்வளவும் இங்கு அடியோடு அழிந்துவிட வில்லையென்றால் அதற்குக் காரணம் விஜயநகரம்தான். தமிழ்நாட்டின் அக வாழ்வையும் புற வாழ்வையும் அழிவிலிருந்து காத்ததற்காக இது விஜயநகரத்துக்கு எவ்வளவோ கடமைப்பட்டிருக்கிறது. அந்த நன்றியை இந்த நாட்டுக்கு மீண்டும் நினைவூட்ட வேண்டிய நிலை இப்போது ஏற்பட்டிருக்கிறது. அதை நினைவூட்டுவதே என் முதற் கடமை என்று நான் முடிவு செய்திருக்கிறேன்'' என்று குரலில் நன்றி தழுதழுக்கக் கூறினார் அரியநாத முதலியார்.

விசுவநாதனுக்கு எப்போதுமே அரியநாத முதலியாரிடம் பெருமதிப்பு உண்டு. தமது நேர்மைத் துணிவாலும் உழைப்பாலும் படிப்படியாக உயர்ந்தவர் அவர். அந்த மதிப்பு இப்போது முன்னிலும் பன்மடங்கு அவனுள்ளே வளர்ந்தது.

''முதலியார் அவர்களே! விஜயநகரம் தன்னுடைய கடமையை இந்த நாட்டுக்கு இன்னும் சரிவரச் செய்யவில்லை என்றே நான் நினைக்கிறேன். அழிவிலிருந்து காத்து விட்டால் மட்டும் போதுமா? இதற்குப் புது வாழ்வும் புத்தெழுச்சியும் தர வேண்டாமா? விஜயநகரத்தைப் போலவே இந்த மதுரையும் வலிமையும் செழிப்பும் பெற்றிருக்க வேண்டாமா? இதன் சுற்றுப்புறங்களும் விஜயநகரத்தின் சுற்றுப்புறங்களைப் போலல்லவா மாறியிருக்க வேண்டும்?'' என்று கேட்டான்.

''நண்பரே! எவ்வளவு பரந்த மனம் தங்களுக்கு!'' என்று விசுவநாதனின் கரங்கள் இரண்டையும் அன்பு மேலிட்டால் இறுகப் பற்றிக் கொண்டார் அரியநாதர்.

''நாம் இருவரும் இன்று ஒரு சபதம் எடுத்துக் கொள்வோம்'' என்று உறுதி நிறைந்த குரலில் கூறினான் விசுவநாதன். ''இந்த நாட்டின் புது வாழ்வுக்காக நம் உடல், பொருள், ஆவி அனைத்தையுமே வழங்குவதென்று முடிவு செய்து கொள்வோம். விஜயநகர சாம்ராஜ்யத்தின் வலிமை நிறைந்த தென் பகுதியாக இதை மாற்றி விடுவது என்று கங்கணம் கட்டிக் கொள்வோம்!''

''அவ்வாறே செய்வோம்!'' என்றார் முதலியார்.

''எத்தனையோ சிக்கல்கள் இப்போது நம்மைச் சூழ்ந்திருக்கின்றன. தனிக் காட்டு அரசர்களாக விளங்கியவர்களை நாம் ஒன்று சேர்த்து, அவர்களையும் உற்சாகத்தோடு உழைக்கச் செய்ய வேண்டும். விஜயநகரத்தில் எவ்வாறு அமரநாயக்கர்களிடம் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்திருக்கிறோமோ, அவ்வாறே இங்கும் செய்து ஆட்சி முறைகளை ஒழுங்குபடுத்துவோம். அதிகாரத்தின் வரம்பு அவர்கள் குடிமக்களுக்குச் செய்யும் ஊழியத்தைப் பொறுத்து உயரும் என் பதை வரையறுத்து விட்டால், அவர்களும் ஊழியம் செய்யத் தயங்க மாட்டார்கள். கடமையில் தவறுபவர்களுக்குக் கடுமையான தண்டனை என்றும் வைத்து விடுவோம்.''

சிறந்த யோசனை என்று ஏற்றுக் கொண்டார் அரியநாத முதலியார். அடுத்தாற்போல் உள்ள பணிகளையெல்லாம் கூறினான் விசுவநாதன்.

''குடிமக்களுடைய அகவாழ்வு புற வாழ்வு இரண்டுமே இங்கு தடுமாறி நிற்கின்றன. காவிரி பாயும் நாட்டின் வடபகுதியில் காவிரிக் கரைகளில் நெல் வயல்கள் செழிக்கவில்லை. வைகைக் கரைகளும் அப்படித்தான் இருக்கின்றன. அங்கே அடர்ந்திருக்கும் காடுகள் வழிப்பறிக் கொள்ளையர்களின் புகலிடமாக இருந்து வருகிறது. காடுகளை அழிக்க வேண்டும். அங்கங்கே மக்களைக் குடியேற்றி நிலத்தைப் பண்படுத்த வேண்டும். வாணிபம் பெருகச் சாலைகள் அமைக்க வேண்டும். அங்கங்கே காவல் நிலையங்கள் ஏற்படுத்தி மக்களின் உயிர், உடைமை, மானம் இவற்றைக் காக்க வழி செய்ய வேண்டும். இன்னும் குடி தண்ணீர்க் குளங்கள், பாசனத்துக்கு ஏரிகள் இவற்றையும் வெட்ட வேண்டும். அதோடு கோயில்களைப் புதுப்பித்துக் கட்டுவது, அங்கே முறையான வழிபாடுகளுக்கும் திருவிழாக்களுக்கும் ஏற்பாடுகள் செய்வது, கல்விக்கூடங்களும் அறச் சாலைகளும் நிறுவுவது போன்றவற்றையும் கவனிக்க வேண்டும். பல முனைகளிலும் நாம் உடனடியாகப் பணிகளைத் தொடங்க வேண்டும்!''

விசுவநாதனின் திட்டங்களைக் கேட்டவுடன் மலைப்பும் திகைப்பும் ஏற்பட்டன முதலியாருக்கு. இவ்வளவு செயல்களையும் ஒன்றாகச் செய்வதற்குப் பொருள் வேண்டாமா? ஆட்கள் வேண்டாமா?

''மலைக்க வேண்டாம்!'' என்று கூறிச் சிரித்தான் விசுவநாதன்; ''பெரிய சக்கரவர்த்திகளுடைய பொக்கிஷத்தோடு என் தந்தையார் எனக்காகச் சேமித்து வைத்திருந்த பொருளையும் எடுத்து வந்திருக்கிறேன். சேமிப்பில் தந்தையார் வல்லவர்கள் என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே!''

அரியநாத முதலியாருக்குப் பேச நா எழவில்லை. நாகமநாயக்கர் அவனுக்காகப் பாடுபட்டுத் தேடி வைத்த பல லட்சம் வராகன்களை அவன் பாண்டிய நாட்டுக்கு அளிக்க முடிவு செய்து விட்டான்.



சிக்கல் ஸ்ரீ சிங்காரவேலனுக்கு கோடி அருச்சனை 4—2—66 முதல் ஆரம்பித்து நடைபெற்று வருகிறது. மேற்படி அருச்சனை பூர்த்தி 10—8—66ல் வைத்திருந்ததைப் பக்தர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி ஒத்தி வைத்திருக்கிறோம். பூர்த்திக்குச் சுமார் 2 மாத காலம் ஆகும். முடிவு தேதி பின்னர் அறிவிக்கப்பெறும். ஸ்வர்ண, ரஜிதா புஷ்பங்கள் அருச்சனை பூர்த்திக்குப் பின்னர்தான் அனுப்பப்பெறும். பக்தர்கள் அனைவரும் அருச்சனைக்கு ரூ. 5-ம், வெள்ளிக் காசுக்கு ரூ. 5-ம், தங்கக் காசுக்கு ரூ. 30-ம் அனுப்பி ஸ்ரீ சிங்காரவேலன் அருள் பெற்றுய்யக் கேட்டுக் கொள்கிறோம்.

கோடி அருச்சனைக் குழு, சிக்கல் S. Rly.

பருக்கள் மறைந்து விடுகின்றன

சருமம், மிருதுவாகவும் வழவழப்பாகவும் ஆகிவிடுகிறது

நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகித்தால் முகப்பருக்கள் எல்லாம் மறைந்து விடுகின்றன. இன்றிரவு நிக்ஸோடெர்ம் (Nixoderm) உபயோகியுங்கள். உங்கள் சருமம் மிருதுவாகவும் வழவழப்பாகவும் மாசு மறுவின்றியும் ஆவதைக் காண்பீர்கள். நிக்ஸோடெர்ம் (Nixoderm) சருமத்தின் மீது ஏற்படும் முகப்பருக்கள் கட்டிகள் செந்நிறத் தழும்புகள் மேலாக பரவும் படை, படர்தாமரை, வெடிப்புகள் முதலிய உபாதைகளுக்குக் காரணமான கிருமிகளையும், பூச்சிகளையும் அழிக்க விஞ்ஞானமுறையில் தயாரிக்கப்பட்டது. உங்கள் சருமத்தின் மெல்லிய துவாரங்களில் இருக்கும் பூச்சிகளையும், கிருமிகளையும் அழித்தாலன்றி, உங்கள் சரும உபாதைகள் விலகா. இன்றே உங்கள் கெமிஸ்டிடம் நிக்ஸோடெர்ம் (Nixoderm) வாங்குங்கள். முகப்பருக்களை மறையச் செய்து சருமத்தை மிருதுவாகவும் வழவழப்பாகவும் இருக்கச் செய்யும் என்ற பூரண நம்பிக்கையுடன் நிக்ஸோடெர்ம் Nixoderm வாங்குங்கள்.

மூல நோயை

முற்றவிடாமல்
நம்பிக்கையான

ஹெடன்ஸா

உபயோகித்து
நிவாரணம் அடையுங்கள்
—ரணசிகிச்சையையும்
தடுங்கள்

பொறுக்க முடியாத வலியா? தாங்க முடியாத அரிப்பா? எரிச்சலெடுக்கும் உணர்ச்சியா? ரத்தக் கசிவா? உடனடியாக சிகிச்சை செய்யத் தாமதியாதீர்கள்! அலட்சியம் செய்தால், நோய் முற்றி ரணசிகிச்சை செய்ய வேண்டிவரும். 108 தேசங்களிலுள்ள டாக்டர்களால் சிபாரிசு செய்யப்பட்ட, நம்பிக்கையான ஜெர்மன் மூலநோய் களிம்பு ஹெடன்ஸா உபயோகித்து இப்பொழுதே நிவாரணம் பெறுங்கள்! ஹெடன்ஸா வலியையும் அரிப்பையும் சீக்கிரம் நிறுத்தி, மலப் பிரவிருத்தியைச் சுலபமாக கஷ்டமில்லாமல் செய்கிறது. முக்கியமாக, ஹெடன்ஸாவிலுள்ள சக்திவாய்ந்த மருந்துப் பொருள்கள் நீடித்த நிவாரணமளிப்பதோடு, வெடிப்புகளைச் சுருங்கச் செய்து, ஆரோக்கியமான தசைகளை வளர்க்கிறது. மூலநோய்களுக்கு காலாகாலத்தில் ஹெடன்ஸா உபயோகித்தால் பிற்காலத்தில் ரணசிகிச்சை செய்யவேண்டிய நிலை ஏற்படாது என்பது ஞாபகமிருக்கட்டும்.

ஹெடன்ஸாவில் உணர்வழிக்கும் மருந்துகள் ஒன்றும் கிடையாது.


ஒரிஜினல் ஜெர்மன் முறைப்படி
இந்தியாவில் தயாரிக்கப்பட்டது.

தி டாலர் கம்பெனி

337, தம்பு செட்டி தெரு
சென்னை-1

பிரபல மருந்து வியாபாரிகளிடம்
கிடைக்கும்.

BJ-DOL-2


உஸ்தாத் ஆஸ்ரம் கூறுகிறது
"அது
Osram
ஆஸ்ரம் தானு என்று
பார்ப்பதில் லாபம்
இருக்கிறது
வேலையிலோ அல்லது விளையாட்டிலோ! சரியான வெளிச்ச அமைப்பின் வித்தியாசம் நன்கு விளங்கும். உங்கள் ஆபீசிற்கும், வீட்டிற்கும் ஆஸ்ரம் விளக்குகள் மிகச்சிறந்தவை. ஏனெனில் நீண்ட உழைப்பிற்கும், அதிகப்படியான வெளிச்சம் அளிக்கவும் ஏற்றபடி அவை தயாரிக்கப்பட்டிருக்கின்றன. நீங்கள் நம்பககூடிய விளக்கைக் கேட்டு வாங்குங்கள் — உலகத்திலேயே விளக்குகளிலும், வெளிச்ச அமைப்புகளிலும் உலகிலேயே முதன்மையாக விளங்கும் ஜி.இ.ஸி. ஆதரவுடன் தயாரானவை அவை.
G.E.C.
உமது உத்திரவாதம்
தி ஜெனரல் எலக்ட்ரிக் கம்பெனி
ஆப் இந்தியா பி. லிமிடெட்

''வேண்டாம்! தங்களுடைய சொந்தச் சேமிப்பைத் தாங்கள் இதற்காக இழக்க வேண்டாம்!'' என்று தடுத்தார் முதலியார்.

''பெரிய சக்கரவர்த்திகளைப் போன்று பெரும் செல்வங்களைச் சேர்த்தவர்கள் யாரு மில்லை. அவர்களும் முடிவில் பிடி சாம்ப லாய்த்தானே மாறினார்கள்? நாம் நம்மோடு மூட்டை கட்டிக் கொண்டு போவதற்கா சேமிக்கிறோம்?''

வயதிலே இளைஞனாக இருந்தாலும் அவன் மிகப் பெரிய மனிதன் என்பதை அன்று கண்டு கொண்டார் அரியநாத முதலியார்.

அத்தியாயம் பதினொன்று

சாதனையும் சோதனையும்

பாண்டிய நாட்டில் பாளையங்களைத் தோற்றுவித்து, விசுவநாதன் ஆட்சி முறையைச் செப்பனிட்டானே, அது வரலாற்றில் பதிந்துவிட்ட பொன்னேடு; விஜயநகரம் தூவி விட்ட தேசிய உணர்ச்சியைப் பரம்பரை பரம் பரையாகத் தமிழகத்தில் வேரூன்றச் செய்த திருநாள்.

தெற்கே ஒருபுறம் சேதுக்கரை முனையி லிருந்தும் மறுபுறம் கன்னியாகுமரி முனையி லிருந்தும் சிறு நாட்டுத் தலைவர்கள் மதுரை யில் வந்து குழுமியிருந்தார்கள். எழுபத் திரண்டு தலைவர்கள் வந்து கூடிச் சந்திர சேகர பாண்டியரின் சபையை அன்று அலங்கரித்திருந்தார்கள். கம்பம் பகுதியை ஆட்சி செய்த திரையரும், கயத்தாறு பகுதியை ஆட்சி செய்த பஞ்ச பாண்டி யர்கள் என்ற ஐந்து சகோதரர்களும், பரமக்குடித் தும்பிச்சி நாயக்கரும் இன்னும் சிலரும் மட்டிலும் வரவில்லை.

சபையில் சந்திரசேகர பாண்டியருக்கு அடுத்தாற்போல் விசுவநாதனும் அரியநாத முதலியாரும் அமர்ந்திருந்தார்கள். விசுவ நாதன் மீதே அங்கு கூடியிருந்த எல்லாத் தலை வர்களின் விழிகளும் பதிந்திருந்தன. சபைக்கே ஒரு புத்தொளியையும் புதிய நம்பிக்கையை யும் புது உற்சாகத்தையும் கொடுத்துக் கொண்டிருந்தது அவனுடைய முகம். சந்திர சேகர பாண்டியர் அனைவரையும் வரவேற்று விட்டு, விசுவநாதன் யார் என்பதை அவர்க ளிடம் விளக்கிவிட்டு, அவனைப் பேசுமாறு அழைத்தார்.

விசுவநாதன் எழுந்து வணங்கிவிட்டுப் பேசலானான் :

''முதலில் நீங்கள் என்னை உங்களுடைய இளைய சகோதரனாகப் பாவிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன். இந்த அடிப்படை உணர்ச்சியோடுதான், நாம் அனைவரும் ஒரு தாய் வயிற்றுக் குழந்தைகள் என்ற நம்பிக்கையோடுதான், நான் இங்கு வந்திருக்கிறேன். தமிழர்களுக்குள்ளே எப் படிச் சேர, சோழ, பாண்டியர் என்று பிரிந்து நின்று நம்முடைய பரம்பரையினர் போரிட்டார்களோ, அப்படித்தான் நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் சிற்றரசர்கள் பிரிந்து நின்று சிறு போர்கள் நடத்திருக்கின்றனர். இனியும் நமக்குள் ஒற்றுமையின்றி வாழ்ந் தால் தமிழ்நாடு மட்டுமல்ல, விஜயநகரம் மட்டுமல்ல, பரத கண்டமே பகைவர்களின் ஆட்சிக்குட்பட்டு விடும். ஆகவே, கால மாறுதலுக்குத் தக்கபடி நம்முடைய மனமும் விரிவடைய வேண்டும். விஜய சாம்ராஜ்யமே உங்களுடையது என்ற உணர்வோடு, என்னை உங்களில் ஒருவனாக ஏற்றுக் கொள்ள வேண்டும். நான் தெலுங்கு நாட்டைச் சேர்ந்தவன் என்று என்னை அந்நியனாக்கா தீர்கள். விஜயநகரத்துக்கு உங்கள் துணை வேண்டும்; உங்களுக்கு விஜயநகரத்தின் துணை வேண்டும். நமக்குள் இனி யாரும் பிரிந்து வாழ நினைத்தால் நம்மில் யாவருக் குமே இங்கு வாழ்விருக்காது. பல்லாயிரம் ஆண்டுகளாக நாம் கட்டிக் காத்து வந்த அறவாழ்வு இங்கே சீர்குலைந்து போய் விடும். ஆகவே, நாம் புதிய முறையில் நினைக்கப் பழகி நம் உறவுகளை வளர்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்...''

விசுவநாதனை அவர்களில் பலர் நேரில் கண்டிருக்காவிட்டாலும் அவனுடைய வீரம் பாண்டிய நாடு முழுதும் முன்பே பரவி யிருந்தது. மாவீரரான நாகமநாயக்கரையே அவன் போரில் புறம் கண்டவன் என்பது அவர்களுக்குத் தெரியும். பெரும் படைக ளோடு அவன் வந்ததால், நாட்டைக் கைப் பற்றி ஆட்சி செலுத்தவே அவன் வருகிறான் என்று நம்பியிருந்தார்கள். அவனோ உள்ளம் திறந்து பேசி உறவுக் கரம் நீட்டி விட்டான்!

அரியநாத முதலியார் விசுவநாதனின் திட் டங்களை விளக்கினார். தமிழ் நாட்டின் வளர்ச்சிக்காக அவன் கொண்டு வந்துள்ள செல்வக் குவியலைக் குறிப்பிட்டார். அவ னோடு வந்துள்ள லட்சோப லட்சம் வீரர் களும் தமிழ்க் குடிமக்களோடு சேர்ந்து குளங்கள் வெட்டுவதிலும் ஏரிக்குக் கரைகள் எழுப்புவதிலும் அடர்ந்த காடுகளை அழித்துக் கள்வர்களை ஒழிப்பதிலும் ஈடுபடுவார்கள் என்பதைக் கூறினார்.

வந்திருந்தவர்களுக்குத் தங்கள் செவி களையே நம்ப முடியவில்லை.

''நீங்கள் இன்றிலிருந்து பாளையக்காரர்கள் என்று அழைக்கப்படுவீர்கள். பாண்டிய நாட்டுப் பணியில் நீங்கள் சம பங்கு கொள்வ தற்குச் சான்றாக, மதுரையைச் சுற்றி எழுப்பப்படும் கோட்டை மதிலில் எழுபத் திரண்டு படை வீடுகள் அமைக்கப்படும். அவரவர் பகுதியைச் சேர்ந்த நாட்டை அவரவர் பொறுப்பேற்றுப் புதுப்பிக்க வேண்டும்!'' என்றார் அரியநாத முதலியார்.

அடுத்த வாரத்திலிருந்தே பாண்டிய நாடு தேன்கூடாக மாறத் தொடங்கி விட்டது. பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்து விட்டுச்

சந்திரசேகர பாண்டியருடன் இருந்து தலை நகரத்து நிர்வாகத்தை ஒழுங்குபடுத்தினான் விசுவநாதன். வயதில் இளைஞனாக இருந்தாலும் அவன் ஆட்சிக் கலையில் வல்லவரான நாகமநாயக்கரின் குமாரன். கிருஷ்ணதேவ ராயரிடமும் பயிற்சி பெற்றவன். சந்திரசேகர பாண்டியர் அவனுடைய பழக்கத்தால் புது மனிதராக மாறத் தொடங்கினார்.

இந்த நிலையில் விஜயநகரத்திலிருந்து அவனுக்கு இரகசியமாக ஓர் ஓலை அனுப்பியிருந்தார் ராமராயர். அதைக் கண்டதிலிருந்தே அவனுக்கு மன நிலை சரியாக இல்லை. பலமுறைகள் அதைப் படித்துப் பார்த்தான். விஜயநகரத்து அரசியலில் சாளுவ நரசிம்மர் ஏற்படுத்தி வைத்த குழப்பங்களை விரிவாக எழுதியிருந்தார் ராமராயர்.

''விசுவநாதா! நான் என்னுடைய அதிகாரம் பறிக்கப்பட்டதற்காகக் கவலையுறவில்லை; வருந்தவும் இல்லை. சாம்ராஜ்யத்துக்கு இப்போது ஒரு சோதனைக் காலம் வந்திருக்கிறது. உட்பகையால் இது மீண்டும் சிதறி விடுமோ என்று நான் அஞ்சுகிறேன். சாளுவநரசிம்மர் தஞ்சைக்குத் தம்முடைய குடும்பத்தோடு புறப்பட்டு விட்டார். அவருக்கு அங்கே நிறைந்த செல்வாக்கு உண்டு. மேலும் பாண்டிய நாட்டிலும் விஜயநகரத்திடம் துவேஷமும் வெறுப்பும் கொண்ட சில தலைவர்கள் இருக்கிறார்கள். மனக்குறையும் பேராசையும் கொண்டவர்களின் உதவி அவருக்குக் கிடைக்கக் கூடும். ஆகவே, சாளுவநரசிம்மர் சமயம் பார்த்து விஜய நகரத்துக்கு எதிராகவே வாளெடுக்கத் தயங்க மாட்டார். அவரைக் கண்காணிக்க வேண்டிய பொறுப்பு உன்னுடையது. விஜய நகரம் வெகு தொலைவில் இருப்பதாக அவர் நினைத்தால், அது அருகில்தான் இருக்கிறது என்பதை நீதான் அவருக்கு நினைவூட்ட வேண்டும். நான் உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்'' என்று முடித்திருந்தார் ராமராயர்.

அந்த அதிர்ச்சியிலிருந்து விசுவநாதன் மீள்வதற்கு முன்பே அவனுக்குத் தஞ்சையிலிருந்து அழைப்பு வந்து விட்டது. சாளுவ நரசிம்மர் அவனுக்கு அன்போடு வாழ்த்துக்கள் கூறி, அவனுடைய நலன்களை விசாரித்து விட்டு, அவனைத் தம்முடைய நகரத்துக்கு விருந்தினனாக அழைத்திருந்தார்.

''விஜயநகரத்திலிருந்து வெளியேறி நான் சோழநாட்டுக்கே வந்து விட்டேன். எனக்கு இப்போது உன்னுடைய அன்பும் ஆறுதலும் வேண்டும். விஜயநகரத்தில் உன் தந்தையார் நாகமநாயக்கரின் நிலையும் அவ்வளவு மகிழ்ச்சிகரமாக இல்லை. காலமெல்லாம் விஜயநகரத்துக்கு உழைத்த நாங்கள் இருவருமே இப்போது பெரும் கலக்கத்துக்குள்ளாயிருக்கிறோம். தஞ்சையில் சில தினங்கள் தங்கிச் செல்வது போல் புறப்பட்டு வா. நேரில் உன்னிடம் விவரங்களைக் கூறுகிறேன். நான் மட்டுமல்ல, உன் அத்தையும் லட்சுமியுமே உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அங்கிருந்து புறப்படும் நாள் குறித்து நம் தூதுவனிடமே ஓலை அனுப்பு.''

சாளுவநரசிம்மரின் ஓலையோடு மற்றோர் ஓலையும் இருந்தது. அது லட்சுமி தன் தந்தைக்குத் தெரியாமல் அவனுக்கு அனுப்பிய ஓலை.

''நான் உங்களைத் தேடி உங்களுக்கருகிலேயே வந்து விட்டேன். இவ்வளவு அருகில் வந்த பின்னரும் நமக்குள்ளே இன்னும் தொலைவு மிகுந்திருப்பதை என்னால் பொறுக்க முடியவில்லை. எந்த நேரமும் உங்கள் நினைவுதான். உடனே புறப்பட்டு வந்து சேருங்கள். நான் உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்!'' என்று எழுதியிருந்தாள் லட்சுமி.

லட்சுமியின் ஓலை விசுவநாதனுக்கு மனப்பாடமாகி விட்டது. மற்ற எல்லா நினைவுகளுமே அப்போது அவனை விட்டுப் பறக்கத் துடித்தன. என்றாலும் அவனால் ராமராயரின் ஓலையையும் மறக்க முடியவில்லை.

''உன்னைத்தான் நம்பியிருக்கிறேன்!'' என்று ஓலையை முடித்திருந்தார் ராமராயர்.

''உங்களைத்தான் நம்பியிருக்கிறேன்!'' என்று ஓலையை முடித்திருந்தாள் லட்சுமி.

விசுவநாதன் தவித்தான்: யாருடைய நம்பிக்கைக்குப் பாத்திரமானவனாக நடந்து கொள்வது? ஏன், இருவருடைய நம்பிக்கைக்குமே உரியவனாக நடந்து கொள்ள முடியாதா, என்ன?

புறப்படும் நாள் குறித்துச் சாளுவரின் தூதுவனிடமே ஓலை அனுப்பினான் விசுவநாதன். ஓலையை எழுதுவதற்கு முன்பே அவன் உள்ளம் தஞ்சையை நோக்கிச் சிறகடித்துப் பறந்தது.

(தொடரும்)



அமிர்தாஞ்சனம்

தடவி விரைவில் நிவாரணம் பெறுங்கள்

உடலில் ஒரு பகுதியை மட்டும் பாதிக்கும் வலிக்காக உள்ளுக்கு மருந்து சாப்பிடுவானேன்? வலிக்கும் இடத்தின் மேல் மட்டும் அமிர்தாஞ்சனம் தடவி விரைவாக வலி நிவாரணம் அடையுங்கள். பத்து மருந்துகள் கொண்டு விஞ்ஞான முறையில் தயாரிக்கப்பட்டுள்ள அமிர்தாஞ்சனம் தசைவலி, தலைவலி, சுளுக்கு மற்றும் மூட்டு வலிகளுக்கு சிறந்த வகையில் நல்ல நிவாரணமளிக்கும். மற்றும் மார்புச்சளி, ஜலதோஷம் போன்றவைக்கும் ஏற்ற மருந்து அமிர்தாஞ்சனம் ஒரு சமயத்தில் தேவையானதெல்லாம் மிகச் சிறு அளவே; ஆதலால், ஒரு பாட்டில் உங்கள் குடும்பத்திற்கு மாதக் கணக்கில் வரும்.


அமிர்தாஞ்சனம் 70 வருடங்களாகக் குடும்பங்களில் பயன்பட்டுவரும் கைகண்ட நிவாரணி.

பத்து மருந்துப் பொருள் ஒருங்கே சேர்ந்த அமிர்தாஞ்சனம் வலிகளுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற சிறந்த நிவாரணி



அமிர்தாஞ்சன் லிமிடெட், மதராஸ்-பம்பாய்-கல்கத்தா-டெல்லி

அரசியல் நிருபரின் கதை





(ஜெனிவாவிலும் தாஷ்கெண்டிலும்தான் மகாநாடுகள் நடக்க வேண்டுமா என்ன? பெண்ணைப் பெற்ற ஒவ்வொருவர் இல்லத் திலும் பரபரப்பு மிகுந்த முக்கியமான மகாநாடுகள் நடக்கின்றனவே!)

ஒரு பத்திரிகையின் அரசியல் நிருபருக்கு, திடீரென்று கதை எழுத வேண்டும் என்கிற ஆசை வந்து விட்டது. அரசியல் நிருபர்களை விடக் கதாசிரியர்களுக்குத்தான் கௌரவம் அதிகம் என்று யாரோ அவரிடம் சொல்லி விட்டார்கள். அதோடு, எல்லாரும் கதைகள் எழுதிப் புகழ் பெற்று, அதன் மூலம் தங்கள் மனைவிகளுக்கும் புகழ் தேடித் தந்திருக்கையில், தன் கணவன் அத்தகைய காரியம் ஒன்றும் செய்யவில்லையே என்கிற கவலை அந்த அம்மாளுக்கு நிறைய இருந்தது. பெண்கள் தங்களுக்கிடையில் பேசிக் கொள்ளும்போது, பத்திரிகைகளில் வரும் கதைகளைப் பற்றித் தான் பேசுவார்களே யொழிய, அரசியல் கட்டுரைகளைப் பற்றிப் பேச மாட்டார்கள். ஆகவே, தன் கணவன் கதை எழுதினால் அதைப் பற்றிப் பேசுவார்கள் என்று அந்த அம்மாள் நினைத்தாள். ஆகவே கதை எழுதும்படி தன் கணவனைத் தேள் கொட்டுவது போல் அந்த அம்மாள் கொட்ட ஆரம்பித்தாள்.

கடைசியில் மனைவியின் வற்புறுத்தல் தாங் காது, அரசியல் நிருபர் ஒரு கதை எழுதிக் கொண்டு வந்து ஆசிரியரிடம் கொடுத்தார். அந்தக் கதை பின்வருமாறு:

பேச்சுக்கள் முறிந்தன

கலியாணம் நடக்குமா ?

பிள்ளையைப் பெற்றவர் ஊர் திரும்புகிறார்

(நமது விசேஷக் கதை நிபுணர்!)

சென்னை, ஜூலை 8-ந் தேதி, காலை 10-15 மணி: இன்று காலை சரியாக 10-15 மணிக்கு, பிள்ளையைப் பெற்றவர் எழும்பூர் ஸ்டேஷனில் ரயிலை விட்டிறங்கினார். காலை 7-15க்கே வர வேண்டிய ரயில், பம்பாயில் திடீரென்று மழை, கொட்டு, கொட் டென்று கொட்டியதால் மூன்று மணி நேரம் தாமதமாகத்தான் வந்தது. பம்பா யில் மழை பெய்ததற்கும், எழும்பூரில் வண்டி தாமதமாக வந்து சேர்ந்ததற்கும் என்ன காரணம் என்று தெரியவில்லை. இது விஷய மாக டிரைவரை விசாரிப்பதற்கு ஒரு விசாரணைக் குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பிள்ளையைப் பெற்றவர் கீழே இறங்கின தும் அவரை முதன் முதலாக வரவேற்றது அந்தப் பிளாட்பாரத்துப் போர்ட்டர்களில் ஒருவன்தான். வண்டியைவிட்டு இறங்கியவர் நகராமல் கதவுக்கு முன்னாலேயே நின்றதைப் பார்த்து, அவன், ''ஏன் ஐயா வழியில் நிக்கறே? அப்பாலே போய்யா!'' என்றான்.


''நீ யாரடா, என்னை அப்பால் போகச் சொல்லுவதற்கு! என்னை யார் என்று நினைத்துக் கொண்டாய்? நான் பிள்ளையைப் பெற்றவனாக்கும்!'' என்றார் அவர்.

அதற்குள் வண்டியிலிருந்து இறங்கிய அவர் மனைவி, ''என்ன, காலங்காத்தாலே அவனோடு சண்டை? உங்கள் பௌருஷத்தை யெல்லாம் பெண்ணைப் பெற்றவரிடம் காண்பியுங்கள். பெண்ணைக் கண்டதும் பல்லை இளித்துக் கொண்டு தொகையைக் குறைத்து விடாதீர்கள்! ஆமாம், எங்கே

பெண்ணைப் பெற்றவரைக் காணோம்! இங்கு ஸ்டேஷனுக்கு வருவதாகச் சொன்னாரே!'' என்று கேட்டான்.

இதற்கிடையில், பெண்ணைப் பெற்றவர் போர்ட்டர்களுக்கிடையில் அகப்பட்டுக் கொண்டு விட்டதால், போர்ட்டர் கூட்டம் அவரை வெளியே செல்லும் வழிக்குத் தள்ளிக் கொண்டு போயிற்றே யொழிய, அவரால் அவர்களை எதிர்த்து ரயில் பக்கம் செல்ல முடியவில்லை.

கடைசியில் பெண்ணைப் பெற்றவர் எப்படியோ முண்டியடித்துக் கொண்டு, பிள்ளையைப் பெற்றவர் பக்கம் வந்து சேர்ந்தார்.



''வாங்கோ, வாங்கோ, வாங்கோ வாங்கோ!'' என்று நான்கு தடவைகள் சொன்னார். பிறகு அந்த அம்மாளைப் பார்த்து, ''வாங்கோ, வாங்கோ!'' என்று இரண்டு தடவை சொன்னார்.

ஒரு நாட்டை விட்டு இன்னொரு நாடு செல்லும் அரசியல் தலைவர்களுக்கு எத்தனை மரியாதைக் குண்டுகள் வெடிக்கப்பட வேண்டும் என்று சட்டம் இருக்கிறதோ, அதைப் போல, பெண்ணைப் பெற்றவர், பிள்ளையைப் பெற்றவரிடம் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்றும் சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்தில் பிள்ளையின் தகப்பனாருக்கு நான்கு 'வாங்கோ'க்களும், பிள்ளையின் தாயாருக்கு இரண்டு 'வாங்கோ'க்களும் விதிக்கப்பட்டுள்ளன.

இக்கதையில் வரும் பெண்ணைப் பெற்றவர் இந்த விதியைத் தெரிந்து வைத்துக் கொள்ளாமல், முன்னொரு சமயம், பிள்ளையின் தகப்பனாரைப் பார்த்து இரண்டு 'வாங்கோ'க்களும், பிள்ளையின் தாயாரைப் பார்த்து இரண்டு 'வாங்கோ'க்களும்தான் சொன்னார். ஆரம்பத்திலேயே கலியாண சட்டவிதிகளை மீறுகிறவரோடு சம்பந்தமே வைத்துக் கொள்ளக் கூடாது என்று பிள்ளையைப் பெற்றவர் அடுத்த வண்டியிலேயே ஊர் திரும்பி விட்டார் - பெண்ணைப் பெற்றவரிடமிருந்து ரயில் சத்தத்துக்குப் பணம் வாங்கிக் கொண்டுதான்!

ஸ்டேஷனுக்கு வெளியே வந்ததும், பிள்ளையைப் பெற்றவர் டாக்ஸிகளின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார். வரிசையாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டாக்ஸிகளுக்கு முன்னால், பிள்ளையைப் பெற்றவருக்கு மரியாதை செய்வதற்கு நின்றது போல் போலீஸ்காரர்கள் அங்கங்கே நின்றனர்.

பிள்ளையைப் பெற்றவருக்குப் பக்கத்தில் பெண்ணைப் பெற்றவர் மிக்க மரியாதையுடன் நடந்து செல்ல, பின்னால் பிள்ளையைப் பெற்ற அம்மாள் ஒரு கையில் வெள்ளி கூஜாவுடனும், இன்னொரு கையில் 'ஹாண்ட் பாக்'குடனும் செல்ல, இவர்களுக்குப் பின்னால் போர்ட்டர் சாமான்களைத் தலையிலும், கை இடுக்குகளிலும், கைகளிலும், தோள்களிலும் தூக்க முடியாமல் தூக்கிக் கொண்டு செல்ல, அந்தக் காட்சி கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

கடைசி டாக்ஸியிலிருந்து நடக்க ஆரம்பித்த இவர்கள் முதல் டாக்ஸியண்டை வந்ததும், டாக்ஸிக்காரன் மிக்க மரியாதையுடன் பின்பக்கத்து டிக்கியைத் திறந்தபடி நின்றான். டிக்கியில் சாமான்கள் வைக்கப்பட்டு, எல்லாரும் டாக்ஸியில் ஏறிக் கொண்டதும், வழக்கமாக ஆரம்பிக்கும் கூலிச் சண்டை அப்பொழுது ஆரம்பிக்கும் என்றுதான் எல்லாரும் எதிர்பார்த்தார்கள்.

ஆனால் பிள்ளையைப் பெற்றவருக்கு எதிரில் பெண்ணைப் பெற்றவர் இந்தச் சண்டையை ஆரம்பித்து வைத்து, அதில் தாம் தோல்வியுற விரும்பவில்லை. ஆகவே, ஓர் இரண்டு ரூபாய் நோட்டை எடுத்துப் போர்ட்டர் கையில் வைத்தார். கையில் என்ன வைக்கப்பட்டது என்பதைக்கூடக் கவனிக்காமல் போர்ட்டர், தன் வழக்கத்தின் காரணமாக, ''என்னா சாமி! எத்தனை சாமான் தூக்கிக்கினு வந்தேன்–'' என்று ஆரம்பித்தவன் நோட்டைப் பார்த்தான். பிறகு தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''சரி, சாமி! சாமான்களை எல்லாம் எண்ணிக் கொண்டீர்களா!'' என்று கேட்டு விட்டு, அவர்கள் பதிலுக்குக் கூடக் காத்திராமல் போய்விட்டான்.

வீட்டை அடைந்ததும், பிள்ளையைப் பெற்றவரை வரவேற்க, அங்கு ஒரு கூட்டம் காத்துக் கொண்டிருந்தது. பெண்ணைப் பெற்றவரின் தாயார், தமக்கை, மனைவி, மகன், அடுத்த வீட்டு அண்ணாசாமி, அவர் மனைவி எல்லோரும் வாசலில் நின்று கொண்டிருந்தார்கள். பெண் மாடியறையிலிருந்து கீழே நடக்கும் விஷயங்களைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

வீட்டின் முன் அறை பிள்ளையைப் பெற்றவருக்கென்று ஒழித்து வைக்கப்பட்டிருந்தது. அவர்கள் உள்ளே போய் உட்கார்ந்ததும், பெண் வந்து, அங்கிருந்த எல்லாப் பெரியோர்களுக்கும் நமஸ்காரம் செய்தாள்.

''சரி, பெண் பிடித்திருக்கிறது. மேலே!'' என்றார் பிள்ளையைப் பெற்றவர்.

''ஆமாம், பையன் பெண்ணைப் பார்க்க வேண்டாமா?'' என்று கேட்டார் அடுத்த வீட்டு அண்ணாசாமி.

''பையன் நாங்கள் சொன்னபடிதான் கேட்பான். லௌகிகம் சரியானபடி முடிந்த பிறகு, சிம்லாவில் இருக்கும் அவனை வரவழைத்தால் போதும்'' என்றாள் பிள்ளையைப் பெற்ற அம்மாள்.

''அப்படியானால் அவர்கள் ஸ்நானம், சாப்பாடு முதலியவற்றை முடித்துக் கொள்ளட்டும். சரியாக இரண்டு மணிக்கு வைத்துக் கொள்வோம் பேச்சு வார்த்தைகளை!'' என்று சொன்னார் பெண்ணைப் பெற்றவர், அண்ணாசாமியைப் பார்த்து. ''சரி, போய் விட்டு வருகிறேன்'', ''போய்விட்டு வாங்கோ''- என்று ஒருவருக்கொருவர் சொல்லிக் கொள்ளக் காலை நடவடிக்கைகள் அத்துடன் முடிவுற்றன.

சென்னை ஜூலை 8, மாலை 2 மணி.

இதற்கு முன்னர் இதேமாதிரி பல பேச்சு வார்த்தைகள் இதே பெண் விஷயமாக நடந்திருக்கின்றன. ஆனால் கடைசி நிமிஷத்தில் பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டன. ஆகவே இந்தத் தடவை நடக்கும் பேச்சு வார்த்தைகள் வெற்றிகரமாக முடிய வேண்டுமே என்ற கவலை எல்லாருக்கும் இருந்தது.

சரியாக மாலை இரண்டு மணிக்குத்தான் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிப்பதாக இருந்தும் அடுத்த வீட்டு அண்ணாசாமி அய்யர் சரியாக ஒன்றரை மணிக்கே வந்து விட்டார். வந்ததும், வராததுமாக அவர் சம்பந்தப்பட்டவர்களைப் பேட்டி காண ஆரம்பித்தார்.

பெண்ணைப் பெற்ற அம்மாள் ஏதோ டிபன் பண்ணுவதற்காக ஆட்டுக்கல்லை ஆட்டிக் கொண்டிருந்தாள். இவர் அங்கு சென்று ''இன்று நடக்கப் போகும் பேச்சு வார்த்தைகளைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள், அது வெற்றிகரமாக முடியுமா?'' என்று கேட்டார்.

அதற்கு அந்த அம்மாள், ''பிள்ளையைப் பெற்ற அம்மாள் இப்பொழுதே அடிக்கும் ராங்கியைப் பார்த்தால் இந்தப் பேச்சு வார்த்தைகள் முறிந்தாலும் பரவாயில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. இப்பவே, 'பெண்ணைப்பெற்றவா இப்படி இருக்கிறாளே' 'பெண்ணைப் பெற்றவா இப்படிப்பேசறாளே!' என்று என்னைப் பார்த்துச் சொல்ல ஆரம்பித்துவிட்டாள். இவள் மாத்திரம் பெண்ணைப் பெற்றவள் இல்லையா? நான் இரண்டு பெற்றிருந்தால் இவள் ஐந்து பெண்களைப் பெற்றிருக்கிறாளே!'' என்று சொல்லிக் கொண்டே அந்த அம்மாள் ஆட்டுக் குழவியை ஆட்டிய வேகத்தைக் கண்டு அண்ணாசாமி பயந்து ஓடி வந்து விட்டார்.

''ஆமாம், நடக்கப் போகும் பேச்சு வார்த்தைகளைப் பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?'' என்று பெண்ணைப் பெற்றவரின் தமக்கையைக் கேட்டார் அண்ணாசாமி.

''இந்த வீட்டில் எதைப் பற்றி நினைக்க எனக்கு உரிமை இருக்கிறது? குழந்தை குட்டி இல்லாமல் சிறு வயசில் அவரையும் பறி கொடுத்து விட்டு இங்கு வந்ததற்காக இந்த வீட்டில் என்னை வேலைக்காரி என்றல்லவா நினைக்கிறார்கள்?'' என்று பதில் வந்தது.

''அம்மா! நான் வெளி விவகார இலாகாவைப் பற்றிக் கேள்விகள் கேட்டால் உள்நாட்டு விவகாரங்களைப் பற்றி அபிப்பிராயம் கூறுகிறீர்களே!'' என்று கூறி விட்டு, அடுத்த வீட்டு அண்ணாசாமி தாயாரைப் பேட்டி காணச் சென்றார்.

''என்ன பாட்டி! நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

''யார் தாலியை யார் கட்ட முடியும்? பகவான் யார் யாருக்கு முடிச்சுப் போட்டிருக்கிறாரோ, அதை யார் கண்டார்கள்! முந்தி இப்படித்தான் பாரு, எனக்குக் கலியாணம் நிச்சயமானபோது –'' என்று பாட்டி பழங் கதையை ஆரம்பித்ததுதான் தாமதம், அண்ணாசாமி ஓட்டம் பிடித்தார்.

இதற்கிடையில் பேச்சு வார்த்தைகள் ஆரம்பிக்கும் சமயம் வந்து விட்டதால், அதில் தாமும் கலந்து கொள்ள அண்ணாசாமி வாசல் அறைக்குள் நுழைந்தார்.

அந்த அறையில் பிள்ளையைப் பெற்றவர், பெண்ணைப் பெற்றவர் ஆகிய இருவர்தாம் இருந்தார்கள். அண்ணாசாமியைக் கண்டதும் பிள்ளையைப் பெற்றவர் ஓர் ஆட்சேபத்தைக் கிளப்பினார். ''பேச்சு வார்த்தையை நாம் மட்டும் நடத்தினால் போதுமே. மூன்றும் மனிதர் நமக்கு அவசியமா?'' என்று கேட்டார்.

''அடுத்த வீட்டு அண்ணாசாமியை நீங்கள் மூன்றும் மனிதர் என்று சொல்லக் கூடாது.




2% மட்டும்

அக்கோப்ரூ:ப்


உபயோகித்தால் கட்டடங்களிலும், நீர் சேமிப்பு தொட்டிகளிலும் கசிவில்லாமல் 100% பாதுகாப்பு பெறலாம்!




அக்கோப்ரூ:ப்
சுவரின் மேல் பூச்சு மற்றும் காரைப்பூச்சு வேலைகளுக்கு



அக்கோப்ரூ:ப்
ஈரம் தங்கக்கூடாத நடைபாதைகளுக்கும், டெர்ரஸ் மாடிகளுக்கும்



அக்கோப்ரூ:ப்
அடித்தளத்தரைகளுக்கும் சுவர்களுக்கும்



அக்கோப்ரூ:ப்
நீர்த்தொட்டிகளுக்கும், ரிஸர்வாயர் மற்றும் குழாய்களுக்கும்

ஒழுக்கு, கசிவு, ஈரம் இவற்றைத் தடுக்க **அக்கோப்ரூ:ப்** உபயோகியுங்கள்

அக்கோப்ரூ:ப் -ஸிமெண்டுக்கு நீர்க்கசியாத் தன்மையை அளிக்கும் ஏஸிஸி யின் கலவைப் பொருள்—20 கிலோ டிரம்களிலும் 1 கிலோ அட்டைப் பெட்டியிலும் கிடைக்கிறது. உங்களருகில் உள்ள, தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆ:ப் இந்தியா லிமிடெட் அவர்களது கிளைகளிலிருந்தோ, அவர்களது விநியோகஸ்தர்களிடமிருந்தோ பெறலாம்.



இலவச தொழில்நுட்ப ஆலோசனை
கான்க்ரீட் அஸோஸியேஷன் ஆ:ப் இந்தியாவின் பம்பாய், புது டில்லி, கல்கத்தா மற்றும் ஸிகந்திராபாதில் உள்ள இஞ்ஜினியரிங் நிபுணர்களின் தொழில்நுட்ப ஆலோசனையை இலவசமாகக் கேட்டுப் பெறுங்கள்.

தி அஸோஸியேடட் ஸிமெண்ட் கம்பெனீஸ் லிமிடெட்
தி ஸிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆ:ப் இந்தியா லிமிடெட்

ஏஸிஸி
தரம்சிறந்த தயாரிப்புகளின் சின்னம்

JWT-CHI. 4357



ஆபீஸ் வேலை தலைக்குமேல் — தலைவலியோ
மண்டையைப் பிளக்கிறது!
தலைவலி தாள முடியலே. இத்தனை வேலையையும் எப்படி செய்யப் போறேனோ!
ஒரே ஒரு வில்லை ஸாரிடான் சாப்பிடு விஸ்வநாதா! தலைவலி ஓடிப்போகும் பார்!
விஸ்வநாதன் ஸாரிடான் சாப்பிடுகிறார்
பிறகு ...
பிரமாதம், பிரமாதம்! தலைவலி ஓடிப் போச்சே!
ஒரே ஒரு ஸாரிடான்
'ரோஷ்'
வலியைப் போக்குகிறது ஆசுவாசப் படுத்துகிறது புத்துணர்ச்சி யூட்டுகிறது
உலகப்புகழ் பெற்ற வலி நிவாரணியான ஸாரிடான் தலைவலி, பல்வலி, உடல்வலி மற்றும் சாதாரண உடற் கோளாறுகள் இவற்றிலிருந்து விரைவில், அபாயமின்றி, நிச்சயமாக நிவாரணம் அளிக்கிறது. பெரியவர்களுக்கு 1 வில்லை, குழந்தைகளுக்கு ½ வில்லை வரை கொடுக்கலாம்.
Saridon
ஸாரிடான் ஒரே வில்லை போதும்
'ரோஷ்' தயாரிப்பு
ஸோல் டிஸ்ட்ரிப்யூட்டர்கள்: வால்டாஸ் லிமிடெட்

இந்தக் கல்யாணத்தில் எனக்குள்ள கவலை அவருக்கும் உண்டு'' என்றார் பெண்ணைப் பெற்றவர்.

அவர் அப்படிச் சொன்னது ஒருவிதத்தில் உண்மைதான். ஏனெனில் வரதட்சணைப் பணத்தைக் கடன் கொடுத்து உதவப் போகிறவரே அடுத்த வீட்டு அண்ணாசாமிதான். இதற்காகப் போன வருடம் பதினைந்தாயிரம் ரூபாய் வைத்துக் கொண்டிருந்தவர் கையில் இப்பொழுது எட்டாயிரம் ரூபாய்தான் எஞ்சியிருந்தது. ஆகவே வரதட்சிணைத் தொகை எட்டாயிரத்துக்கு மேல் போகாமல் இருக்க வேண்டுமே என்கிற கவலை அவருக்கு. ஆனால் அண்ணாசாமி இருக்கக் கூடாது என்று பிள்ளையைப் பெற்றவர் கண்டித்துச் சொல்லவே, அவர் முகத்தைத் தொங்கப் போட்டுக் கொண்டு வெளியே வந்தார்.

பேச்சு வார்த்தைகள் இருபது நிமிடங்கள் தான் நடந்தன. இதற்கிடையில் பெண்ணைப் பெற்றவர் நான்கு நடைகள் வெளியே வந்து, தம் மனைவியோடு ஏதோ குசுகுசுவென்று பேசிவிட்டுச் சென்று விட்டார். அவர் அறையை விட்டு வெளியே வந்தபோதெல்லாம் அங்கு வெகு ஆவலாக நின்றுகொண்டிருந்தவர்கள், ''என்ன ஆயிற்று?'' என்று கேட்டார்கள். ''இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கில்லை. பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருக்கின்றன'' என்று மட்டும் அவர் பதில் சொன்னார். மணி 2.20 இருக்கும். கதவு திறந்தது. இருவரும் வெளியே வந்தார்கள்.

சென்னை, ஜூலை 8, மாலை 4 மணி

டிபனுக்குப் பிறகு நான்கு மணிக்குப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து நடந்தன. இப்பொழுது பேச்சில் அண்ணாசாமியும் கலந்து கொண்டார். இதே சமயம் கூடத்து அறையில் பெண்ணைப் பெற்ற அம்மாளும் பிள்ளையைப் பெற்ற அம்மாளும் தங்களுக்கிடையில் பேச்சு வார்த்தைகளைத் தொடர்ந்தனர். ஆனால் இரண்டு பேச்சு வார்த்தைகளும் பத்து நிமிடங்களில் முடிவடைந்தன. பேச்சு வார்த்தைகள் முறிந்து விட்டனவோ என்ற கவலை எல்லோருக்கும் ஏற்பட்டது.

சென்னை, ஜூலை 8, மாலை 5 மணி

வரதட்சிணை விஷயமாகத்தான் அபிப்பிராய பேதம் எழுந்திருக்க வேண்டும் என்றும், அது விஷயமாகப் பெண்ணைப் பெற்றவரும், பிள்ளையைப் பெற்றவரும் மீண்டும் ஐந்து மணிக்குக் கலந்து பேசுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இரு தரப்பினரும் தனித் தனி அறையில் தங்கள் மனைவிகளோடு பேச ஆரம்பித்ததிலிருந்து இருவரும் எதிராளிக்கு எந்த அம்சங்களில் விட்டுக் கொடுக்கலாம், எதில் விட்டுக் கொடுக்கக் கூடாது என்பதை ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள் என்று பட்டது.

சென்னை, ஜூலை 8, மாலை 6 மணி

இரு திசைகளில் பேச்சு வார்த்தைகள் நடந்து கொண்டிருந்த அந்த வீட்டில் திடீரென்று பரபரப்புக் காணப்பட்டது. பெண்ணைப் பெற்றவரும், அவர் மனைவியும் பேசிக் கொண்டிருந்த அறைக்கு அவசரமாக அடுத்த வீட்டு அண்ணாசாமி அழைக்கப்பட்டார். பிறகு அண்ணாசாமி அங்கிருந்து, பிள்ளையைப் பெற்றவரும், அவர் மனைவியும் இருந்த அறைக்குச் சென்றார். பிறகு அங்கிருந்து இங்கும், இங்கிருந்து அங்குமாகச் சென்றார்.


மணி ஆறரையாகி விட்டது. இன்னும் கால் மணி நேரத்துக்குள் ஏதாவது ஒரு முடிவு தெரிந்தாக வேண்டும். ஏனெனில் எப்படியிருந்தாலும் அன்றைய ஏழேகால் மணி வண்டிக்குப் பிள்ளையைப் பெற்றவர் திரும்பியாக வேண்டும். அதற்கான டிக்கட்டைப் பெண்ணைப் பெற்றவர் பத்து நாட்களுக்கு முன்பே க்யூ வரிசையில் நின்று வாங்கி ரிசர்வ் செய்து விட்டார்.

டாக்ஸி வாசலில் வந்து விட்டது. அதில் சாமான்களும் ஏற்றப்பட்டு விட்டன. எல்லோரும் கூடத்துச் சுவரில் உள்ள பெரிய கடிகாரத்தைப் பார்த்த வண்ணமாகவே இருந்தார்கள்.

ஆறே முக்கால் மணி. பிள்ளையைப் பெற்றவர்கள் இருந்த அறையிலிருந்து அண்ணாசாமி கோபத்தோடு வந்தார். பிள்ளையைப் பெற்றவரும், பெண்ணைப் பெற்றவரும் சேர்ந்து கூட்டறிக்கை விடவில்லையே என்று அவருக்கு ஏக கோபம்! எல்லாரும் 'என்ன ஆயிற்று' என்று முக பாவத்தால் கேட்டதற்கு அவர் ''நாமம்'' என்று மூணு விரல்களை நீட்டிக் காண்பித்தார். இவரைப் பின்தொடர்ந்து பிள்ளையைப் பெற்றவரும், அவர் மனைவியும் வந்தார்கள். ''போய்விட்டு வருகிறோம்'' என்றுகூடச் சொல்லிக் கொள்ளாமல் டாக்ஸியில் ஏறினார்கள். டாக்ஸிக்காரன் கையில் அவன் சத்தத்துக்காகப் பெண்ணைப் பெற்றவர் மூன்று ரூபாயை வைத்ததும், டாக்ஸி சிட்டாய்ப் பறந்தது!



''சார்! நம்ப 333-ஐ கொஞ்சம் கண்டிக்க வையுங்க! என் டைரியைப் பார்த்து அப்படியே காப்பி அடிக்க எழுதிட்டாரு!''



வட்டமேஜை

- எழுத்தாளர் வாழ்த்து
- ஒரு தவறு
- விமர்சனக் கட்டுரை
- அருமையான குறுநாவல்
- பாரபட்சம் ஏன்?

வெள்ளிவிழாப் போட்டியில் பரிசு பெற்ற நாவல் 'முள்ளும் மலரும்' தொடக்கத்தையும் சிறுகதை 'சவிதா'வையும் படித்து இன்புற்றேன். எளிய இனிய நடையில் அழகான வர்ணனைகளோடு தொடங்கியிருக்கும் திரு உமாச்சந்திரன் மங்கா என்ற பெண்ணை அவளுடைய குண விசித்திரங்களோடு அற்புதமாக அறிமுகம் செய்திருக்கிறார். ஸ்ரீமதி என். பத்மா நம்முடைய பழைய பண்புகளை மறவாமலே புதிய கொள்கைகளை ஏற்றுக்கொண்ட பாத்திரமான ஸவிதாவையும், அவளைப் புரிந்து கொண்டு தியாகம் செய்யும் கணவனையும் தம் சிறுகதையில் கொண்டு வந்திருக்கிறார்கள். இவர்கள் இருவருக்கும் போட்டியில் வெற்றி பெற்ற மற்ற எழுத்தாளர்களுக்கும் என் பாராட்டுக்கள்; வாழ்த்துக்கள்.

சென்னை
5–8–66

அகிலன்

★

பல்சுவைப் பகுதியில் ஒரு நண்பர் ஒரு வார்த்தையையே ஆங்கிலத்தில் தரையில் செல்லும் பொருளென்றும் தமிழில் வானில் செல்லும் பொருளென்றும் எழுதியுள்ளார். அவர் எழுதிய விடையாகிய 'கார்' என்பது தவறாகும்.

'கார்' என்ற பதத்துக்குத் தமிழில் கருமையான அல்லது 'கறுப்பு நிறமுடைய' என்றே பொருள். விளக்கத்துக்குக் காரிருள் கார்மேகம்போன்ற சொற்களைக் கவனிக்கவும்.

பம்பாய்
1–8–66

ரமணி

★

'**க**ல்கி' சிறுகதைப் போட்டித் தேர்வுக் குழுவில் மணிவிழாக் கண்ட எங்கள் பி. எஸ். ராமையா அவர்களை இணைத்துக் கொண்டதால் எங்களுக்குக் கிடைத்த பெரிய லாபம் அருமையான சிறுகதை இலக்கிய விமரிசனக் கட்டுரை!

துறையூர்
7–8–66

''பரதேசி''

★

வெள்ளிவிழா இதழில் வெளியான ஜெகசிற்பியனின் ''அவன் வருவான்'' குறுநாவலைப் படித்தேன்.

நிறைகுடமான அவரது எழுத்தை இக்கதையில்தான் முழுமையாக ரசித்தேன்.

சுர்க்கா ''ராம்சிங்''கின் கதையைப் படித்தபின்னர் நம்மிடையே அபூர்வமாக வந்து போகும் அவர்கள் மேல் மிகுந்த மதிப்பு உண்டாகிறது.

நாம் அவர்களுக்குத் தர வேண்டிய மதிப்பையும், அவர்களின் குண இயல்புகளையும் கதையில் வரும் பாத்திரங்களின் மூலம் மிக அழகாகச் சித்திரித்திருக்கிறார். கடைசி மூன்று வரிகளைப் படிக்கும்போது என் இதயம் மானசீகமாக ராம்சிங்குக்கு அஞ்சலி செய்தது.

நல்லதொரு குறுநாவலைத் தந்ததற்கு மிகவும் நன்றி.

சென்னை
6–8–66

என். சந்தானம்

★

பிரதம மந்திரி இந்திரா காந்தி அவர்கள் ''பொதுத் துறை வர்த்தகம் நன்றாகச் செயல்படவில்லை'' என்பதை அண்மையில் ஒப்புக்கொண்டார். இருப்பினும் பொதுத் துறைத் தொழிலகங்கள் சில லாபகரமாகச் செயல்படுவதாகச் சொல்லப்படுகிறது.

இந்த லாபத்தின் லட்சணம் எப்படிப்பட்டது என்பதை டாட்டா ஸ்தாபனத்தின் அதிபர் ஜே. ஆர். டி. டாட்டா தமது ஆண்டறிக்கை மூலம் வெளிப்படுத்தியிருக்கிறார். அவர் கூறுவதாவது:

''இந்நாட்டின் முக்கியமான 'மெஷின் டூல்' உற்பத்தி ஸ்தாபனமான எச். எம். டி. ஓர் அவசியமான பொதுத்துறை ஸ்தாபனம். பொறி இயல் துறை வளர்ச்சிக்கு அத்தியாவசியமான இந்த நிறுவனத்துக்கு எக்ஸைஸ் வரி, வேறு பல வரிகளின் சுமை கிடையாது. அவர்களது சரக்குகளுக்கு எந்த விலை வேண்டுமானாலும் கேட்கும் உரிமையைப் பெற்றிருக்கிறார்கள். ஆகையால், மூன்றே ஆண்டுகளில் அவர்களது விற்பனை 24.3 சதவிகிதம் உயர்ந்துள்ளது. 10.8 சதவிகிதம் நிகர லாபம் கிடைத்துள்ளது. லாபத்தில் 33 சதவிகிதம் மூலதனமாக்கும் வசதி அவர்களுக்கு உண்டு. இந்த நன்மைகளெல்லாம் 'டெல்கோ' ஸ்தாபனத்துக்குக் கிடையாது. இரண்டுமே திறமை மிக்க ஸ்தாபனங்கள் தாம் என்றாலும் வரி விகிதத்திலும் விலை நிர்ணயத்திலும் ஒன்றுக்கு உள்ள வசதியான நடத்தை மற்ற ஸ்தாபனத்துக்குத் தரப்படுவதில்லை. இம்மாதிரியான கொள்கைப் பாகுபாட்டை அரசாங்கம் எந்த நியாயத்தோடு செய்கிறது?''

டாட்டாவின் சொற்கள் அரசினரின் பாரபட்சக் கொள்கையை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக்குகின்றன.

சென்னை
7–8–66

மீனாட்சி கிருஷ்ணா

Edited printed & published by T. Sadasivam on behalf of Messrs. Bharathan Publications Private Ltd., at the Kalki Press, Kilpauk, Madras-10

வேங்கை வரிப் புலியையும் கட்டுப்பட வைப்பது எளிதே...

...ஆனால் வீறுகொண்ட மபத்லால் க்ருப் ஷர்ட்டிங்கு-
களுக்கு ஆட்படாதிருத்தல் கடினம். ஆண்மைக்
களையுள்ள உறுதியான அவற்றின் நெசவு நயத்தை
உணருங்கள். பாருங்கள் எடுப்பான கோல
வகைகளை. கட்டம் போட்டவை, கோடு
போட்டவை, சாதா அல்லது புள்ளி போட்டவை-
-எதுவாயினும் சரி, ஒரு முறை அணிந்தீர்களானால்
வேறெதிலும் உங்களுக்குத் திருப்தி ஏற்படாது!


மபத்லால் க்ருப்


பாப்லின்கள் மற்றும் ஷர்ட்டிங்குகள்

தவிர, 2x2 'டெரீன்/காட்டன்', பிரிண்டெட்
டெபிலைஸ்டு, மஃபினைஸ்டு மற்றும் ஸ்ட்ரெச்
தரங்களிலும் கிடைக்கின்றன.

நியு ஷராக் (ஷராக்) அஹமதாபாத்
நியுஷராக், நடியாத் • ஸ்டேண்டர்ட், பம்பாய்
ஸ்டேண்டர்ட், (நியு சைனா), பம்பாய்
ஸ்டேண்டர்ட் தேவாஸ் • ஸாஸூன், பம்பாய்
ஸாஸூன் (நியு யூனியன்) பம்பாய்
ஸூரத் காட்டன், ஸூரத்
மபத்லால் ஃபைன், நவ்ஸாரி

MAFATLAL GROUP





LPE-Aiyars M. 109 TM A

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon